பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 14 சனிக்கிழமை (31.10.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 339

## தேர்தல் ஆணையாளரிடம் ஐ.தே.க. வலியுறுத்து

# அகதிகள் அனைவரையும் மீளக்குடியேற்றிய பின்பே இரு தேர்தல்களையும் நடத்த வேண்டும்

## இல்லையேல் வடக்கில் வாக்குக்கொள்ளைதான் இடம்பெறும்

கொழும்பு, ஒக்ரோபர்31

வவுனியா அகதிமுகாம்களில் உள்ள வன்னி அகதிகள் அனைவரையும் மீளக் குடியமர்த்தி விட்டே ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அகதிகளைப் பார்ப்பதற்கு அரசு எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு அனுமதி மறுத்துள்ளநிலையில்- அகதிமுகாம்களுக்குள் வாக்குச் சாவடிகளை நிறுவித் தேர்தலை நடத்தினால் வன்னி மாவட்டத்தின் முழு வாக்குகளும் கொள்ளையடிக்கப்படும் என்றும் அக்கட்சி தேர்தல் ஆணையாளரிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## சமையல் எரிவாயு விலை நாளை முதல் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 31

சமையல் எரிவாயுக்களின் விலை நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் அதிகரிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் கடந்த ஒகஸ்ட் மாதத்தில் 511 அமெரிக்க டொலராக இருந்த செல் காஸின் விலை செப்ரெம்பர் மாதம் 589 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவே மேற்படி காஸ் விலை அதிகரிப்புக்குக் காரணம் என நுகர்வோர் பாதுகாப்பு

(20ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் இருக்கும் 78 இலங்கையர்களையும் இந்தோனேஷியா பலவந்தமாக இறக்காது

### அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 31

ஆஸ்திரேலியக் கப்பலில், இந்தோனேஷியத் துறைமுகத்தில் உள்ள 78 இலங்கையர்களையும் இறக்குவதற்குப் பலத்தைப் பயன்படுத்தப் போவதில்லையென

(20ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி நிலையங்களில் தோற்றிய மாணவர்களின் புலமைப் பரீட்சை வெட்டுப்புள்ளி 111 என அறிவிப்பு

### கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்கள் இருவர் 175 புள்ளிகளைப் பெற்றனர்

யாழ்ப்பாணம், ஒக். 31

நலன்புரி நிலையங்களில் இருந்து தரம்5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் வெட்டுப்புள்ளி 111 என பரீட்சைத் திணைக்களம் நேற்றிரவு அறிவித்தது.

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை வழங்குதல்; இலங்கையுடனான பேச்சுகள் முடிவு

### ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 31

'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையை வழங்குவது தொடர்பாக இலங்கையுடன் மேற்கொள்ளப்பட்டு வந்த பேச்சுகள் முடிவடைந்துவிட்டன என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேர்னார்ட்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

### உள்ளே

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான கணிதம்-I, ஆங்கிலம்-I,II, பாடங்களுக்கான மாதிரி வினாத் தாள்கள்.

## ஜனாதிபதி மஹிந்த இன்று திருப்பதிக்கு

சென்னை, ஒக்.31

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திருப்பதிக்கு இன்று செல்லத் திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி அவர் விசேட விமானம் மூலம் ஆந்திர மாநிலம் ரேணிகுண்டா விமான நிலையத்திற்கு இன்று முற்பகல்

(20ஆம் பக்கம் பார்க்க)

## தயாமாஸ்டரும் ஜோர்ஜ் மாஸ்டரும் அரசுக்கு எதிராகச் செயற்பட்டனரா?

### விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,ஒக்.31

முன்னாள் புலி உறுப்பினர்களான தயா மாஸ்ரர், ஜோர்ஜ் மாஸ்ரர் ஆகியோர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த போது அரசுக்கு எதிராகச் செயற்பட்டார்

(20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 49,713 மக்கள் இதுவரை இங்கு மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம்.ஒக்.31

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள் என 16,185 குடும்பங்களைச் சேர்ந்த 49, 713 பேர் நேற்றுவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

யாழ்.அரசஅதிபர் கே.கணேஷ் இத்தகவலை தெரிவித்தார்.

வவுனியா, மன்னார், புல்மோட்டை ஆகிய

(20ஆம் பக்கம் பார்க்க)

### புனித ஹஜ் யாத்திரை விவகாரம்;

## முஸ்லிம் அமைச்சர்களுக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக். 31

புனித ஹஜ் யாத்திரைப் பயணத்தை முஸ்லிம் அமைச்சர்கள் அரசியல் மயப்படுத்துகின்றமையை ஆட்சேபித்து நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

மருதானை ஜும்மா பள்ளிவாசலில் தொழு

(20ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பத்திரிகைத் துறையில் உங்களுக்கு ஆர்வம் உண்டா?



அதற்கான சந்தர்ப்பத்தை நாம் வழங்குகின்றோம்

- நீங்கள் ஜி.சி.ஈ.உயர்தரத்தில் சித்தி அடைந்திருந்தால் அதுவே போதும்.
- தமிழில் நல்ல தேர்ச்சியும் ஆங்கிலத்தில் சராசரி தேர்ச்சியும் அவசியம்.

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்

21 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பின் உங்கள் தகுதிகளையும் சிபார்சு செய்யக்கூடியவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டு

**உடன் விண்ணப்பிக்கவும்**

பிரதம ஆசிரியர்,
**உதயன் வெளியீட்டகம்**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி புளோறா செல்வமணி அஸ்பரி
(மணி அக்கா)



லோட்டன் வீதி மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி F.S. அஸ்பரி நேற்று (30.10.2009) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற S.J.அஸ்பரி யின் (ஜெயம் - ஓய்வுபெற்ற தபாலதிபா) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அல்பேட் - மங்களநாயகம் தம்பதியினரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற கணேஸ்தனபாலன் அஸ்பெரியின் அன்புத் தாயாரும் திருமதி ஏஞ்சலீன் அஸ்பரியின் (லண்டன்) அன்பு மாமியாரும் திருமதி லீலா எமர்சனின் (கனடா) பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு இன்று (31.10.2009) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு லைமன் லேன், லோட்டன் வீதி, மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக மானிப்பாய் பிப்பிலி கிறீஸ்தவ கல்லறைத் தோட்டத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தொ.பே.இல. 0777865535 (90481) திருமதி ஈவா ஞானப்பொன்ராஜா.


# எம்.டீ.குணசேன
# புத்தக மலிவு விற்பனை

இப்பொழுது
நவம்பர் 01 ஆம் திகதி
வரை
நீடிக்கப்பட்டுள்ளது.

இடம்:
யாழ்.மத்திய கல்லூரி

நேரம்:
காலை 8.30 - மாலை 6 மணிவரை

எல்லாப் புத்தகங்களுக்கும் விசேட
விலைக்கழிவு உண்டு.

தொடர்புகளுக்கு:
நியாசி 0778208108
சுரேஷ் 0776574986

(இ/562039)



## 5 ஆம் ஆண்டு - 2010 புலமைப்பரிசில் வகுப்பு

ஆசிரியர்:- க.கலாமோகன்
(B.A., Dip. in Teach)

கையேடுகள், மாதம் இரு பரீட்சைகள், கடந்தகால வினாப்பயிற்சி, விசேட பரீட்சைகள், பாடங்கள் சார்ந்த குறிப்புகள்.

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
01.11.2009 - ஞாயிறு

★ BARATHY - சித்தன்கேணி - 9 am
★ இணுவில் பொருளியற் கல்லூரி - 3.30 pm

உங்கள் அனுமதிகளை இரு இடங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.



## மாருதிக்கார் விற்பனைக்கு

மாருதிக்கார் விற்பனைக்கு முதலில் 550,000/= செலுத்தி மிகுதியை மாதாந்தம் செலுத்தலாம்.
"குணம் ஸ்ரோர்ஸ்,
இல.517, வைமன் வீதிச்சந்தி,
யாழ்ப்பாணம்.
(சனி, ஞாயிறு, திங்கள் சந்திக்கலாம்)

(இ/562033)



## காணி தேவை

பலாலி வீதியில் திருநெல்வேலிக்கும் கோண்டா விலுக்குமிடைப்பட்ட பிரதேசத்தில் 12 தொடக்கம் 15 பரப்புக் கொண்ட வெற்றுக் காணி உடனடியாகத் தேவைப்படுகின்றது.

விற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 07222 56062
காரியாலய எண் 0112573221


### விடுவிக்கப்பட்ட உள்ளூராட்சி ஊழியர்களை சமுகமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 31

உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றி இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்து தற்போது யாழ்.மாவட்டத்தில் விடுவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர், ஊழியர்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் கேட்டுள்ளார். (1)

### கூடைப்பந்தாட்டத் திடல் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

கொக்குவில் இந்துக்கல்லூரியில் மின்னொளிவசதியுடன் அமைக்கப்பட்ட கூடைப்பந்தாட்டத் திடல் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இரவு 7 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் மைதானத்தினை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைக்க உள்ளார்.

இதன் போது திடலில் காட்சிப் போட்டிகள், கலை நிகழ்வுகள் என்பனவும் நடைபெறவுள்ளன. (10)

## கண்ணீர் அஞ்சலி



எமது (யா/வட்டு மேற்கு அ.மி.த.க.) பாடசாலையின் முன்னை நாள் அதிபர்

### கிருஸ்ணபிள்ளை சிதம்பரநாதன்

அவர்கள் 28.10.2009 புதன்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அவரது மறைவையிட்டு அன்னாரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம் மேலும் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**யா.வட்டு.மேற்கு அ.மி.த.க.பாடசாலை** (இ/562031)

## இதய அஞ்சலி



எமது சக மாணவன் மதியூகன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி விமலசிங்கம் சந்திரோதயம்

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(90485) **HNDE 2nd year (Evening) A.T.I**

## மரண அறிவித்தல்கள்

### முருகன் குழந்தை (ராகேல்)



முருகன் குழந்தை (ராகேல்) 29.10.2009 கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (31.10.2009) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஊழியர்கள், சபையோர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்: பாராசிங்கம் (மகன்)
(தேவஊழியர் -ஜோன்),
மற்றும் சகோதர, சகோதரிகள்,
பேரப்பிள்ளைகள்

கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (90484)

### கந்தையா சுபாகரன்
(முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், வேலணை, யாழ்ப்பாணம்)



நெடுந்தீவு மேற்கு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 96/1, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சுபாகரன் 27.10.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் இராசம்மா தம்பதியினரின் தவப்புதல்வரும், பரமநாதன் - காலஞ்சென்ற கமலாசனம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், ஜெயகலா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வேலணை) வின் அன்புக் கணவரும், கீர்த்தனா (தரம் - 11, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), தாமினா (தரம் - 9, யாழ்.இந்து மகளிர் கல்லூரி), அபிநாத் (சென்.ஜோன்ஸ் முன்பள்ளி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நவநீதனின் (கனடா), அருமைச் சகோதரனும், சிவகுமாரின் (வேலு) சகலனும், ஜெயபாமினி, கௌரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கரிகரன், ஜெயகரன், றஜிகரன் அசோக்குமார், விதுஷன், பிரகாஸ், துசாந் ஆகியோரின் பாசமிகு பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
96/1, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். மனைவி,
தொ.பே.0217912426 (90482) பிள்ளைகள்.




## "ஒளி ஏற்றுவோம்"

இசைமாலைப் பொழுது (கிறிஸ்துபாடல்கள்)
இடம்:- யாழ்.மரியன்னை பேராலய முன்றல்
காலம்:- இன்று (31.10.2009) சனி மாலை 6 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(90476)
விளம்பர அன்பளிப்பு:
கிளறீஷியன் சபை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நீக்கப்பட்டால் அது தண்டனையா? உடன்பாட்டு மீறலா?

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதிக்கான வரிக் கட்டணம் ஏதுமின்றியே தைத்த ஆடைகளை ஏற்றுமதி செய்வதற்கு வசதியாக இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகை நீக்கப்படுமா என்ற சந்தேகம் வலுத்து வருகையில், இது தொடர்பான வாதப்பிரதிவாதங்களும் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளன.

இத்தகைய விசேட வரி விலக்கு சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை உட்பட உலகின் பதினாறு வறிய நாடுகளுக்கு வழங்கியுள்ளது. ஏதேனும் ஒரு காரணத்திற்காக இச்சலுகையை இலங்கைக்குத் தொடர்ந்து வழங்காமல் ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்துமானால், இந்தச் சலுகையைக் கோட்டைவிட்ட முதல் நாடு என்ற 'தனிப் பெருமை' இலங்கைக்குக் கிட்டும்.

இலங்கை நிலைமை குறித்த தனது விசாரணை அறிக்கையை அண்மையில் பகிரங்கப்படுத்திய ஐரோப்பிய ஒன்றியம், இலங்கையில் சித்திரவதை, கடத்தல், அரசுடன் தொடர்புடைய துணைப் படைக் குழுக்களுக்கு சிறுவர்களைச் சேர்த்தல், அவசரகால நிலைமையைப் பயன்படுத்தி அரசியல், சிவில் உரிமைகளை அடக்குதல் போன்ற அத்துமீறல்கள் அளவுக்கு அதிகமாக இடம்பெற்று வருகின்றன என்று அதில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அத்துமீறல்களுக்குத் தாராளமாக அனுமதித்து நிற்பதன் மூலம், இவ்விடயங்களை ஒட்டிய பல்வேறு சர்வதேசப் பட்டய ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் தனது கடப்பாட்டை நிறைவு செய்ய இலங்கை தவறிவிட்டது என்று ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஆனால், இந்தக் காரணத்துக்காக இலங்கைக்கான விசேட வரி விலக்குச் சலுகையை ரத்துச்செய்யவேண்டும் என்ற திசையை நோக்கி ஐரோப்பிய ஒன்றியம் நகர முற்படுவது குறித்தும் சர்ச்சைகள் கிளப்பப்படுகின்றன.

ஒரு நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களுக்காக, அந்நாட்டின் கைத்தொழில் துறையைத் தண்டிப்பதா - அதுவும் வருமானம் குறைந்த மட்டத்தைச் சேர்ந்த பல லட்சம் பேர் தமது அன்றாட சீவியத்துக்காகத் தங்கியிருக்கும் ஒரு துறையை சாகடிப்பதா - என்றெல்லாம் விமர்சகர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஆனால், இலங்கைக்கான 'ஜி.எஸ்.பி.' வரிவிலக்குச் சலுகையை நிறுத்த எத்தனிக்கும் ஐரோப்பிய ஒன்றியமோ, இலங்கை தொடர்பில் தான் எடுக்க உத்தேசிக்கும் நடவடிக்கை இலங்கையைத் தண்டிக்கும் செயலே அல்ல என்று வாதிட்டு வியாக்கியானம் கூறுகின்றது.

2005 இல் மேற்படி வரிவிலக்குச் சலுகையைத் தனக்கு வழங்கும்படி கோரி இலங்கை விண்ணப்பித்த போது, மனித உரிமைகள், சிவில் உரிமைகள், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேசப் பட்டயங்களை மதித்து நடைமுறைப்படுத்தும் என்ற உறுதிமொழியை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கியிருந்தது. அந்த உறுதிமொழியின் மீதே இலங்கைக்கு அந்த விசேட வரிவிலக்கு வசதியை - சிறப்புரிமையை - வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முன்வந்தது. ஆனால் இப்போது இவ்வாறு தான் உறுதியளித்த பல்வேறு சர்வதேசப் பட்டயங்கள் தொடர்பான விவகாரத்தில் அந்தப் பட்டயங்களை இலங்கை வெளிப்படையாக - அப்பட்டமாக - மீறி வருகின்றது. ஆகவே, 'ஜி.எஸ்.பி.' வரிவிலக்கு சலுகையைப் பெறுவதற்கான உடன்பாடு தொடர்பான ஒப்புக்கொண்ட ஏற்பாடுகளை இலங்கை மீறிவிட்டது என்பதே உண்மை. உடன்பாட்டை இலங்கை மீறியதால், அந்த உடன்பாட்டின் கீழ் தனக்குக் கிட்டிய சலுகையை இலங்கை இழக்கின்றதே தவிர, இது மனித உரிமை மீறல்களுக்குத் தாராளமாக அனுமதித்து நிற்கும் இலங்கைக்கு அதன் காரணமாக வழங்கப்படும் தண்டனையே அல்ல என்று ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் விளக்குகின்றனர்.

இவ்விடயத்தில் ஐரோப்பிய ஒன்றிய வட்டாரங்கள் சுட்டிக்காட்டும் இன்னும் சில விடயங்கள் கவனிக்கத்தக்கவை.

''இந்தச் சலுகையை இலங்கை இனித் தொடர்ந்து பெற வேண்டுமானால் - இந்த வாய்ப்பு - நீடிக்கப்பட வேண்டுமானால் - இலங்கை இனியும் வெறும் வாய் வாக்குறுதிகளை வழங்கிக்கொண்டிருப்பதோடு அடங்கிவிடக் கூடாது. உறுதியான செயற்பாட்டிலும் அவற்றை வெளிப்படுத்திக் காட்டவேண்டும்.'' - என்று ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தெற்காசிய உறவுகளுக்கான பிரதிநிதிகள் குழுவின் தலைவர் ஜீன் லம்பேர்ட் வெளிவெளியாகவே கூறிவிட்டார்.

இதேசமயம், இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவின் தலைவர் பேர்னாட் ஸ்வேஜ் தெரிவித்த ஒரு விடயமும் கவனிக்கத்தக்கது.

''இந்த வரிச்சலுகையை நீடிப்பது தொடர்பான பேச்சுக்கான காலம் முடிவடைந்து விட்டது. இந்த விவகாரத்துக்காக (ஏனைய தரப்புகளிடம்) பிரசாரம் செய்யும் முயற்சியை விட்டுவிட்டு, நேரடியாக விடயத்தைக் கவனித்துத் திருத்தங்களைச் செய்வது குறித்துப் பார்ப்பது நல்லது என்பதை அவர்களுக்கு (இலங்கைக்கு) சிபார்சு செய்ய விரும்புகிறோம்.'' - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகை தொடர்ந்து நீடிக்கப்பட வேண்டும் என - அதன் மூலமான பொருளாதார வளம் கிட்டவேண்டும் என - இலங்கை நினைக்குமானால், அந்த வசதியை நீடிக்குமாறு கோரி பல தரப்புகளிடம் பிரசாரம் செய்யும் எத்தனத்தில் தொடர்ந்து ஈடுபடுவதை விட்டு விட்டு, அந்தச் சலுகை நீடிப்பதற்கான நிபந்தனைகளை - மனித உரிமைகள் மற்றும் அரசியல், சிவில் உரிமைகள் தொடர்பான சர்வதேச பட்டய ஏற்பாடுகளை முழு அளவில் நடைமுறைப்படுத்துவோம் என்ற தனது உறுதிமொழியை - செயலில் நிறைவேற்றுவது குறித்து அது கரிசனை காட்டவேண்டும். காட்டினால் பயன் உண்டு. செய்வார்களா?

# யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்குத் தினமும் 2,400 கிலோ கடலுணவு வகைகள் ஏற்றுமதி

## ஆனால் மேலதிகமானவற்றை உடனுக்குடன் அனுப்ப முடியவில்லை

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்ப்பாணத்திலிருந்து தென் பகுதிக்குத் தினமும் 'கூலர்' வாகனங்களில் சுமார் 2 ஆயிரத்து 400 கிலோ கடலுணவுகள் ஏற்றுமதியாகின்றன. ஒவ்வொரு தடவையும் கடலுணவுகளை ஏற்றிச்செல்லும் ஒவ்வொரு வாகனத்துக்கும் 40 ஆயிரம் ரூபா செலவாகின்றது.

கடலுணவுகளுடன் கூலர் வாகனங்கள் வழமையாகக் காலையிலேயே யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுகின்றன. இதனால் அதிகாலை 4 மணிக்கு குருநகர் சோதனைச் சாவடிக்கு வாகனத்தை அனுப்பிப் படையினர் சோதனையிட்ட பின்னர் காலை 7 மணியளவிலேயே நாவற்குளிக்கு வாகனங்களை அனுப்பவேண்டியுள்ளது. இதனால் ஒவ்வொருநாளும் பிடிக்கப்படும் மேலதிக மீன்களை அன்றையதினமே ஏற்றுமதி செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. அந்தக் கடலுணவுகள் மறுநாள் ஏற்றுமதியாகின்றன. இதனால் கடலுணவுகள் பழுதடைய வாய்ப்புள்ளது.

யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் சி.நவரட்ணம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யாழ்.குடாநாட்டுமீனவர்கள் தமது மீன்பிடி மற்றும் ஏற்றுமதி தொடர்பாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுடன் இன்று கலந்துரையாடவுள்ளோம்.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அமைச்சரின் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம் பெறும்.

கடலுணவுகளைப் பழுதடையாது சந்தைப்படுத்தல் போக்குவரத்துச் செலவைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாக கடலுணவு ஏற்றுமதியாளர்களுடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடப்பட்டது.

ஒவ்வொருநாளும் ஒரு கூலர் வாகனத்தில் அடங்கக்கூடியதாக 140 பெட்டிகளில் சுமார் 2,400 கிலோ கிராம் கடலுணவுகள் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஒவ்வொரு தடவையும் கடலுணவு ஏற்றிக்கொண்டு செல்லும் ஒவ்வொரு வாகனத்துக்கும் சுமார் 40,000 ரூபா செலவாகின்றது.

1985ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் சுமார் 14 ஐஸ் தொழிற்சாலைகள் இயங்கின. தற்பொழுது ஒன்றுமில்லை.

எனவே காலை 7 மணிக்கு கூலர் வாகனங்களை யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பாமல் பிற்பகல் 3 மணியளவில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமாயின் பிடிக்கப்படும் மீன்களை அன்றையதினமே ஏற்றுமதி செய்யமுடியும். இது தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளோம் - என்றார். (50-7)

# ஏ-9 வீதியூடாகப் பொருள்களை எடுத்து வருவதற்கு யாழ்.கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலகு கடன் வசதி

## 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்யத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக்.31

குடாநாட்டிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏ-9 வீதியூடாகப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு இலகு கடன் திட்டத்தின் கீழ் 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

குடாநாட்டுக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோருக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் போன்ற வற்றின் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் மேற்படி சங்கங்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்கும் முகமாக யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, கூட்டுறவு ஆணையாளர், ஆளுநரின் செயலாளர், யாழ்.மாவட்ட பிரதி கூட்டுறவு ஆணையாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட மேற்படி சங்கங்கள் முகங்கொடுத்து வருகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருகின்ற தொடர் முயற்சியின் பயனாக மேற்படி சங்கங்களின் கடன்களை இரத்துச் செய்வதற்கும் இலகு கடன் வசதிகளை வழங்குவதற்கும் சேதமடைந்துள்ள கட்டடங்களைப் புனரமைப்பதற்கும் உடனடி நடவடிக்கைகள் எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு நவீனரக இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதென்றும், விசேட தேவைகளை இனங்கண்டு அந்தச் சங்கங்களுக்கு கூடிய அவிலான இலகு கடன் வசதிகளை வழங்குவதென்றும், பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் மேம்பாட்டிற்கு 53 மில்லியன் ரூபா நிதியை வழங்குவதென்றும், அதற்கான திட்ட மதிப்பீடுகள் யாவும் கூடிய விரைவில் வழங்கப்பட்டு இவ்வருட இறுதிக்குள் மேற்படி நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுமென்றும் இணக்கம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (50-224)

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி | 15 | 01.11.2009 |
| | | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | | சதுர்த்தசி |
| | | பி.இ. 02.08 வரை |
| நட்சத்திரம்: | | ரேவதி |
| | | மு.இ. [illegible] வரை |
| [illegible] | | [illegible] வரை |
| ராகுகாலம்: | | 04.33 -06.03 வரை |

# குருதிக் கொடையாளர் கௌரவிப்பு இன்று கலைத்தூது கலையகத்தில்

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்துவரும் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கடந்த 2008ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாண்டு வரை முதல் முறையாக 10, 20 தடவைகளுக்கு மேல் இரத்ததானம் செய்த தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இரத்த வங்கியிலும், நடமாடும் இரத்ததான முகாம்களிலும் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்யும் ஏனைய தன்னார்வக் குருதிக் கொடையாளர்களை மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வைத்திய அதிகாரி இ.சிவசங்கர் கேட்டுள்ளார். (50-201)



கடந்த 21ஆம் திகதி சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் இரத்ததானம் செய்தபோது எடுக்கப்பட்ட படம். இதில் ஆசிரியர்கள், மாணவர்கள், அருட்தந்தையர்கள் என 272 பேர் இரத்ததானம் செய்தனர். இவ்வாண்டு தேசிய ரீதியில் அதிகளவானோர் இரத்ததானம் செய்த நிகழ்வும் இதுவாகும்.

# இரண்டு தினங்கள் மின்தடை

யாழ்ப்பாணம், ஒக்.31

அவசர திருத்த வேலைகள் காரணமாக இரண்டு தினங்களுக்கு காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின்சார விநியோகம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை, அராலி, மானிப்பாய், கட்டுடை, சங்குவேலி, உடுவில், மருதனார்மடம், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களிலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களிலும் மின்சார விநியோகம் தடைப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூறு விலை

எமது சங்கத்திற்கு கறவைப்பசு உணவு உற்பத்திக்கு பின்வரும் மூலப்பொருள்கள் தேவை. கூறு விலை சமர்ப்பிப்பவர்கள் மூலப்பொருள்களின் மாதிரியுடன் 05.11.2009 ஆம் திகதிக்கு முன் கூறுவிலையை அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

1. தேங்காய்ப் பிண்ணாக்கு 5,000 கிலோ
2. வெள்ளைப் புழுங்கல் தவிடு 10,000 கிலோ
3. சிவப்புப் புழுங்கல் தவிடு 10,000 கிலோ

பொதுமுகாமையாளர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (C/562026)

## கறவைப்பசு உணவு விலை குறைப்பு

எமது சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் கறவைப்பசு உணவின் விலை 01.11.2009ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

50 கிலோ பொதி ரூபா 1,500.00
25 கிலோ பொதி ரூபா 750.00

பொதுமுகாமையாளர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி/562025)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வட இந்து மகளிர் கல்லூரியில் 2009 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த அல்வாயைச் சேர்ந்த சிறிதரன் - சுவர்ணா தம்பதியினரின் செல்வப் புதல்வி சி.அபிவர்ணா அவர்களை நாம் மனமார வாழ்த்துகின்றோம். கல்வியில் பெற்றிருக்கும் ஓர் அடைவு மட்டத்தினை எட்டுவதற்கு நற்பணியாற்றிய சகல ஆசிரியர்களையும் பாராட்டுவதோடு மென்மேலும் நீடு நலமோடு கல்வியிலும் சிறந்து விளங்க இறைமகன் இயேசுவை வேண்டுகின்றோம்.

கல்வியில் வளம் பெற வாழ்த்தும்
கே. ஆர். திருத்துவராஜா (தாத்தா) குடும்பத்தினர்,
தி.திலீபன்(மாமா குடும்பத்தினர்),
தி.டெனிஸ்குமார்(மாமா குடும்பத்தினர்),
அ. ரஜீவன் (சித்தப்பா குடும்பத்தினர்)

"றோஸ் பவனம்"
அல்வாய் வடமேற்கு,
அல்வாய். (90470)

## Astro Educational Consultant

Student Visa நாளை ......
Spot Interview & Consultancy

இடம் : சிவபூமி பாடசாலை,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

காலம் : 01.11.2009 ஞாயிறு மு.ப. 9.30

Call:- 0212264705

விண்ணப்பப் படிவங்கள் அனைத்து புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன.

(சி/562009)


## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் தற்காலிக இணைப்பில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றிய அமரர் கந்தையா சுபாகரன் அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சியடைகிறோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரதேச செயலரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.
(90471)

## கண்ணீர் அஞ்சலி



இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவியும் நீண்டகால ஆசிரியையுமான
திருமதி சிவபாக்கியம் குமாரசாமி
அவர்கள் லண்டனில் காலமானதை அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/இராமநாதன் கல்லூரி,
மருதனார்மடம். (சி/562034)

# முல்லை., கிளிநொச்சி ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம்.ஒக்.31

தென்மராட்சி பிரதேச நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்ட உத்தியோகத்தர்களின் ஒக்ரோபர் மாத சம்பளம் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளது.

சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர் (நிதி) பிரிவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (1-207)

# வெளிவாரி பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்.ஒக்.31

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகினால் 2008ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கலைமாணி பகுதி II -2004, 2005 இற்கான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இந்தப் பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தொடக்கம் பரீட்சைப் பெறுபேறுகளை வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என வெளிவாரி பட்டப் பரீட்சைகள் அலகின் இணைப்பாளர் க.சிவராஜா அறிவித்துள்ளார். (1-10)


## North Aquarium

வளர்ப்பு கலர் மீன்கள், மீன் தொட்டி, மீன் தொட்டி உபகரணங்கள், லவ்பேட்ஸ், லவ்பேட்ஸ் கூடு என்பனவற்றை பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு:- North Aquarium, Odahharai,
Point Pedro.
T.P : 0779048404 (90477)

## வீடு, வளவு விற்பனைக்கு

கண்டுக்குளி குருசோ வீதியில் சகல வசதிகளையும் கொண்ட ஒரு வீடு வளவும், கண்டுக்குளி விதானையார் வீதியில் ஒரு வீடு வளவும், யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதியில் மாடி வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0776146434, 0213008577 (90449)

## கார் விற்பனைக்கு

4 ஸ்ரீ ---- மைனர்கார் விற்பனைக்குண்டு
தொடர்பு:- ஜெ.தயாளன்,
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை
T.P: 0716377169 (சி/562008)

## தவறிவிட்டது

சொலமன் சாமுவேல் சஜீவன் இல. 11, கோயில் வீதி, ஒழுங்கை, யாழ்ப்பாணம். என்னும் முகவரியுடைய வாகனப்பத்திரமும் லைசன்சும் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் 817, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
T.P: 0775839881 (90450)

## கடை வாடகைக்கு

கடை வாடகைக்கு விடப்படும்
தொடர்பு:-S.V நடராஜா
43, பலாலி றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (90461)

## மணமக்கள் தேவை

31.08.76 இல் பிறந்த 12இல் செவ்வாய் 39 3/4 இல் பாவமுடைய MBBS டாக்டருக்கு படித்த மணமகனுக்கு அழகான மணமகள் தேவை சீதனம் எதிர்பார்க்கபடமாட்டாது.
13.5.77இல் பிறந்த 7இல் செவ்வாய் 84 1/4 பாவமுடைய C.I.M.A accountant க்கு படித்த மணமகனுக்கு அழகான மணமகள் தேவை.
10.03.80இல் பிறந்த உதயத்தில் செவ்வாய் 96 பாவமுடைய B.sc (Hones) க்கு படித்த மணமகனுக்கு அழகான மணமகள் தேவை.
69இல் பிறந்தவர் லண்டனால் வந்துள்ள கிறிஸ்தவ மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை
16.09.78 இல் பிறந்த 7இல் செவ்வாய் பாவம் 25 3/4 இஞ்சினியருக்கு பட்டதாரி அழகான மணமகள் தேவை.
26.07.79 இல் பிறந்த 4இல் செவ்வாய் 86 பாவமுடைய லண்டன் மணமகனுக்கு அழகான மணமகள் தேவை.
4.12.82இல் பிறந்த 41 1/2 பாவமுடைய கனடா டாக்டர் மணமகளுக்கு டாக்டர், இஞ்சினியர், Msc. எக்கவுண்டன் மணமகன் தேவை.
85 இல் பிறந்த 12இல் செவ்வாய் 63 பாவமுடைய msc கனடா மணமகளுக்கு படித்த எக்கவுண்டன், இஞ்சினியர் மணமகன் தேவை.
மேலும் டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரிகள், லிகிதர்கள், வர்த்தகர்கள் பாவம் கூடிய, குறைந்த செவ்வாய்க் குற்றமுள்ள பட்டதாரி மணமக்களும் வெளிநாட்டில் பிரஜா உரிமை பெற்ற மணமக்களும் சைவ போசனமுள்ள மணமக்களும் எம்மிடமுள்ளனர்.
தொடர்பு
கமலக்கண்ணன் திருமணசேவை
இல, 171/7 மனோன்மணி அம்மன் கோயிலடி,
நல்லூர்.
0214920266, 0776070862 (90154)

## செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் விளையாட்டுக் கழகம்,

I.O.M நிறுவனத்தால் அமைக்கப் பட்ட வலுவற்றோருக்கான கணனிப் பயிற்சிக் கூடம் மற்றும் உடல்நல வலுவூட்டற் பயிற்சி சாதன மண்டபத் திறப்புவிழா

இடம்: தலைமைக்காரியாலயம், யாழ்.மாவட்டம் 16/2 சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம்.
காலம்: நாளை (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை, மு.ப. 10.00மணி

பிரதம விருந்தினர்
* திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா (முதல்வர்)
* திரு.க.கணேஷ் (அரச அதிபர்)
* திரு. நிக்கொலின் சாமிநாதன் (H.S.O) (தலைமை அதிகாரி, I.O.M யாழ்ப்பாணம்.)

சிறப்பு விருந்தினர்
* திரு.பா.செந்தில்நந்தனன் (பிரதேச செயலர்)
* திரு.வி.எஸ்.மகேந்திரன் (அதிபர்,நவீல்ட் பாடசாலை, கைதடி)

செவிப்புலன் வலுவற்றோர்
புனர்வாழ்வு நிறுவனம் (ROOD),
விளையாட்டுக்கழகம். (90472)
செயலாளர்
இ.ஓங்காரரூபன்.


## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றும் ப.பாஸ்கரன் அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி பழனி தங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குபற்றுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி. (சி/562038)
பிரதேச செயலக
நன்புரிச் சங்க உறுப்பினர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### தங்கராசா மதியழகன் (இந்திரன்)



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா மதியழகன் 27.10.2009 அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார் தங்கராசா-அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், செல்லத்துரை-இராசமணி தம்பதியினரின் அன்பு மருமகனும், பங்கயற் செல்வியின் அன்புக்கணவரும், மதுசன், அனுசன், மதுசா ஆகியோரின் அன்புத்தந்தையும், பாபு, ரூபி, ராஜி, சிறி, சசி, ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியா, ராஜேந்திரம், மனோ, சுரேஸ், கேதீஸ், கிருஷ்ணபவானி, இளந்திரையன் ஆகியோரின் மைத்துனரும், சுதா, பரமலிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2009) சனிக்கிழமை பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

7ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு (90472)
தகவல்:
பரமலிங்கம், கிருஷ்ணபவானி
(கிருஷா மைத்துனி)

### கந்தசாமி ஐயாத்துரை



மூளாய் தெற்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஐயாத்துரை (25.10.2009) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-சின்னம்மா தம்பதிகளின் மகனும், பூமணியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து-இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், பேரின்பநாயகம், திருலோகநாதன், மனோகரன் (கனடா), மாலதி (கனடா), புவனேந்திரன், கோமதி (கனடா), ஜெயமதி (கனடா), குலேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சேனாதிராசா (அமரர்), கணேசமூர்த்தி (அமரர்), காங்கேசு, இராமநாதன், ஞானாம்பிகை (அமரர்), பாலச்சந்திரன், தேவகுலசிங்கம் (அமரர்) ஆகியோரின் சகோதரனும், சிவபாக்கியம், தற்பரானந்தன், நவமணி ஆகியோரின் மைத்துனரும், தவமணிதேவி, இன்பறோசா, சாந்தகுமாரி, நவரட்ணம், சிவசக்தி, இராஜேந்திரன், ஸ்ரீரகுநாதன், பங்கயற் செல்வி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2009) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் தெற்கு, சுழிபுரம் (90480)
தகவல்:
குடும்பத்தினர்.

### சோமசுந்தரம் வேலாயுதபிள்ளை (கணேஷ்)



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் பசறை, பதுளையை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் வேலாயுதபிள்ளை நேற்று (30.10.2009) வெள்ளிக்கிழமை பசறையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் -இரத்தினம்மா தம்பதியினரின் அன்பு மகனும், தேவமனோவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சதீஸ் மற்றும் ரூபன், விதுப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரி, இராசரத்தினம், பூபாலசிங்கம், அன்னலட்சுமி, ஸ்ரீஸ்கந்தராசா, பாலசுப்பிரமணியம், செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பசறை, பதுளையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகபூரணி அம்மன் வீதி,
கோண்டாவில் கிழக்கு.
T.P: 0214590802 (90469)
தகவல்:
சு.கமலநாதன் (மைத்துனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமல் ராஜபக்ஷ வெற்றிக்கிண்ணத்தை பாடும்மீன் விளையாட்டுக்கழகம் கைப்பற்றியது

வலி.வடக்கு, ஒக்.31

நாமல்ராஜபக்ஷவின் 'இளைஞர்களுக்கான நாளை' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட உதைபந்தாட்டக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகமும் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகியதும் எதிரணியினரின் கோல்கம்பத்தை சென்.நீக்கிலஸ் அணியினர் ஆக்கிரமித்தவண்ணம் இருந்தனர்.

பந்தைக் கோல் கம்பத்தை நோக்கி நகர்த்திச் சென்ற போதிலும் கோல்களைப் பெற முடியவில்லை. சென்.நீக்கிலஸ் வீரர்கள் மிகவும் சாதுரியமாக விளையாடி ஒரு கோலைப் பெற்றுக்கொண்டார்கள். இத்துடன் முதல் பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்பெற வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கிய போதிலும் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் மிகவும் உற்சாகமாக விளையாடி தனது முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டது.

போட்டி சமநிலை அடைந்ததைத் தொடர்ந்து இரு அணிகளும் மிகவும் உற்சாகத்துடன் விளையாடின.

எனினும் மேலதிக கோல்கள் எதனையும் போட்டி முடிவடையும் வரை இரு அணிகளினாலும் பெற முடியாத நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்குச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. பாடும்மீன் விளையாட்டுக்கழகம் 4:3 என்ற கோல்கள் அடிப்படையில் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றிபெற்று நாமல் ராஜபக்ஷ வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது. (50-86)



'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பு நடத்திய 6 பேர் கொண்ட அணிகள் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 'ஸ்ரார் போய்ஸ்' அணி சம்பியனாகியது. வெற்றிக்கிண்ணத்துடன் 'ஸ்ரார் போய்ஸ்' அணி வீரர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களின் அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ள ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்ரல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதும். (50-23)

## பருத்தித்துறை மெதடிஸ்த மாணவிகள் வெற்றி

உதயன் பத்திரிகையின் ஊடக அனுசரணையுடன் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்திய சதுரங்கச் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்றோரின் விவரம் 28ஆம், 29ஆம் திகதிகளில் உதயனில் வெளிவந்தது.


இந்தப் போட்டியில் 13 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் வெற்றியீட்டிய கே.மாதுமை, எஸ்.புவிதா, என்.ரம்யா ஆகி யோர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண் கள் உயர்தரப் பாடசாலை மாணவிகளாவர். 28ஆம் திகதி உதயனில் அவர்களுடைய பாடசாலை மானிப்பாய் மகளிர் கல்லூரி எனத் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. (50)

## 'ருவென்ரி-20' இறுதியாட்டம்

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் அமரர் பி.எஸ்.குமாரசுவாமி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான யாழ்.மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 'ருவென்ரி-20' கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

ஜொலிஸ்ரார் வி.க எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம். (50-23)




## 13 வயது பிரிவினருக்கான உதைபந்தாட்டம்; சென்.பற்றிக்ஸ் அணி சம்பியன் வென்றது

வலி.வடக்கு, ஒக். 31

யாழ்ப்பாணம் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெற எடுத்த முயற்சிகள் கைகூட வில்லை.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் பெரும் சவாலாக அமைந்தது. கோல்கள் பெற வேண்டும் என்ற நெருக்கடிக்குள் முகம் கொடுத்து இரு அணிகளும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய 4ஆவது நிமிடம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஒரு கோலைப் பெற்று தன்னை சுதாகரித்துக் கொண்டது.

ஆட்ட இறுதியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் யாழ்.மத்திய கல்லூரியை வெற்றி பெற்று கோட்டச் சம்பியனாகியது.

## ஹென்றிஸ் - சென்.ஜோன்ஸ் அணிகளின் சிநேகபூர்வ ஆட்டம்

வலி.வடக்கு, ஒக்.31

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியின் முடிவுகள் வருமாறு:

14 வயதுப் பிரிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் போட்டி சமநிலையில் முடிந்தது.

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 2:0 என்ற கோல்கணக்கில் சென். ஜோன்ஸ் கல்லூரியை வென்றது.

20 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (50-86)

## யாழ்.இந்து, நாவாந்துறை றோ.க. அணிகள் அரையிறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்.கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 14 வயதுப் பிரிவினருக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டங்களில் நாவாந்துறை றோ.க, யாழ்.இந்துக்கல்லூரி அணிகள் வெற்றி பெற்றன.

கடந்த வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்றன.

முதலாவது அரை இறுதியாட்டத்தில் நாவாந்துறை றோ.க. அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பமாகி முடியும்வரை இரு அணியினரும் கோல்கள் எதனையும் பெறாதநிலையில் ஆட்டம் நிறைவுபெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் கோல்கள் பெறவேண்டும் என்ற உற்சாகத்தோடு களமிறங்கி மோதிக் கொண்டனர்.

இதன்போது நாவாந்துறை றோ.க அணியைச் சேர்ந்த ஜெருந் தனது அணிக்காக இரண்டு கோல்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இறுதியில் நாவாந்துறை றோ.க. அணி 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றியீட்டியது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக்கல்லூரி அணி மோதிக்கொண்டது.

போட்டி ஆரம்பித்த முதல் விறுவிறுப்பான ஆட்டத்தினை இரு அணியினரும் வெளிப்படுத்தின. யாழ்.இந்துக்கல்லூரி அணிவீரர் சுஜராஜ் த்னக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி முதலாவது கோலினை அடித்தார்.

ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்டபோது யாழ்.இந்துக்கல்லூரி அணி 1:0 என்ற கோல்களில் முன்னிலையில் இருந்தது.

இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் மீண்டும் ஆரம்பமானபோது யாழ். இந்துக் கல்லூரி அணிக்கு எதிர் அணியின் தண்டனைப் பரப்பிற்குள் ஏற்பட்ட குற்றத் திற்காக தண்டனை உதை மத்தியஸ்தரினால் வழங்கப்பட்டது. டிலக்சன் அந்த உதையைக் கோலாக மாற்றி தனது அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

ஆட்டமுடிவில் யாழ்.இந்துக்கல்லூரி அணியினர் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றனர். (50-23)

## யாழ்-இந்து, மத்திய கல்லூரி அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவ முதல்வன் அமரர் பொன்.விபுலானந் தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை மின் ஒளியில் நடத்தி வரும் பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரை இறுதியாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி 'ஏ' அணிகள் வெற்றிபெற்றன.

கடந்த புதன்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற அரை இறுதி ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் யாழ்.இந்துக்கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

யாழ்.இந்துக்கல்லூரி அணி எதிர்த்து விளையாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை 55:46 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி 'ஏ' அணி எதிர்த்து விளையாடிய யாழ்.மத்தியகல்லூரி 'பி' அணியை 54:14 என்ற புள்ளி அடிப்படையில் வென்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது. (50-23)

## குமாரசாமி ஞாபகார்த்த 'ருவென்ரி-20'; காலிறுதி ஆட்டத்தில் கே.சி.சி.சி. வெற்றி

வலி.வடக்கு, ஒக்.31

அமரர் பி.எஸ்.குமாரசாமி ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டியின் காலிறுதி ஆட்டமொன்றில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்ரல் விளையாட்டுக்கழகமும் கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரல் விளையாட்டுக்கழகம் 08 விக்கெட்டுக்களை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது. ரஜீவ் 19 ஓட்டங்களையும் ஜசிந்தன் 14 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 09 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த றதீஸ்கரன் 04 ஓவர்கள் பந்து வீசி 09 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், றொபேசன் 3.2 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், தீபன் 04 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 15 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், [illegible], இராகுலன் முறையே 16, 17 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

87 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் 11.1 ஓவரில் 03 விக்கெட்டுக்களை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

சசி, சபானந் ஆகியோர் தலா 20 ஓட்டங்களையும் வல்லவக்குமரன் 14 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 24 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்ரல் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஜயந்தன் 04 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், விமலகாந் 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளைக்கு வங்கியின் தலைவர் டாக்டர் காமினி விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் அடங்கிய குழு விஜயம் செய்திருந்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.
ஜனாதிபதியின் வங்கித்துறை ஆலோசகர் டாக்டர் திருமதி ராணி ஜெயமகா, இலங்கை வங்கியின் தலைவர் டாக்டர் காமினி விக்கிரமசிங்க ஆகியோர் மங்கள விளக்கேற்றுகின்றனர்.
உழவு இயந்திரத்தின் திறப்பை மத்திய வங்கி ஆளுநர் பயனாளியிடம் கையளிக்கிறார். நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.
(படங்கள்: அச்சுவேலிச் செய்தியாளர்)

# யாழ். மாவட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு இலங்கைவங்கி சகல வகையான கடன் திட்டங்களையும் முன்னெடுக்கும்

## வங்கியின் தலைவர் காமினி விக்கிரமசிங்க தெரிவிப்பு

அச்சுவேலி,ஒக்.31

கடின உழைப்பினால் முன்னேறி யுத்த நெருக்கடிகளினால் இன்னல்பட்ட நிலையில் உள்ள யாழ். மாவட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவியாக இலங்கைவங்கி சகல வகையான கடன் திட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளது.

இந்த வகையில் யாழ்.மாவட்டத்துக்கான கடன் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டுத்தொகை மேலும் அதிகரிக்கப்படவுள்ளது.

இவ்வாறு கூறினார் இலங்கை வங்கியின் தலைவர் டாக்டர் காமினி விக்கிரமசிங்க.

இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளைக்கு விஜயம் செய்திருந்தபோது இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து அவர் உரையாற்றும்போது கூறியவை வருமாறு:-

வட பகுதி மக்கள் அரச சார்பு வங்கிகளின் செயற்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்கள்.

அந்த வகையில் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

தென்னிலங்கை வாழ் மக்கள் தனியார் நிதி நிலவளங்களில் தமது சேமிப்பை வட்டி வீத அதிகரிப்பை கருத்தில்கொண்டு வைப்புச் செய்துவிட்டு வட்டியும் இல்லை, முதலும் இல்லை என்ற நிலையில் ஏமாற்றம் அடைகின்றார்.

யாழ். மாவட்ட மக்கள் கடின உழைப்பாளிகள். உழைப்பினால் முயன்று முன்னேறியவர்கள். அவர்களின் இன்னலைப் போக்க இலங்கைவங்கி எப்பொழுதும் தயாராகவுள்ளது.

யாழ்.மாவட்ட மக்களின் நேர்மையின் சிறப்பினை வங்கிக் கடன்களை திருப்பிச் செலுத்தும் வீதம் எடுத்துக்காட்டுகின்றது.

95 வீதத்துக்கு குறையாதவர்கள், பெற்ற வங்கிக்கடனை திருப்பிச் செலுத்திவிடுகின்றனர். அதிலும் இலங்கை வங்கியின் அச்சுவேலிக்கிளை வாடிக்கையாளர்கள் முன்னணியில் உள்ளனர். இவர்கள் நூறுக்கு நூறு வீதம் கடன்தொகையை திருப்பிச் செலுத்தி முன்னணியில் உள்ளனர். இது பாராட்டத்தக்க செயற்பாடு மட்டுமல்ல வங்கி நடைமுறையில் முழுமையான நம்பிக்கை கொண்ட செயற்பாடுமாகும். இது முகாமையாளரின் நிர்வாகச் சிறப்பையும் எடுத்துக் காட்டுகிறது.

வங்கியின் செயற்பாடுகள் இன்று மக்களின் வாழ்க்கையில் சகலநிலையிலும் பரவியுள்ளது.

மனிதனின் பிறப்பில் இருந்து இறப்பு வரையும் சிறப்பாக கல்வி, மருத்துவம், பொருளாதாரம் உள்ளிட்ட சகலநிலையிலும் உள்ளது. வங்கியின் மீது நம்பிக்கை கொண்டவர்களின் வாழ்க்கையை வங்கி மேம்படுத்தும்- எனக் கூறினார்.

இலங்கை வங்கியின் ஆளுநர் அஜித் நிவாத் கப்றல் உரையாற்றும்போது:

யாழ். மாவட்ட மக்கள் கடின உழைப்பாளிகள் என்பதையும் அவர்களின் நம்பிக்கையுடன் கூடிய வாழ்க்கை மேம்பாட்டையும் நேரில்கண்டு பெருமை அடைகின்றேன்.

வளங்கள் குறைவான பிரதேசமாக இருந்தபோதிலும் மக்களின் நம்பிக்கையுடன் கூடிய உழைப்பும் தன்னம்பிக்கையும் சகல [illegible]ர்களையும் கடந்து தலைநிமிர்ந்து [illegible] வைத்துள்ளது.

மேலும் அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கான உதவிகளுக்கு வங்கிகள் கைகொடுத்து உதவும்.

அத்துடன் மக்கள் வங்கிகள் மீது கொண்டுள்ள நம்பிக்கையும் உறுதியும் மக்களின் வாழ்க்கையை மேலும் ஒளிமயமான எதிர்காலத்துக்கு இட்டுச் செல்லும்- எனக் கூறினார்.

(203- 11)


## கலைப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்
### விசேட மீள் பரீட்சைகள் - 2008
### (பழைய பாடத்திட்டம்)

கலைப்பீடத்தில் பழைய பாடத்திட்டத்தின் கீழ் பயின்று (Semester System) தமது பட்டப்படிப்பை இதுவரை பூர்த்தி செய்யாதுள்ள மாணவர்களுக்கு (கலை, இராமநாதன் நுண்கலைக்கழகம்) முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட இரு அரையாண்டுகளுக்குமான (Semester 1&2) விசேட மீள்பரீட்சைகள் விரைவில் நடத்தப்படவுள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றவேண்டிய மாணவர்கள் தமது விண்ணப்பங்களை 10.11.2009 ஆம் திகதிக்கு முன் கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம். (சி/562021)


## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை எலியாஸ்

(முன்னாள் ஆசிரியர், கண்டி சீனியர் கல்லூரி
இளைப்பாறிய FISHERIES INSPECTOR)



இளவாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை எலியாஸ் 28.10.2009 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை- செல்லம்மா தம்பதியினரின் அன்புமகனும் மேரிறோசாவின் அன்புக் கணவரும், யூட் (பாஸ்டர்), யூட் பற்றிக், மேரிறூபா (கனடா), நிருபா யாழினி (SENIOR CHA MIST UNILEVER SRILANKA LTD) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசதுரை (நோர்வே), இரத்தினம், அன்னம்மா, காலஞ்சென்ற லூர்த்தம்மா (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தோமஸ், அன்பழகன், அலெக்சான்டர் (SOFTWARE ENGINEER CANADA), வக்சலா, தேவி, தேவராஜன் ஆகியோரின் மாமனும், தனுஷனின் பேரனும், அமரர் G.S. மரியநாயகம், அருட்சகோதரி றோஸ்மலர் (தேத்தாப்பளை), யேசுராஜா (கனடா), அமரர் மேரிறீற்றா, கிறேஸ் (கனடா), மரியகொறற்றி (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும், பற்றிமாராணி, விமலா, மகேந்திரன்,றத்தி ஆகியோரின் சகலனும் றகு (கனடா), வாகீசன் (கனடா) ஆகியோரின் மருமகனும் சதீஸ் (ஜேர்மனி), றமேஷ் (டென்மார்க்), சுபோ (அவுஸ்ரேலியா), சோபா (சுவிஸ்),லோஜா (கனடா), லின்றா (கனடா), டினேஷ் (லண்டன்), வினோத் (கனடா), பிரசாத் (கனடா), கவிதா (அமெரிக்கா), றிஜித்தா (கனடா), துஷாந்தி (கனடா), டிலானி (கனடா), கெவின் (கனடா), மறியோ (கனடா), டெனிஷ் (நோர்வே),றொனியா (நோர்வே),பிரபேன் (நோர்வே) ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 02.11.2009 திங்கட்கிழமை மு.ப 9.30 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யூட் பற்றிக் (மகன்) T.P:0779352223,
நிருபா யாழினி (மகள்) 0773413438

31, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (90455)


## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் செவிறர்,
19. முருகேசர் லேன், நல்லூர். (90458)

## தவறிவிட்டது

நீர்வேலி - வடக்கு, நீர்வேலி எனும் முகவரி [illegible] 0771726687 எனும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். (90457)

## THIVI MATHS CENTER

நிறுவனத்தினால்
அன்னை புத்தகசாலை
[illegible] நடத்தப்படும்
G.C.E. (O/L) கணிதபாட செயலமர்வு
திகதி: [illegible]
இடம்:. 154/8 B. ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்.
நேரம்:. காலை 8 மணி

## Study & Work

UKல் கல்வி, வேலை வாய்ப்பு




திருப்தியான வீசா வழிகாட்டுதல்
நம்பிக்கையான ஆலோசனைகள்
தவணை முறையிலான கட்டண வசதி

யாழ் மண்ணில்
இலவச கருத்தரங்கு -
உடனடி அனுமதி வழங்குதல்

Free Seminar & Spot Admissions
By Mr. Michael Hilton Director Marketing
St. Patrick's College London
On 2nd November - 10.00am to 5.00 pm
Yarl Paady Residency Nallur

- ☑ Hospitality & Tourism
- ☑ Healthcare Management
- ☑ Business Management
- ☑ IT & Computing
- ☑ Fashion & Textiles
- ☑ Many more subjects

011 573 7306 071 883 9415

Thames INTERNATIONAL
THAMES INTERNATIONAL
Educational Consultancy (Pvt) Ltd.
136B 1/1, High Level Road, Nugegoda
Tel: 011 431 9027 or 011 281 2405
www.thameslanka.com

Diadem DSM


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
### சின்னத்தம்பி சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற இ.போ.ச சாரதி, காரைநகர், மன்னார்)

தோற்றம்:14★10★1946
மறைவு: 03★10★2009

03.10.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் தொலைபேசி, தந்திமூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த உறவினர்களுக்கும், கல்விச் சமூகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (31.10.2009) சனிக்கிழமை கல்லாற்றில் அந்தியேட்டிக் கிரியையும், 02.11.2009 திங்கட்கிழமை அன்னாரின் வதிவிடத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

154, உக்கிளாங்குளம்,
வவுனியா. (90453)

தகவல்:
குடும்பத்தினர்.

## இரண்டாம் வருட நினைவுகள்

மலர்வு: 18 ★ 08 ★ 1940



உதிர்வு: 24 ★ 10 ★ 2007

### அமரர் கந்தையா குணரத்தினம்
திதி: 31.10.2009

மனித மாணிக்கமாய் வாழ்ந்து மரித்த எம் தந்தையே!
மௌனமாய் அழும் இதயமதில் நீ வாழ்கின்றாய்
புனிதமான வாழ்வதில் நீ எம்மோடிருந்த காலங்கள் -
கனதியான கனவுகளிற் கரைகின்றன எந்தையே!!
இனிய நின் வதனம் இறையேகியும் உன்னையே
இரண்டாண்டுகளும் தொழுதிடும் எம் இதயமதே!!!

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

687/28, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (90444)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்




நெடுந்தீவு மத்தியில் மீன் ஏல விற்பனை நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நெடுந்தீவு மத்தி புனித யூதாததேயு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் காணியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நெடுந்தீவு பங்குத் தந்தை வண.பிதா அ.றோய் அடிகளார், நெடுந்தீவு கடற்றொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள், நெடுந்தீவு பிரதேச செயலக, பிரதேச சபை, பொலிஸ் திணைக்கள, கடற்படை உத்தியோகத்தர்கள் ஆகியோர் நிற்பதைக் காணலாம். [51]



ஆசிரியர் தினத்தையொட்டி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற கணனி வள நிலையத்தில் கணனிப் பயிற்சியை நிறைவுசெய்து வெளியேறிய ஆசிரியர்கள், கணனிவள நிலைய விரிவுரையாளர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு ஆசிரியர் ஞானதிருக்கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அதிபர் இ.ஓங்காரமூர்த்தி வாழ்த்துரை நிகழ்த்துவதைக் காணலாம்.



யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் தினத்தை ஒட்டி கொடிவார நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதலாவது கொடிதின சின்னத்தை பேரவையின் உப தலைவர் எஸ்.வி.ஆறுமுகசாமி நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில் நந்தனனுக்குச் சூட்டுவதனைக் காணலாம்.



கைதடி அரச முதியோர் இல்லத்தில் அண்மையில் இடம்பெற்ற முதியோர்தின விழாவின் ஆறாம் நாள் நிகழ்வில், துளிர்கள் நிறுவனப் பயிற்சி மாணவர்களின் நடன நிகழ்வு இடம்பெறுவதைப் படத்தில் காணலாம்.



அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் ஆசிரியர் தினவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்களால் ஆசிரியர் கீதம் இசைக்கப்படுவதையும் காணலாம்.




புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ சங்கத்தின் நயினாதீவு மத்தியில் உள்ள 18 ஆம் இலக்கக் கிளையில் . சிறிய கூட்டுறவு நகர் அண்மையில் திறந்துவைக் கப்பட்டது. திறப்பு விழாவில் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேசியக் கொடி ஏற்றிவைத்தார். [படம்: நந்தன்]



வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி, கமநெகும வேலைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விளைபொருள் உள்ளீடுகள் மற்றும் விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் விவசாயி ஒருவருக்கு கிருமிநாசினி தெளிகருவி மற்றும் விவசாய உள்ளீடுகளை வழங்குவதைப் படத்தில் காணலாம். சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி சுகந்தி குணசீலன் மற்றும் [illegible] சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம். [படம்: [illegible] செய்தியாளர்]



[illegible] மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இடம்பெற்ற விஜயதசமி விழாவில் ஹவாய் [illegible] சுவாமி ரிஷி தொண்டுநாத சுவாமிகள் கலந்துகொண்டு பூசை வழிபாட்டில் ஈடுபட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - வவுனியா

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## கணிதம் - I (புதிய பாடத்திட்டம்) 32-T-I


எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

### பகுதி - A


01. அரை டசின் பேனைகளின் விலை ரூபா 120 எனின், 1 பேனாவின் விலை யாது?

02. $-3x = 12$ எனின், $x$ இன் பெறுமானம் யாது?


03. நிழற்றிய பகுதி முழுவுருவின் என்ன பின்னம்?



04. கோணங்களின் அடிப்படையில் $\Delta ABC$ எவ்வகையானது?




05. $AC : CB = 1 : 2$, $AC = 5cm$ ஆகும். BC யாது?





06. $a = \{1$ தொடக்கம் 10 வரை ஒற்றை எண்கள்$\}$ $n(A)$ யாது?

07. $x < -2$ என்பதை எண்கோட்டில் குறிப்பிடுக.

08. 25/100 ஐ சதவீதத்தில் தருக.

09. 5 செக்கனில் சென்ற தூரம் 20m எனின், கதியை m/sஇல் தருக.

10. இவ்வுருவில் பக்கங்களை ஏறுவரிசையில் எழுதுக.





11. சுருக்குக. $3a/ a - 1 - 2a + 1/ a - 1$

12. $1m^3 = 1000l$ எனக்கொண்டு $1cm^3 = 1ml$ எனக்காட்டுக.

13. 18% இலாபம் கிடைக்கக்கூடியதாக ரூபா 200இற்கு வாங்கிய பொருளை விற்க வேண்டிய விலை யாது?

14. இவ்வுருவில் $A\hat{y}x = AC\hat{B}$ எனின், $\Delta Axy$, $AC\hat{B}$ இன் வடிவொத்தவை எனக் காட்டுக.





15. $-2x > 6$ என்பதற்கு பொருத்தமான இரண்டு பெறுமானங்களை எழுதி எண் கோட்டில் காட்டுக.

16. $T = a + (n-1)d$ என்பதில் n ஐ எழுவாயாக்குக.

17. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி சுருக்குக. $1/2 \lg 25 + \lg 20$


18. $2x - y - 1 = 0$ எனும் கோட்டுக்குச் சமாந்தரமாகவும், (0-5) புள்ளிக்கூடாகவும் செல்லும் கோட்டின் சமன்பாடு யாது?

19. இவ்விரு முக்கோணிகளும் ஒருங்கிசையும் எனக்காட்டுக.




20. ஒரு குறித்த வேலையை 4 மனிதர்கள் 6 நாட்களில் செய்து முடிப்பர். இரண்டு நாள் வேலை செய்தபின் இருவர் வேலைக்கு வரவில்லை. முழு வேலையும் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்?

21. ABCD ஒழுங்கான ஐங்கோணியாகும்.
1) $A\hat{B}C$
2) $B\hat{A}C$
3) $D\hat{A}C$ ஆகியவற்றைக் காண்க.




22. $2p - q = 7$, $3p + p = 13$. Pஇன் பெறுமானத்தைக் காண்க.


23. ஒருவர் 8% பங்குலாபம் வழங்கும் 10/= பங்குகளை 12/= படி வாங்குவதற்கு ஒரு குறிப்பிட்ட பணத்தை முதலீடு செய்கிறார். வருமானம் ரூபா 200 எனின், முதலிடப்பட்ட பணம் எவ்வளவு?

24. $y = x^2$ வரையும் $x = 2$ என்ற கோடாகும். இடைவெட்டும் புள்ளிகளின் ஆள் கூறு யாது?


25. 3 மாணவர்களின் இடை உயரம் 34.5cm. இம் மாணவர்களுடன் இரு மாணவர்கள் சேரும்போது புதிய இடை உயரம் 36.5cm. இரு மாணவர்களும் ஒரே உயரம் உடையவர்கள் எனின், ஒரு மாணவனின் உயரம் யாது?

26. 1, 3, 6, 10 ......... என்ற தொடரில் பொது உறுப்பு 55 எனின், உறுப்புக்களின் எண்ணிக்கை யாது?

27. படத்தில் காட்டிய உருவில் A, Bயிலிருந்து சமதூரத்தில் அசைவதும் Aயிலிருந்து 5cm மாறாத் தூரத்தில் அசைவதுமான ஒழுக்கை பருமட்டாக வரைந்து புள்ளிகளை இனங்காண்க.




28. இவ்வுருவில் x, y யாது?





29. தீர்க்குக. $x/4 + 2x = 9$

30. 6, 8, 10, 11, 12, 13, 15, 16, 17, 18, 19 என்பவற்றின் பெறுமானங்களின் காலணை இடைவீச்சு யாது?

### பகுதி B

* எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. படத்தில் காட்டிய தகடானது நிழற்றி காட்டப்பட்டுள்ளது.




1) இவ்வுருவில் உள்ள அரைவட்டத்தின் விட்டம் யாது?
2) நிழற்றிய பகுதியின் சுற்றளவு யாது?
3) நிழற்றிய பகுதியின் சுற்றளவுச் சமனான வட்டத்தின் ஆரை யாது?


02. மாம்பழம் ஒன்று ரூபா 10 வீதம் 60 மாம்பழங்கள் வாங்கி பெரிய மாம்பழங்கள், நடுத்தர மாம்பழங்கள், சிறிய மாம்பழங்கள் என 1:2:3 என்ற விகிதத்தில் வகைப் படுத்தினான். பெரியதை ரூபா 20/= வீதமும் நடுத்தரத்தை ரூபா 12/= வீதமும், சிறியதை ரூபா 8/= வீதம் விற்பதற்கு தீர்மானித்தான் எனின்,
1) மாம்பழங்கள் வாங்கிய விலை யாது?
2) சிறியதர மாம்பழங்கள் எத்தனை?
3) மொத்தமாக விற்றலாபம் யாது?
4) இலாப/ நட்டம் யாது?
5) இலாப/ நட்ட சவீதம் யாது?

03. பின்வரும் தண்டு - இலை வரைபை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

| தண்டு | இலை |
|---|---|
| 2 | 3 7 6 5 |
| 3 | 4 5 8 8 6 |
| 4 | 3 4 5 5 5 1 |
| 5 | 0 2 2 4 |
| 6 | 3 7 8 9 9 |

1) வீச்சு யாது?
2) இடையம் யாது?
3) 1ஆம் காலணை யாது?
4) 3ஆம் காலணை யாது?
5) காலணை இடைவீச்சு யாது?

04. $\Delta ABC$ இல் BA, BC என்பன PQ நீட்டப்பட்டுள்ளது. புறக்கோணங்களின் இரு கூறாக்கிகள் O வில் சந்திக்கின்றன. இதிலிருந்து பின்வருவனவற்றை காண்க.
1) $B\hat{A}C$ ஐ x சார்பாக காண்க.
2) $A\hat{C}B$ ஐ y சார்பாக காண்க.
3) இதிலிருந்து x, y இற்கிடையே உள்ள தொடர்பை எழுதுக.
4) $A\hat{O}C$ ஐ x, y சார்பாக காண்க.
5) 3 இன் பெற்ற விடையைப் பயன்படுத்தி $A\hat{O}C$ இன் பெறுமானத்தைக் காண்க.
6) AB = BC எனின், $A\hat{O}C$ இன் பெறுமானத்தில் ஏற்படும் மாற்றம் யாது?




05. ஒருவன் ரூபா 40,000 ஐ 10% கூட்டு வட்டியுடன் மூன்று வருடத்திற்கு கடன்படுகிறான். அத்துடன் வருடாவருடம் ரூபா 5,000 செலுத்தி வருகிறான்.
1) முதலாம் வருடமுடிவில் மீதித்தொகை யாது?
2) இரண்டாம் வருடமுடிவில் மீதித்தொகை யாது?
3) மூன்றாம் வருடமுடிவின் மீதித்தொகை யாது?
4) ஒருவன் ரூபா P ஐ வருடத்திற்கு r% வட்டிப்படி இரண்டு வருடத்திற்கு கடன்பட்டால் இரண்டு வருடத்தில் கொடுக்கப்படவேண்டிய மொத்த தொகை P, r சார்பில் காண்க.

வளரும்.....

ஆசிரியர்:- திரு.கனகசுந்தரம்,
பூந்தோட்டம் மகா வித்தியாலயம், வவுனியா.
தொ.பே.இல:- 0242224364

இன்றைய கணித பாட மாவட்டவல செயற்றிட்டத்திற்கு அனுசரனை வழங்குவது

NSP®
ஸ்ரீ லங்கா
அப்பியாசக் கொப்பிகள்
எழுத்துக்களுக்கு மேலும் அழகு சேர்க்கும்
உங்கள் தோழன்

★ இறக்குமதி செய்யப்பட்ட உறுதியான தரமான வெள்ளை கடதாசி
★ ஒவ்வொரு பக்கமும் புதியது போன்ற உணர்வு
★ இருபக்கத்திலும் எவ்வித தடையும் இல்லாமல் ...கூடிய தடிப்பம்
★ எழுதத்தூண்டுவதுடன் உங்கள் சிந்தனை வேகத்தையும் தூண்டும்
...NSP கொப்பிகளை வாங்கி ஏனைய அப்பியாசக் கொப்பிகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்
NSP இன் சிறப்பை நீங்களாகவே உணர்வீர்கள்

N0 5, Sangamitta Mawatha, Colombo 13, Sri Lanka. Tell: 94-11-2 323 581, Fax: 94-11-2 342 911

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அசைவியக்கத்தின் அடித்தளமாக தோன்றுதொட்டு இருந்துவரும் சிக்கனமும் சேமிப்பும்

**இன்று உலக சேமிப்பு தினமாகும். உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படும் ஒரு விசேட தினமாகும். நாம் எத்தகைய சூழ்நிலைக்குள் வாழ நேரிட்டாலும் அதனை எதிர்கொள்ள சிக்கனத்தையும் சேமிப்பையும் ஒரு கருவியாகக் கொள்பவர்கள் என்ற வகையிலும் இதன் அவசியம் உணரப்பட்ட நிலையிலும் இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

தனிநபர்கள் தமது வருமானத்தில் சிககனத்தைப் பேணத் தமது சேமிப்பை அதிகரித்து தத்தமது வாழ்வுக்கும், தேசத்தின் அபிவிருத்திக்கும் வித்திடும் நோக்குடன் பூகோள ரீதியில் வங்கிகளாலும் நிதிநிறுவனங்களாலும் அனுஷ்டிக்கப்படும் ஒரு விசேட தினம் என்ற வகையில் இன்றைய தினம் முக்கியத்துவம் பெறுகிறது. இதனை 1924 இல் இத்தாலியில் நடைபெற்ற உலக வங்கியாளர் மாநாட்டில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருந்தது. சேமிப்பு மீதான அவசியத்தை வலியுறுத்தி அதனை ஊக்குவிப்பது இத்தினத்தின் பிரதான நோக்கமாகும். உலக நாடுகள் பலவும் இந்நாளில் பல்வகை நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து சேமிப்பின் மூலம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும் என்பதை போதித்து வருகின்றன.

தோன்றுதொட்டு நம் சமூகத்தின் மத்தியிலும் சிக்கனமும் சேமிப்பும் நிலவியுள்ளமையை வரலாற்றாதாரங்கள் எடுத்து இயம்புகின்றன. சேமிப்பானது மனிதன் தோன்றிய காலத்தைப் போன்றே பழைமை மிக்கதொன்றெனவும் அது காலத்திற்குக்காலம் பல்வேறு விதமான சேமிப்பாக இருந்து வந்துள்ளது என்பதையும் சமூகவியலாளர்களும் வரலாற்றாசிரியர்களும் குறிப்பிட்டுள்ளனர். ஆரம்பகால சேமிப்பு முறைகள் நமக்குச் சிக்கனச் சிந்தனையை ஏற்படுத்துவதோடு சேமிப்பானது மனித வாழ்வில் சமுதாய பண்பாட்டுடன் பின்னிப்பிணைந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டி நிற்கின்றது.

சேமிப்புப் பற்றி 1611 இல் பிரான்ஸ் நாட்டவரான ஹியூக்டெலர்ஸ் (Hugh Dallars) முதன்முதலில் ஒரு கருத்திட்டத்தை எழுத்துருவில் முன் வைத்திருந்தார். அதேபோல இன்றைய சகாப்தத்தின் வங்கியென ஏற்றுக் கொள்ளப்பட்ட முதலாவது வங்கி 1778 இல் ஜேர்மனியில் ஆரம்பிக்கப் பட்டதாகவும் அடுத்து 1810 இல் இங்கிலாந்தில் சேமிப்புக்கென வங்கி ஒன்று நிறுவப்பட்டதாகவும் மேல்நாட்டு வரலாறுகளிலிருந்து அறிய முடிகின்றது. காலவோட்டத்தில் பொருளாதார அபிவிருத்திக்கு முதலீட்டாக்கம் அவசியம் எனும் எண்ணக்கரு வலுப்பெற்ற நிலையில் படிப்படியாக வங்கித் தேவைகளின் அவசியம் உணரப்படலானது.

நம்நாட்டிலும் 1785 இல் ஆட்சி புரிந்த ஒல்லாந்து தேசாதிபதியான வான்டிற்கிறாப் (Wandet Graff) என்பவரால் தாள், நாணயங்கள் வெளியிடப்பட்டமைக்கு சான்றுகளுண்டு. அதன்பின் படிப்படியாக வங்கிகள் நிறுவப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. நாட்டு மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துதல், அதனை ஊக்குவித்தல், சிக்கனத்தை வளர்த்தல், வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல், வேலை வாய்ப்புக்கள் உருவாக்குதல் போன்றன அவற்றில் குறிப்பிடத்தக்கன.



பொதுவாக இலங்கையிலுள்ள வங்கிகளையும் நிதிநிறுவனங்களையும் பின்வருமாறு வகைப்படுத்தலாம். மத்திய வங்கி, உரிமம்பெற்ற வணிக வங்கி, உரிமம்பெற்ற விஷேட வங்கிகள், வியாபார வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள், கடன்வழங்கும் நிதிநிறுவனங்கள், ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் (EPF, ETF) முதல் நிலை வணிகவங்கிகள், ஏனைய விஷேட நிதிச்சேவையினை வழங்கும் நிறுவனங்கள் என்பனவாகும். இதில் மத்திய வங்கியானது ஒரு நாட்டின் அரசாங்கத்தின் வங்கியாகவும் நாட்டின் தலைமை நிறுவன மாகவும் தொழிற்படு கின்றது. இவை பொது மக்களுடன் நேரடித் தொடர்பினைக் கொண்டிருப்பது இல்லை. இவை பொருளாதார உறுதி, நிதியியல் உறுதித்தன் மையினை பேணுவதை நோக்காகக் கொண்டவையாகும்.

இருப்பினும் நமது நாட்டின் மூலதனச் சேமிப்புப் பரம்பலை வெற்றிகரமாக நிறைவேற்றி மக்களின் சேமிக்கும் ஆற்றலை மேம்படுத்தி அச்சேமிப்பு முதலீட்டினூடாக தேசிய உற்பத்தியை பலதுறைகளினூடாகவும் புகுத்தி சேமிப்புச் சிந்தனை உணர்வை மேலும் பரிணமிக்கச் செய்வதும் இவ்வங்கிகளே.

மக்களின் சேமிக்கும் ஆற்றலை விருத்தியுறச் செய்து சேமிக்கும் ஆற்றலைத் தூண்டும், இவ்வங்கிகள் நாட்டின் நிதிச்சந்தையில் சிறப்புறு நிறுவனங்களாகப் பரிணாமம் பெற்றுக்கொண்டன. இவற்றினைச் சீர்தூக்கி பார்க்குமிடத்து வங்கிகள் நாட்டுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும் எனக் கருதினால் மிகையாகாது.

நம் நாகரிகமும் கலாசாரமும் சேமிப்பின் அவசியத்தையும் அதன் பயனையும் ஏற்றே வந்துள்ளன. அபிவிருத்தியை நோக்கி நாமும், நாடும் முன்நகரவேண்டுமாயின் உள்நாட்டுச் சேமிப்பு உயரவேண்டும். எமது நாட்டுச் சேமிப்பு உயராதவரை நாம் அந்நியநாட்டு உதவிகளிலேயே தங்கியிருக்கும் நிலைஏற்படும். இது நாட்டின் அபிவிருத்திக்கும் பொருளா தார சுபீட்சத்திற்கும் தடையாகும். இதனால் தான் தனியொருவர் வாழ்வாதார மட்டத்திலிருந்து சர்வதேச மட்டம் வரையான ஓர் அறநெறியாக சேமிப்பானது விளங்கி வருகின்றது. ஒவ்வொரு நாட்டினதும் பொருளாதார அபிவிருத்தியில் தேசிய சேமிப்பானது பெரும் பங்கு வகிக்கின்றது. எனவே தான் நாடுகளின் தேசிய உற்பத்தியில் தேசிய சேமிப்புவீதம் என்பது ஒரு குறிகாட்டியாகக் கொள்ளப்படுகின்றது. சமூகத்தில் நிலவும் வறுமை, நிதிமுடக்குகளிலிருந்து சமூகத்தினர் நிவாரணம்பெற சேமிப்பு அவசியமாகின்றது. தேசிய பொருளாதாரத்தைப் பொறுத்தவரை பொருளாதார அபிவிருத்திக்கும் பொருளாதார சுதந்திரத்திற்கும் இச்சேமிப்பே ஆணிவேராய் அமைகின்றது.

**இ.சுரேரூபன்,**
**ஹற்றன் நஷனல் வங்கி,**
**நெல்லியடிக் கிளை.**

மேலும் நவீன பொருளாதார முறைமையையும் நமக்குச் சேமிப்பைத் தூண்டுகின்றன. வங்கிகள் வழங்கும் உயர்வட்டி, பாதுகாப்பு ஸ்திரத்தன்மை போன்றனவற்றை வங்கிகள் உறுதியளிப்பதால் சேமிப்பின் மீது மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அரச அங்கீகாரம், பாதுகாப்பு, சலுகைகள் என்பனவும் மக்களிடையே சேமிப்புப் பற்றிய நம்பிக்கையை வளர்த்துள்ளன. ஆதலால் சேமிப்பின் அவசியத்தை நன்குணர்ந்து பலமானதும், வளமானதுமான எதிர்காலத்திற்கு இன்றே அத்திபாரம் இடுவோமாக!

---

# பண்டாரவன்னியன் அந்நியரை எதிர்த்து நின்று போராடி மரணித்த மானவீரன்



*ஒரு நாட்டில் ஓர் இனத்தின் வரலாற்றுப்பாதைகளைப் புரட்டினால் அதில் பல்வேறு உணர்வுகள் வெளிப்ப டுத்தப்படுவதினை உணரலாம். அதுவும் இலங்கைத்தீவில் தமிழினத்தின் வரலாறுகள் துன்பங்கள், துயரங்கள் நிறைந்தாலும் வீரம்செறிந்த நிகழ்வுகள் ஏராளம் நடந்தேறின. இலங்கையில். புராதனகாலத்தில் காணப்பட்ட இராச்சியங்களில் அடங்காப்பற்று எனப்படும் வன்னிராச்சிய வரலாறுகள் வித்தியாசமானவை. இலங்கையில் வடபகுதியில் வடக்கே ஆனையிறவு பரவைக்கடலையும் கிழக்கே முல்லைத்தீவுக் கடலையும் தெற்கே நுவரகலாவிய மாவட்டத்தையும் மேற்கே மன்னார்க் கடலையும் எல்லைகளாகக் கொண்ட பிரதேசமே அடங்காப்பற்று எனப்படும் வன்னியாகும். இவ் வன்னிப் பிரதேசத்தில் ஆதிகாலத்தில் வேடர்களும் இராவணன் பரம்பரையைச் சார்ந்த தமிழர்களும் வாழ்ந்ததற்கான தொல்லியல் வரலாறுகளும் வரலாற்றுச் சின்னங்களும் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் வாழ்ந்த பூர்வீகக் குடிகள் சுதந்திரமாக இருந்தனர். புவியியல் அமைப்பு, சூழல், சமூகவாழ்க்கைமுறை காரணமாக அவர்கள் யாருக்கும் அடிபணியாமல் இருந்தனர். யாழ்ப்பாண ஆட்சியினருக்கோ, சிங்கள ஆட்சியினருக்கோ அடங்காமல் இருந்த பிரதேசம் என்பதால் ''அடங்காபற்று'' எனப் பெயர் பெற்றது.*

**வணங்காபற்று எவப்பெயர் வந்தமை**

*இவ்வாறு சிறப்புப் பெற்ற அடங்காபற்று எனப்படும் வன்னி இராச்சியத்தை ஆரம்பத்தில் ஆண்ட வன்னியர்கள் பனங்காமத்தைத் தமது தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். பின்பு முல்லைத்தீவை பிரதான இடமாக மாற்றினர். இவ் வன்னி இராச்சியத்தை இரண்டு வகையானவர்கள் ஆட்சி நடத்தியதாகக் கூறப்படுகின்றது. வன்னியர்கள் எனப்படுவோரும் மற்றும் மாப்பாணர்களும் ஆட்சி புரிந்தனர்.*

*கி.பி. 1505ஆம் ஆண்டு இலங்கைக்குள் நுழைந்த போர்த்துக்கேய இனத்தவர்களால் வன்னியின் செட்டிகுளம், மன்னார் போன்ற பிரதேசங்கள் கைப்பற்றப்பட்டன. இதன்பின்பு கி.பி. 1782 ஆம் ஆண்டு ஜூலை மாதம் லெப்ரினென் நாகெல் பொது மன்னிப்பளித்தபோது சின்னநாச்சிக்கும் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டது. முல்லைத்தீவுக்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டார். இவ்வாறான சூழ்நிலைகளில் பண்டாரவன்னியன் தாயின் பெயர் சின்னநாச்சியாக இருந்திருக்கலாம். சுவாமி ஞானப்பிரகாசரின் பரம்பரைக்குறிப்பின்படி குழந்தை நாச்சனுடைய மகன் பண்டாரவன்னியன் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாகத்தான் பண்டாரவன்னியனின் ஆள்புலம் முல்லைத்தீவு வட்டுவாகல், முள்ளியவளை, ஒட்டுசுட்டான் போன்ற பிரதேசங்களாக இருந்திருக்கவேண்டும் எனக் கூறப்படுகின்றது.*

**ஆங்கிலேயர் ஆட்சி**

*இவ்வாறான ஒரு சூழ்நிலையில் கி.பி. 1796 ஆம் ஆண்டு இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பமாகின்றது. ஆங்கிலேயர்கள் கோட்டை இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியங்களை இலகுவாகக் கைப்பற்றிக் கொண்டனர். ஆயினும் ஆங்லேயர் குழு ஒன்று கி.பி.1800ஆம் ஆண்டு பனங்காமத்தில் படைப்பிரிவு ஒன்று இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. பண்டாரவன்னியன் வன்னியில் கலகங்கள் செய்ததன் காரணமாக ஒல்லாந்தரினால் பதவி நீக்கம் செய்யப்பட்டு பின்னர் ஆங்கிலேயர்கள் மன்னிப்பளித்து வன்னியில் ஒரு சிறு பிரிவிற்குத் தலைவனாக நியமிக்கப்பட்டான். ஆனால் பண்டாரவன்னியன் ஆங்கிலேயர்களைத் தனது நாட்டிலிருந்து வெளியேற்றப்போவதாகச் சபதம் செய்து மீண்டும் கலகங்கள் செய்ய ஆரம்பித்தான்.*

**கற்சிலை மடுவில் வீரப்போர்**


*பண்டாரவன்னியன் பாரிய படையெடுப்பினை மேற்கொண்டு வடபகுதி வன்னி முழுவதையும் தனது ஆட்சியின்கீழ் கொண்டு வந்ததுடன், முல்லைத்தீவையும் கைப்பற்றினான். மேலும் அவனது படையினர் கொட்டியாரத்தையும் கைப்பற்றி அங்கு சில தனது படை வீரர்களையும் நிலைகொள்ளச் செய்தான். ஆயினும் குறுகிய காலப்பகுதியில் ஆங்கிலேயர்கள் மீளவும் இதனைக் கைப்பற்றியதாகக் கூறப்படுகின்றது.*

*இவ்வாறான சூழ்நிலைகளில் பண்டாரவன்னியன் 1803ஆம் ஆண்டு கற்சிலை மடுவில் தங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது. இதனை நன்கு அறிந்த ''டிறிபேர்க்கின்'' தலைமையிலான ஆங்கிலப் படைகள் கி.பி. 1803ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி அதிகாலை 5 மணியளவில் மன்னாரில் இருந்து கற்சிலைமடுவுக்கு வந்து சேர்ந்து கடுமையான தாக்குதல்களைத் தொடுத்தன. சற்றும் எதிர்பாராத பண்டாரவன்னியன் அவன் சார்ந்த படைகள் அதிர்ச்சியடைந்தன. இச்சண்டையிலே பண்டாரவன்னியன் தனது இரு கரங்களிலும் வாளேந்திக் கடுமையாகப் போரிட்டாலும் அவன் கற்சிலை மடுவில் வீரமரணமடைந் தான். பண்டாரவன்னியனைப் போரிலே தோற்கடித்தமைக்கு கப்ரன் டிறிபேர்க்கிற்கு பண்டாரக்குளம் பரிசாக வழங்கப்பட்டது. எனவே பண்டாரவன்னியன் இம்மண்ணிலே மரணித்தாலும் ஒவ்வொரு தமிழர்களது மனங்களிலும் அவன் ஒரு வீரனாக வாழ்ந்து வருகின்றான்.*

**தொகுப்பு: எம்.எம்.ரதன்,**
(உபதலைவர், வவுனியா நகரசபை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் நான்



ஒருமனிதன் பிறந்தது முதல் இறக்கும்வரை எத்தனையோ விடயங்களை அனுபவிக்கிறான். சில ருசிகரமான அனுபவங்கள் அவனை வாழவைப்பதாய் அமைகின்றன. மற்றையது துன்பவியல் அனுபவங்களைச் சாடுவதாய் அமைகின்றன. முயற்சி செய்து பார்த்தால் மூலதன ஆழத்தின் இனிமை புரியும்.

வெகுதூரம் தொலைவாகும் பொழுதுகள் பிரமை பிடித்து அலைய வேண்டி வைக்கிறது. இது நியதின் நியமாக இருப்பதும் நினைக்கும் போதெல்லாம் விழிநீர் சொரிவதும் வழமையாகி விட்டது. ஏதோ தவிப்புக்கள், புரியாத விடயங்கள் பற்பல விடியாத இரவாகிப் போய்விட்டது. நினைவில் சொட்டும் கணங்கள் பற்பல உண்டு. ஏதோ உணர்வலைகளின் பின்னால் எம்மனம் போதனைகளைச் செவிமடுக்காமல் தான் வைத்த போக்கிலே செல்கின்றது.

இளம் வயதுஎன்றால் எப்படியும் இருக்கலாம் என்பது அவசியமற்றது. எப்பவும் தேடலுக்குரிய வயது இளமைதான். அதனைத் தொலைத்த பின்பு தேடுவது கிடைக்காத விடயமாய்ப் போய்விடும். எனவே இளமை வாழ்வதனைச் சரியாகப் பயன்படுத்தத் தெரிய வேண்டும்.

எங்கு என்ன நடந்தாலும் புதினம் பார்க்கும் நபர்களே அதிகம். இவர்களெல்லாம் அதில் ஓர் இன்பம் காண்கின்றார்கள் போல் தெரிகின்றது. பிரச்சினை ஏதாவது நிகழ்ந்திடின் சமாதானம் செய்யும் குணம் கிடையாது. சச்சரவு பெருக நாலா பக்கமும் ஏத்தி விடத்தான் பார்ப்பினம். இப்படிப்பட்டோரை நயவஞ்சகப் பேர்வழி என




தொகுப்பு: ஓவண்யன்

பெயர் சூட்டினால் தப்பேதுமில்லை. சில விடயங்களில் இரசனை இருக்க வேண்டும். அப்போதுதான் வாழும் வாழ்வில் பிடிப்பு ஏற்படும். எனவே மனிதவளத்திற்கு நிறைந்த அறிவைப் பயன் படுத்தும் போது சிறப்பான வாழ்வு சிறகடித்துப் பறக்கும்.

காயங்கள் ஆறும் முன்னே ஈட்டிகள் வெந்த புண்ணில் தாக்க முயலும் போது தாங்கும் இதயம்தனைக் கொண்டு துணிவோடு சிறப்பான உணர்வோடு செயற்படவேண்டும். மாற்றான் வீட்டுச் சொத்துக்கு ஆசைப்படுவதில் என்ன நியாயம் இருக்கின்றது. உனக்குள் இருப்பதை நன்குபயன் படுத்து. நல்ல வளமான சூழல்தனை உணரும் போது எல்லாம் கிடைத்துவிட்டது போன்ற மன நிறைவு அடைவாய்.

உடல் நலக்குறைகளே நோய்கள் உருவாகுவதற்குக் காரணமாய் அமைகின்றன. நோய்கள் வரும் முன்பே எம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டும். எனவே அதற்கேற்ற விதத்தில் எமைக் பாதுகாத்துக் கொள்வதன் மூலம் நோய்கள் வராமல்

சவால்களுக்கு முகம் கொடுத்து சமூகத்தில் வாழ முடியும். நல்ல வழியில் பெறப்படுபவையே என்றும் நிலைக்கும். மற்றவை எல்லாம் நிறைவான செயற்பாடுடன் பயன்படுத்த முடியாது.

கற்பனை உள்ளமே கனத்த இதயத்திற்கு ஆறுதலாய் அமைகின்றது. நயவஞ்சகம் நிறைந்தவனை அணுகாது இருப்பதே நமக்கு நல்லது. ஆற்றலின் திருமுகமே அறிவியலின் அபூர்வ பக்கங்கள் மூட நம்பிக்கைக்கு அகப்பட்டே மனிதவாழ்வில் பல பாகங்கள் இழக்கப்படுகின்றன. தேடும் பொருளேதேனை வார்க்கும். அறிவின் கனவே ஆக்கம் படைக்கும். சூழலும், உலகமும் சுற்றிவரும் கனவின் கோலங்கள். எழுத்திற்குப் பின்னால் அசைவது படைப்பின் அத்திபாரம்.

எதனையும் அடக்கி வைத்திருப்பது கடுமையான விடயமாகும். சக்தி வாய்ந்த படைப்புக்கள் சாவது கிடையாது. எதிர்பார்ப்புக்கள் எல்லாம் நிறைவேறுவதும் இல்லை. மனவிருப்பத்தின்படியே உறவுகளின் எதிர்பார்ப்புக்கள் வந்தமைகின்றது.

மருதங்கேணியூரான், குருநகர் நலன்புரி நிலையம், யாழ்ப்பாணம்.

# வறுமையில்...

★ஆபிரகாம் லிங்கன்:.
இவர் ஒரு ஏழை.விறகுவெட்டியின் ம... ஜனாதிபதியானார். ... றிய ...
★டாக்டர் சாமுவேல் ஜான்சன்:.
வறுமையில் வாழ்ந்து ... விய... போற்றும் இலக்கிய ...யும், ஆசிரியரும் இவரே.
★ஜோசப் ஸ்டாலின்:.
சோவியத் நாட்டின் ... இவர், ... தொழிலாளியின் மகன்.
★ தோமஸ் அல்வா எடிசன்:.
வறுமைக்கோட்டின் கீழ் வா... கு ...
★பெஞ்சமின் பிராங்ளின்:.
விஞ்ஞானியான இவர், ஒரு மெழுகுவர்த்...
★வில்லியம் சேக்ஸ்பியர்:.
குதிரை லாய மேற்பார்வையாளரின் மக...
சு.தர்ஷனா, 2010 கலைப்பிரிவு, ...






கடந்தவாரம் இப்பத்தியிலே மரண வீட்டில் பார்த்த சம்பவத்தைச் சொல்லியிருந்தேன். இம்முறை அந்தியேட்டி நிகழ்வொன்றில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றினை உங்களின் சிந்தனைக்காகக் தருகிறேன்.உறவினர் ஒருவரின் அந்தியேட்டி நிகழ்விற்கு அண்மையில் சென்றிருந்த போது அந்தியேட்டி நிகழ்வு மிகவும் ஆரவாரமாக அமளிதுமளியாக இடம்பெற்றுக் கொண்டிருந்தது.இறந்துபோனவரின் நான்கு பிள்ளைகள் கனடாவில் வசித்து வருவதால் அந்தியேட்டி நிகழ்விற்கு வருவோரைப் போட்டோ எடுப்பதிலும் வீடியோ எடுப்பதிலும் வீட்டுக்காரர் ஆர்வம் காட்டிக்கொண்டிருந்தனர்.மதியம் ஒரு மணியைத் தாண்டியதும் அந்தியேட்டிக் கிரியைகள் நிறைவுபெற்றதும் சாப்பாட்டுக்கு ...ர்கள்.

நான் அவசரம் போகவேண்டி ஏற்பட்டதால் முதல் சபையிலே சாப்பிட்டுவிட்டு அங்கிருந்து புறப்படுவோம் என்று நினைத்தபடி பந்தலில் இருந்து வெளியேறிய போது வாசலில் "சீடி" ஒன்றினைத் தந்தார்கள். அந்தச் 'சீடியின்' முகப்பிலே இறந்தவரின் ...ரைக் குறிப்பிட்டு அமரர் ...... மரண நிகழ்வுக் காட்சிகள் என்று எழுதப்பட்டு அவருடைய படமும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. 'சீடி'யைக் கையில் வாங்கியவுடன் திகைத்துப்போனேன் "அட ஒருவருடைய ஞாபகத்தை வெளிப்படுத்த இப்படியும் ஒரு விடயமா?" இந்த விடயம் ஒருவருடைய

# இலங்கைத் தமிழ் நவீன நாடகங்கள்

(பதிவு: மூன்று) – ஒருபார்வை

கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை

அன்று இலங்கையில் நவீன நாடகங்களே இருக்கவில்லை. பேராசிரியர் புதுமையாக எழுதிய நாடகங்களை, புதுமையாக அரங்கேற்றிக் காட்டியதுதான், வித்தியானந்தன் இலங்கைத் தமிழ்நாடகத் துறைக்கு ஆற்றிய பெரும் தொண்டு.

பேராசிரியரிடம் தமிழ் படித்தவர்கள் நூற்றுக்கணக்கினர். கலாநிதி வித்தியானந்தன் தயாரித்த பேராசிரியரது 'சுந்தரம் எங்கே?' 'துரோகிகள்' ஆகிய நாடகங்களில் நடித்த நான் இன்னமும் அந்த இரு பேராசிரியர்களும் காட்டிய வழியில் நாடகப் பணிசெய்து வருகின்றேன்.



பேராசிரியர் கணபதிப்பிள்ளை தான் முதன்முதலில் இலங்கை மண்வாசனை நாடகத்தை எழுதினார். கலாநிதி வித்தியானந்தன் அவற்றை அரங்கிட்டுக் காட்டினார். இலங்கையில் நவீன நாடக இயக்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில்தான் ஆரம்பித்தது.

இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவைதான் முதன் முதலில் பேராசிரியர் மண்வாசனை நாடகங்களின் பெருமையை அறிந்து, நவீன நாடகங்களைத் தயாரித்து ஒலிபரப்பத் தொடங்கியது. அன்றிலிருந்து இன்றுவரை அது நவீன நாடகங்களையே ஒலிபரப்பி வருகிறது.

அதைப் பின்பற்றியே முஸ்லிம் சேவையும் இலங்கைவாழ் முஸ்லிம்களது சமகால வாழ்க்கையைச் சித்திரிக்கும் நவீன நாடகங்களை ஒலிபரப்பி வருகிறது.

நானும் 1980 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை வானொலிக்கு நாடகங்கள் எழுதி வருகின்றேன்.

தமிழ் மக்கள் இன்னும்தான் இலங்கை நவீன நாடகத்தின் சிறப்பை அறிந்து கொள்ளவில்லை. பாடப் புத்தகங்களில் புராண, இதிகாச நாடகங்களும் மிருகங்களின் நாடகங்களும் பல்கலைக்கழகங்களில் கவிதை நாடகங்களையும் நாட்டுக் கூத்துக்களையும் கற்பிக்கின்றார்கள். அவற்றை நீக்கிவிட்டு, பாடசாலை மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் நவீன நாடகங்களை கற்பிக்க வழி செய்யவேண்டும்.

கலையரசு சொர்ணலிங்கம் பல வகையான நாடகங்களிலும் நடித்தார். அவர் ஒரு நல்ல நடிகர். பம்மல் சம்பந்த முதலியாரை தமது நாடக பேராசானாகக் கொண்ட கலையரசர், அவரது வசன நடை, புராண இதிகாச நாடகங்களையே நடித்தார். அவை இலங்கை மண்வாசனை நாடகங்களல்ல. கலையரசர் ஒரு நாடகத்தை கூட எழுதவில்லை. என்பதையும் இந்த இடத்தில் சுட்டிக் காட்ட வேண்டும். பேராசிரியர் வித்தியானந்தன் கூட ஒரு நாடகத்தையும் எழுதவில்லை. எல்லோரும் நாட்டுக்கூத்துக்கள் ஆடிக்கொண்டிருந்த காலத்தில் வசன நடை நாடகம் ஒன்றும் இருக்கிறது என்று நடித்து காட்டியது தான், கலையரசர் சொர்ண லிங்கத்தாரது பெருமை! உண்மையில் இலங்கை நவீன நாடகத்தின் தந்தை பேராசிரியர் கணபதிப்பிள்ளையே! (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...லும் இவர்கள்....



... மகன். அமெரிக்க நாட்டின் ... பெருந் தலைவர்.

...வியாபாரியின் மகன். உலகம் ..., ஆங்கில அகராதியின் ...

..., செருப்புத் தைக்கும் ஏழைத் ...

...து செய்பவரின் மகன்.

...ர்த்தி வியாபாரியின் மகன்.

...மகனான இவர் இங்கிலாந்தின் இணையற்ற நாடகாசிரியர்.

..., யாழ்/ப்பா த்திரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.



- கவிநேசன் -

துன்பத்தை இன்னொருவருக்குத் திணித்து விடுவது போன்ற செயல்லவா? என்று எனக்குள்ளே நினைத்தபடி தந்த 'சீடியை' வாங்கிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டேன்.

அங்கு இன்னும் நூற்றுக்கணக்கான 'சீடி'கள் மேசையில் அடுக்கப்பட்டு இனி வருகின்றவர்களுக்கு வழங்குவதற்காக காத்துக்கொண்டிருந்தன. 'சந்தனம் மெத்தினால் அங்கெல்லாம் தடவுவார்களாம்.' என்றதொரு பழமொழி எனக்கு ஞாபகம் வந்தது. இறந்துபோன ஒருவருடைய ஞாபகமாக அவர் பெயர் நின்று நீண்டகாலம் நிலைக்க சமூகத்தில் எத்தனையோ விதமான ஆக்கபூர்வமான செயற்பாடுகள் இருக்கின்றன. இறந்தவரின் ஞாபகமாக நிழல் தரும், பயன்தரும், மரக்கன்றுகளை வழங்கலாம். அல்லது சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், மற்றும் வாழ்வகங்களில் வாழ்கின்ற வர்களுக்கு பல்வேறு விதமான உதவிகளைச் செய்யலாம். அகதிமுகாம்களில் அல்லற்படுகின்ற எமது உறவுகளுக்கு அல்லது மீள்குடியமர்த்தப்படுகின்றவர்களுக்கு உதவிகளை வழங்கலாம். வீணேசெலவாக்கும் பணத்தைக் கொண்டு இவ்வாறு பலவிதமான நல்ல செயற்பாடுகளை எமது சமூகத்திற்குச் செய்து கொள்ளலாம்.

எனவே, இவ்வாறான வழிகளில் தங்களின் பணத்தை அவமே செலவழித்து வருகின்றவர்கள் சிந்தித்துச் செயலாற்றவேண்டும். அவ்வாறு சித்தித்துச் செயலாற்றினால் அவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஆக்கபூர்வமான செயற்பாடுகள் சமூகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரும் என்பது திண்ணம்

## உங்களுக்காக....

* அன்பு மட்டுமே அனைத்தையும் வெல்லும் ஆயுதம்.
* அன்பு வழி செல்வோருக்கு வெற்றி நிச்சயம்.
* கிளைக்காமல் மரமும் உழைக்காமல் உயர்வும் கிடையாது.
* கீழ்ப்படிதல் என்பது மேன்மைக்கு உணர்த்தும் மேல்படி
* உண்மையே உயர்வின் ஆணிவேர்.
* காந்தம் இரும்பையும் அன்பு ஆண்டவனையும் ஈர்க்கும்.
* கடவுளின் ஆசி வேண்டின் பெற்றோரைநேசி
* பூவுக்கு உயர்வு நறுமணம் மனிதனுக்கு உயர்வு நற்குணம்.
* அன்பை வெல்ல அன்பால் மட்டுமே முடியும்.

ச.டிலானி,
கலைப் பிரிவு 2011,
கண்டிக்குளி மகளிர் கல்லூரி.


# சிவனைப் பிடித்த சனி!



சனி பகவான் தேவலோகத்தில் அனைவரையும் பிடித்து துன்புறுத்திவிட்டார். கடைசியில் மிஞ்சி இருந்தவர் சிவபெருமான் மட்டும் தான். இதனால் சனிபகவான் சிவபெருமானை தேடிக்கொண்டிருந்தார். இதனை அவதானித்த சிவபெருமான் உமாதேவியிடம் கூறினார் ''அவனால் என்னைப் பிடித்துத் துன்புறுத்த முடியாது.''அதற்கு உமாதேவியார் ''ஏன் தங்களைச் சனிபகவானால் பிடிக்க முடியாது?'' என்றார். அதற்கு சிவபெருமான் ''சற்றுப் பொறுத்திருந்து பார்'' என்றார். உடனே சிவபெருமான் எழுந்து ஒரு குகைக்குள் சென்று சனிபகவானின் பார்வை படாதபடி ஒரு பெரிய கல்லால் மூடினார். இதனை அறிந்த சனிபகவான் சிரித்து விட்டு ஏழரை ஆண்டுகள் கழியும் வரை குகைக்கு முன் இருந்தார். ஏழரை ஆண்டுகள் கழிந்த பின் சிவன் வெளியில் வந்தார். அதன் போது குகைக்கு முன் நின்ற சனி பகவானைப் பார்த்தார். ''உன்னால் நான் என்னை பிடிக்க முடியவில்லையே! காலமும் சென்றுவிட்டதே? பின் ஏன் நிற்கின்றாய்?'' என்றார் சிவபெருமான். உடனே சனிபகவான் ''நான் உங்களை ஏழரை ஆண்டுகள் துன்புறுத்தி விட்டேன்'' என்றார். அதற்கு சிவபெருமான் ''நீ எவ்வாறு என்னை துன்புறுத்தினாய்?'' எனக் கேட்டார். அப்போது சனிபகவான் ''நான் உங்களை ஏழரை ஆண்டுகள் உமாதேவியாரிடம் இருந்து தங்களை பிரித்து குகைக்குள் இருத்தி துன்புறுத்தி விட்டேன்'' என்றார். சிவபெருமான் சனிபகவானின் அறிவைப் பாராட்டி தன்னைப் பிடித்ததால் 'சனீஸ்வரர்' என அவருக்குப் பட்டமும் வழங்கினார்.

ஞா. அபர்ணா, தரம்-6D
வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை.

## நாடும் நடப்பும்




# தத்துவ ஞானிகள் சிந்தனையில் உதித்தவை

* ''ஒரு கீரைத்தோட்டமே எனது மருந்துப் பொடியாகும்''

- லியோ டால்ஸ்டாய் -

* ''இன்று வியாபார முறையில் தயாரிக்கப்பட்டு வருகின்ற உணவுப் பொருள்களை மனிதன் உண்ணக்கூடாது. இயற்கையான, எளிமையான, கெட்டுப் போகாத உணவுகளான, புதிய பழங்கள், பசுமையான காய்கறிகள், பசுங்கீரைகள் ஆகியவற்றை உண்ண வேண்டும்''

- ஹாரி பென்ஜமின் -

* ''மூலிகைகள் நோய் தீர்த்து ஆரோக்கியம் பெருகுவதற்கு மகத்தானதொரு களஞ்சியமாக இருக்கின்றன. மூலிகைகள் உடம்பின் சக்திகளை வெளிப்படுத்தி உற்சாகத்தை உண்டாக்குகிறது. இவ்விதம் பொதுவாக உடலியக்கத்திற்கு ஒரு பெரிய புத்துணர்ச்சியையும், சக்தியையும் கொடுக்கிறது''

-கென்னத்குருமென் -



* ''காய்கறிகள் அடங்கிய சைவ உணவும் மிதமாக உண்பதும் கிழட்டுப் பருவம் வரை அமைதியான, ஆரோக்கியமான வாழ்க்கையைத் தருவதுடன் நீண்ட ஆயுளையும் கொடுக்கும்.

- பிளேட்டோ -

* ''என்னைப் பொறுத்தவரை வைத்தியர்கள் குணப்படுத்துவதாக கூறும் நோய் என்னவென்று எனக்கே தெரியவில்லை. ஆனால், அவர்கள் குணப்படுத்தும் நோயாளிகளுக்கு என்ன நோய்களைக் கொடுக்கின்றனர் என்பது மட்டும் தெரியும். பயம், பேதமை, மரணத்தைப் பற்றிய அச்சம் இவைதான் வைத்தியர்கள் உண்டாக்கும் நோய்கள். அவர்கள் நோயை குணப்படுத்தாததுடன் மனதிலுள்ள தைரியத்தையும் துப்புரவாகக் கொன்று விடுகின்றனர்''

- ரூசோ -

* ''உண்பதற்காக உயிர் வாழாதே - உயிர் வாழ்வதற்காக மட்டும் உணவு கொள்'' - சாக்கிரடீஸ் -

★ ''மிருகங்கள் வயிற்றை நிரப்புகின்றன. மனிதன் உண்கிறான் புத்திசாலி மட்டுமே எப்படி உண்பது என்பதை அறிவான்''

- பிர்லட் சாவரின் -

* ''உண்பது அனைவருக்கும் இன்றியமையாதது. ஆனால் புத்திசாலித்தனமாக உண்பது ஒரு கலை''

- லாரச்போகல் -

* ''யுத்தம், பஞ்சம், தொற்றுநோய் இவைகளால் இறப்பவர்களைவிட மருந்தால் (DRUGS) இறப்பவர்கள் அதிகம்''

- டாக்டர் மேச்கு... -

''உண்மையிலேயே ஒரு மருத்துவமுறை விஞ்ஞான பூர்வமானது என்பது உண்மையானால் அதனுடைய அஸ்திவாரம் இயற்கையின் மடியில் இடம்பெற்று இருக்க வேண்டும்''

- ஜான்ஸ் கெல்டன் -

தொகுப்பு - வ.க.ஜெயபாலன்
யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.

**'வாரவசந்தம்'**
பகுதிக்குப் பொருத்தமான படைப்புக்களை வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். தரமான ஆக்கங்கள் வாரவசந்தத்தில் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்
### இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவ மாணி
(Bachelor of Business Management (BBM) Online Degree Programme)
## ஆரம்ப நிகழ்வு சிறப்பு மலர் - 2009

Ministry of Higher Education

## துணைவேந்தரின் வாழ்த்து



எங்கள் தொலைக்கல்வி வரலாற்றில் புதிய அத்தியாயமாய் இணையத்தள வழியூடான வியாபார முகாமைத்துவ கற்கைநெறியினைத் தொடக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.ஆசிய அபிவிருத்தி வங்கியின் துணையுடனான தொலைக்கல்வி நவீன மயமாக்கத் திட்டத்தின் கீழ் தமிழ்மொழி மூலமான இந்த கல்வி வாய்ப்பு கைவசமாகின்றது.

சர்வதேச நிபுணர்களின் வழிகாட்டலில் இந்தக் கற்கைநெறிக்கான கலைத்திட்டம், பாடபொருள் வடிவமைப்பு ஆகியவற்றினை எங்கள் முகாமைத்துவ வணிக பீட ஆசிரியர் குழாம் நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உயர்கல்வி வரிவாக்கத்தின் மைல்கல்லாகும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றிக்காய் உழைத்த அனைவருக்கும் இதன் பயன் கனிகளின் சொந்தக்காரருக்கும் மாணவர்களுக்கும் என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் நா.சண்முகலிங்கம்
துணைவேந்தர்,யாழ் பல்கலைக்கழகம்.

## பீடாதிபதியின் வாழ்த்துச்செய்தி



முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடமானது தனது நீண்டகால எதிர்பார்ப்பான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பை இன்று இணையவழி மூலமாக ஆரம்பித்து வைப்பதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். 2006ம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட இந்த இணையவழிக் கல்வி நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக நீண்ட நாட்களின் பின்னர் இன்று நடைமுறைக்கு வருவதையிட்டு இறைவனுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். பேராசிரியர் மோகனதாஸ் அவர்கள் துணைவேந்தராக இருந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த இணையவழிக் கல்வி பின்னர் பேராசிரியர் குமாரவடிவேல பதில் துணைவேந்தராக இருந்த காலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டபோதும் யுத்த சூழ்நிலைகளால் இதனை நடைமுறைக்கு கொண்டுவர முடியவில்லை. இன்று பேராசிரியர் சண்முகலிங்கம் அவர்கள் துணைவேந்தராக இருக்கும் காலத்தில் இந்த இணையவழிக் கல்வி அறிமுகப்படுத்தப்படுவதையிட்டு நான் பெருமையடைகின்றேன்.

தமிழில் முதல்முறையாக இலங்கையில் மட்டுமன்றி உலகத்திலேயே அறிமுகப்படுத்தப்படும் கற்கை நெறியாக BBM இணையவழிக் கல்வி காணப்படுகின்றது. இலங்கையில் மட்டுமன்றி உலகத்தில் பரந்துவாழும் புலம்பெயர் தமிழர்களும் கூட தமது தாய் மொழியில் கல்விகற்று பட்டத்தினைப் பெற்றுக்கொள்ள இக் கற்கைநெறி வகைசெய்யும் தொழில் புரிவோர், பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்தோர் குறிப்பாக நேரடியாக விரிவுரைகளுக்கு சமூகமளிக்க முடியாதோர் தமது ஓய்வு நேரத்தில் இணையவழி மூலமாக இக் கற்கைநெறியை மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருப்பது ஒரு வரப்பிரசாதமென்றே கூறுதல் வேண்டும்.

BBM இணையவழிக் கல்வியை எமது பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்த எமக்கு உதவிய பலருக்கு நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். எமது துணைவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கம் அவர்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களும் இதற்கான அனுமதியைப் பெற்றுத்தருவதில் காட்டிய அக்கறை பாராட்டுக்குரியதாகும். அதேபோல் இதனை முன்னெடுப்பதற்கு முன்னாள் இணைப்பாளர் திரு.அருள்வேல் அவர்களும் வெளிவாரிப் பட்டப்படிப்பு அலகின் இணைப்பாளர் திரு.சிவராஜா அவர்களும் புதிய நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் திருமதி.யோகேந்திரராஜா அவர்களும் எடுத்துக்கொண்ட அக்கறையினையும் பெருமையுடன் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அத்துடன் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட விரிவுரையாளர்கள், துறைத் தலைவர்கள், உதவிப்பதிவாளர், கல்விசாரா உத்தியோகத்தர்கள் எல்லோருக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இதே போல் காலத்தின் தேவை கருதி இணையவழிக் கல்வியை வெளிவாரியாக அறிமுகப்படுத்த உதவிய வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் அலகின் உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) நிதியுதவியுடன் உயர்கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட தொலைக்கல்வி நவீனமயமாக்கல் திட்டத் (DEMP) தின் கீழ் BBM இணையவழிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்குரிய பயிற்சிகளும், ஆலோசனைகளும் DEMP அமைப்பினூடாகவே வழங்கப்பட்டு வருகின்றது. இத்தகைய இணையவழிக் கல்வியைப் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் கற்கப் போட்டியிடுவதை காணமுடிந்தாலும் ஆண்டுதோறும் இதில் 100 பேரை மட்டுமே எம்மால் இணைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம். இவர்களுக்கு தரமான கல்வியை வழங்கி அவர்களை எதிர்காலத்தில் நல்ல பட்டதாரிகளாகவும் பயனுள்ள நாட்டுப் பிரசைகளாகவும் மாற்றுவதே எமது பிரதான இலக்கு என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருவதுடன் இக் கற்கைநெறிக்கான வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

க.தேவராஜா,
பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## POSITIVE MOVE TOWARDS THE NATIONAL CAUSE



The Distance Education Modernization Project (DEMP) funded by the Asian Development Bank (ADB) was commenced by the government in 2003 and is effective till 2009. Project's aim is to boost enrollment, quality and relevance of learning through distance education so that it will immediately facilitate on- line distance education delivery through National On- line Distance Education Service (NODES) composed of a national distance education ICT network and numerous Multimedia Access Centers (NACs) established in various parts of the country. There are over 34 Partner Institutions including 6 conventional Universities, the University of Jaffna and many Private Institutions and Professional Associations engaged in the development and delivering of 42 on- line degrees/ diplomas and post graduate programmes through NODES receiving financial and technical assistance from DEMP.

Launching of the "Bachelor of Business Management" on-line programme in **Tamil Language** by the University of Jaffna is a positive move towards the national cause in improving the quality of the Managers and Professionals of the country especially in northern and eastern provinces. I wish to congratulate University of Jaffna for initiating a significant course through on- line learning.

**N.S Abeyawardena**
**Project Director**
**Distance Education Modernization Project**

## HISTORIC EVENT

It is with great pleasure I use this opportunity to congratulate University of Jaffna on the launching of the Bachelor of Business Management (BBM) Online programme. This is a historical event in Sri Lanka as BBM became the first ever online programme launched through National Online Distance Education Service (NODES) in Tamil medium. It is very timely to launch an online programme in Tamil medium during the present post war period where many Tamil youth across the country who were compelled to miss out on the opportunity for further education would find it very useful.



The University of Jaffna being one of the most prestigious universities in Sri Lanka must play the lead role in disseminating more and more Tamil programmes online which will pave way not only for Tamil speaking people who live in Sri Lanka but also for many others overseas. Let me warmly wish all the very best to the Vice Chancellor, Deans, Heads of Departments and all academic and non-academic staff of University of Jaffna for successful implementation of this programme.

**Eng. Lalith Liyanage**
**Project Manager, Distance Education Modernization Project**
**Ministry of Higher Education**

## FIRST EVER ONLINE DEGREE PROGRAMM



Launching of the Bachelor of Business Management (BBM) on-line external degree program is indeed a historic event for the University of Jaffna, the DEMP as well for the whole country. The fact that this is the first ever online degree program offered in Tamil medium is of great importance. I congratulate the University of Jaffna for being able to launch this after years of work in challenging and difficult conditions.

We have been providing training and support towards this, in addition to the grant funds from DEMP. This includes workshops in Jaffna back in 2006, several workshops and training sessions in Colombo and continuous support until now. DEMP also funded the Tamil translation of the *Moodle* learning management system (LMS), without which this program would not be possible to be offered in Tamil.

As the consultant assigned to coordinate with the University of Jaffna, I am very pleased to see that finally the program is launched. I also value the relationships we established with the colleagues at the University of Jaffna during this process. I wish to congratulate the first batch of students who were selected to follow this program and wish everyone involved in the program success. I earnestly hope the University will start more online educational programs in the future and make quality higher education accessible to all who would otherwise be deprived of it.

Dr. Sanath Jayasena
Course Design Consultant
Distance Education Modernization Project (DEMP)

## முகாமைத்துவதுறைத் தலைவியின் வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடமானது இன்று வியாபார முகாமைத்துவமாணி எனும் கற்கைநெறியினை ஆரம்பித்து வைக்கப்படுவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இப்பீடமானது வியாபார நிர்வாக மாணி, வர்த்தக மாணி எனும் இரு கற்கைநெறிகளை உள்வாரியாக வழங்குவதுடன், எல்லோருக்கும் கல்வி என்ற வகையில் வெளிவாரியாக வர்த்த கமாணியையும், வியாபார முகாமைத்துவ மாணியையும் வழங்குவதனையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன். மனித வாழ்வை மேல்நிலையடையச் செய்வது கல்வியே எனும் முதுமொழிக்கிணங்க வேலைத் தலத்திலுள்ளோர், பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படாதவர்கள், பல்வேறு சூழ்நிலை காரணமாக இங்கு இல்லாமல் வெளிநாடு சென்றவர்கள், இன்னும் கல்வியில் முன்னேற ஆர்வம் உள்ளவர்கள் என எல்லோருக்கும் இக்கல்வியை வழங்குவதனையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். மிகவும் விரைவாக ஓடிக்கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், வீட்டில் இருந்தபடியே இணைய வழியூடாக கல்வி கற்கின்ற இக் கல்விப்பாரம்பரியத்தை மேலெடுத்துச்செல்வதற்கு முன்னின்றின்ற பீடாதிபதி, தலைவர்கள், இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், கணனிப் பிரயோக உதவியாளர்கள் [illegible] யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடமானது இன்றுபோல் என்றும் கல்வியிலும் ஏனைய பல செயல்களிலும் பல வெற்றிகளைக் கண்டு பல சிறப்புக்களையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

திருமதி. தேவரஞ்சினி சிவாஸ்கரன், தலைவி/முகாமைத்துவத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## முகாமைத்துவ பேராசிரியரின் வாழ்த்துச் செய்தி



ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி உதவி வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட தொலைக்கல்வி நவீன மயப்படுதல் திட்டம் (DEMP) இலங்கையில் 6 பல்கலைக்கழகங் களும் 34 பங்கு பற்றும் நிறுவனங்களும் இணைந்து 42 டிப்ளோமா/ பட்டச்சான்றிதழ் கற்கை நெறிகளை இலங்கை முழுவதும் இணையவழி கல்வி மூலம் வழங்கி வருகின்றன. இத்துடன் இணைந்ததாக யாழ்பல்கலைக்கழகம் தமிழ்மொழி மூலம் முதன்முதலாக மூன்று வருட வியாபார முகாமைத்துவ கற்கை நெறியினை சம்பிரதாய பூர்வமாக இன்று ஆரம்பித்து வைப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். பல்கலைக்கழகங்களுக்கு புகமுடியாதவர்கள், தொழில் புரிவோர், மிகவும் தொலைக் கிராமங்களில் வாழ்பவர்கள், வெளிநாட்டவர்கள் யாவரும் இக்கற்கை நெறியினை தம்முடைய சொந்த இடங்களிலிருந்து கற்றுக்கொள்ள முடியும். இன்றைய தகவல் தொழில்நுட்ப காலத்தில் எல்லோருக்கும் கல்வி வசதி என்ற "தூரநோக்கில்" சகல மக்களுக்கும் கல்வி கற்பதற்கான வசதியினை யாழ்பல்கலைக்கழகம் முதன்முதலில் ஆரம்பிப்பது பாராட்டுக்குரியதொன்றாகும்.

இக்கல்வி முறையானது எந்தளவுக்கு மரபுரீதியான கல்வி முறையில் இருந்து வேறுபடுகின்றது என்பதனை, அதனுடைய தரம், நோக்கங்களை அடைதல், கிடைக்கப் பெறுகின்ற அறிவின் அளவு என்பனவற்றினைப் பயன்படுத்தி இனங்காண முடியும். இணையவழி கற்கைநெறி மூலம் பல நன்மைகளை கல்வி கற்பவர்கள் பெறும் வாய்ப்புக்கள் உள்ளன. மணவர்களை மையப்படுத்திய கற்கை முறைமை, எழுது வதற்கான முனைப்பு, அதிகளவுக்கு மாணவர்களுக்கிடையே கருத்துப்பரிமாற்றத்துக்கான வசதி, வாழ்நாள் முழுவதும் தரமான பாட விதானக் குறிப்புக்கள், கற்றலில் நெகிழும் தன்மைகள் யாவும் கல்வியில் ஈடுபடுப வர்களுக்கு உதவியாக அமைகின்றன. நவீன உலகில் மிகவும் போட்டிச் சூழலில் முன்னேற வாய்ப்பின்றி முய லும் மக்களுக்கு கல்வியில் முன்னேற இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இத்தகைய சிறப்புமிக்க கற்கைநெறி சிறப்பாக வளர்ச்சி பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர். மா.நடராஜசுந்தரம்
முகாமைத்துவ கற்கைகள் துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

## வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடமானது இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணிக் (வெளிவாரி) கற்கை நெறியை ஆரம்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். உயர்கல்வி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் தொலைக்கல்வி நவீனமயமாக்கல் திட்டத்தின் (DEMP) தேசிய இணையவழித தொலைக்கல்விச்சேவையின் (NODES)) அனுசரணையுடன் இக்கற்கை நெறி ஆரம்பிக்கப்படுகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் நாட்டில் பல்வேறு இணையவழி மூலமான கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் உலகிலேயே இணையவழியில் முதல் தமிழ் மொழி மூலமான முகாமைத்துவ பட்டப்படிப்புகற்கை நெறியின் முதலாவது அணியை வரவேற்பதிலும், இக்கற்கை நெறிககான பாடஅலகுகளை நிறைவு செய்து வழங்குவதிலும் இணைப்பளர் என்ற ரீதியில் பேருவகையும், பெருமிதமும் கொள்கின்றேன். 2006ம் ஆண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்பட்ட போதும் தேக்கநிலையிலிருந்த இக்கற்கை நெறியை 2009 டிசம்பர் DEMP திட்டம் முடிவுக்குவர்முன்னர் ஆரம்பிக்க வேண்டுமென்ற முனைப புடன் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் எமது பீடாதிபதி திரு.க.தேவராஜாவின் முழுமையான ஒத்துழைப்புடனும், சக விரிவுரையாளர்களின் ஆதரவுடனும் என்னால் வெற்றிகரமாக மேற்கொள்ள முடிந்துள்ளது. மேலும், இக்கற்கைநெறியை இன்று இந்நிலையில் ஆரம்பித்து வைப்பதற்கு எனக்கு உறுதுணையாக இருந்த சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாந்தகுமாரி மகேந்திரனையும், தொழிநுட்பரீதியாகவும், ஏனைய வழிகளிலும் உதவிகளைப் புரிந்த எமது பீடத்தின் கணனி போதனாசிரியர் திரு. க. சியந்தனையும், மற்றும் எமது பல்கலைக் கழக கணனி பிரிவைச்சேர்ந்த அனைவரையும், வெளிவாரி அலகு பிரிவினரையும், எமது துறையின் ஏனைய விரிவுரையாளர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூரக்கடமைப்பட்டுள்ளேன். அத்துடன் எமது துணைவேந்தர் பேராசிரியர் N. சண்முகலிங்கன் அவர்களின் ஆதரவுடனும், ஆசியுடனும் இக்கற்கை நெறி ஆரம்பிக்கப்படுவதையிட்டு நான் பெருமிதம் கொள்கின்றேன்.

மேலும் எமது கற்கைநெறியை வடிவமைப்புச் செய்வதற்கான பல்வேறு உபகரணங்களையும், இணையவழி தொடர்பிலான அறிவையும், பயிற்சிகளையும் வழங்கிய DEMP திட்டத்தின் இயக்குனர், வளஆலோசகர்கள், அனைவரையும் நாம் இவ்விடத்தில் நினைவுகூர வேண்டும். குறிப்பாக எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கான ஆலோசகராக 2005ம் ஆண்டிலிருந்து கடமைபுரிந்து வரும் கலாநிதி சனத் ஜெயசேனவிற்கு முக்கியமாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். அவரது அயராத முயற்சியும், ஆலோசனைகளும் எம்மை இன்று இத்தகைய உன்னத நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது என்பதில் ஐயமில்லை. உலகநாடுகளில் வசிக்கும் பல்லாயிரம் தமிழ் மாணவர்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதம் என்பதில் ஐயமில்லை. மேலும் இவர்கள் இதில் இணைந்துகொள்ள ஏதுவாக உலகெங்கும் எமது பல்கலைக்கழகம் கற்றல்மையங்களை நிறுவ எல்லாம் வல்ல இறைவன் துணை புரிய பிரார்த்திக்கின்றேன். இக்கற்கைநெறி வெற்றிகரமாக செயற்பட்டு தனது இலக்குகளை அடைய வாழ்த்துகின்றேன்.

திருமதி ரதிராணி யோகேந்திரராஜா,
இணைப்பாளர்,வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி.

## வெளிவாரி அலகு இணைப்பாளரின் வாழ்த்துச் செய்தி



சமகால தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன் யாழ்ப்பாண பல்கலைக்கழக தொலைக்கல்வி அலகின் இணையத்தள வழி மாணவர்களுக்கும் கிடைக்கப்பெற வேண்டுமென்ற நோக்குடன் இணையவழி மூலமான தொழில் வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறி இன்று அறிமுகம் செய்யப்படுகின்றது. 1991ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வெளிவாரிப்பரீட்சைகள் அலகினூடாக யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் சிறப்புக்கலைத் தேர்வு, இசைமாணி சிறப்புத் தேர்வு, நடனமாணி சிறப்புத் தேர்வு, பொதுக்கலைத் தேர்வு கற்கை நெறிகளும் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தினால் வணிகமாணி சிறப்புத் தேர்வு கற்கைநெறியும் பாரம்பரிய வழிமுறையூடு வழங்கப்படுகின்றன. இவ ஐந்து கற்கைநெறிகளுக்கு மேலாக இணைத்தள வழி மூலமான முறையில் முகாமைத்துவமாணி கற்கைநெறி இன்று வெளிவாரிக்கற்கை நெறிகளில் மேலும் ஒன்றாக அறிமுகமாகின்றது.

பல்கலைக்கழக வாய்ப்புக்களைப் பெறத்தவறியவர்கள் தமது பட்டப்படிப்பினை இணையத்தள வழி மூலம் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இக்கற்கைநெறியூடாக வெளிவாரிப்பட்டப்படிப்புகள் அலகு ஏற்படுத்தி யுளளது.

பாரம்பரிய வழிமுறைக்கற்கை நெறிகளோடு இணையவழித் தொலைக்கல்வி முறையை இலங்கையின் உயர்கல்வி நிறுவனங்களில் அறிமுகமாக்கும் நிகழ்ச்சித்திட்டம் உயர்கல்வி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரனையோடு மேற்கொள்ளப்பட்டது. அதன்பேறாக தொலைக்கல்வி நவீன மயப்படுத்தல் திட்டம் 2006ம் ஆண்டில் (Distance Education Modernization Project – DEMP) முன்னெடுக்கப்பட்டது. அந்நிகழ்ச்சித்திட்டப் பங்காளிகளில் ஒன்றாக யாழ்ப்பாணப் பல்கழைக்கழகமும் இணைந்து கொண்டது. அதன் வழி மேற்கொள்ளப்பட்ட தொடர் செயற்பாடுகளின் பேறாக இணையவழி மூலமான தொழில் முகாமைத்துவமாணி வெளிவாரிக் கற்கைநெறி தொடக்க நிகழ்வு கைகூடியுள்ளது. இக் கற்கைநெறிவழி வெளிவாரி மாணவர்கள் நிறைவான பயனுற வேண்டுமென வாழ்த்துவதில் மகிழ்வுறுகிறேன்.

கந்தையா சிவராஜா
இணைப்பாளர்,வெளிவாரிப்பதிவுகள் பரீட்சைகள் அலகு,
(தொலைக்கல்வி அலகு)
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

## வணிகத் துறைத்தலைவரின் செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள வியாபார. முகாமைத்துவமாணி இணையவழிக் கற்கை நெறியின் (Online Degree Programme) ஆரம்ப நிகழ்வையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அக்கற்கைநெறியின் முதலாவது இணைப்பாளர் என்ற வகையிலும், வணிகத்துறைத் தலைவர் என்ற முறையிலும் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ் மாணவர்கள் அசாதாரண சூழ்நிலையிலும் தமது விடாமுயற்சியுடன் கல்வி கற்று திறமைச் சித்திகளைப் பெற்றிருந்தும் அவர்களில் பலர் பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பை நீண்டகாலமாக இழந்து வந்துள்ளனர். அத்தகைய மாணவர்களின் எதிர்கால நன்மை கருதி வணிகம், கலை, விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைசார்ந்த மாணவர்களுக்கு இணையதள வழிக் கற்கை நெறியை அறிமுகப்படுத்தி அவர்களையும் பல்கலைக்கழகத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பது எமது துறையின் நீண்டகாலக் கனவாக இருந்து வந்தது. இந்நிலையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்வித்திட்டம் இன்று பலரது நீண்டகால உழையின் பயனாக நிறைவு பெறுவது பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்பை இழந்து தவிக்கும் மாணவர்களுக்கும், அவர்களின் பெற்றோருக்கும் மகிழ்ச்சி தரும் பொன்னாளாக இந்நாள் அமையும் என்பதில் ஐயமில்லை.

அதேநேரத்தில் எமது பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது இணையதள வழிக் கற்கை நெறிக் கல்வி என்ற வகையிலும், தமிழில் தொடங்கப்பட்ட முதலாவது கற்கை நெறியென்ற முறையிலும் இந்நிகழ்வு எமது பீடத்திற்கும் பெருமைதரும் நன்னாளாக இருக்கும் என்பதிலும் ஐயமில்லை. எதிர்காலத்தில் இது போன்ற கற்கை நெறிகள் ஏனைய பாடங்களிலும், ஏனைய துறைகளிலும் தொடங்குவதற்கு இந்நிகழ்வு ஒரு தொடக்கப் புள்ளியாக அமையவேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

இன்றைய நிகழ்வையிட்டுப் நாம் பெருமை கொள்ளும் இச்சந்தர்ப்பத்தில் இணையதள வழிக் கல்வியை நவீனமயப்படுத்தப்படும் இலங்கை அரசாங்கத் திட்டத்தின்கீழ் ஆரம்ப நிதியுதவியைப் பெற்று இக்கல்வித் திட்டத்னைங்களை வடிவமைப்பதிலும் என்னுடன் ஒன்றிணைந்து அயராது உழைத்த அனைத்து வணிகத் துறை விரிவுரையாளர்களையும், குறிப்பாக திரு.க.சிவராஜா அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன நினைவுபடுத்திக் கொள்வதில் நான் மனநிறைவடைகிறேன். இன்று எமது இணையதளவழிக் கல்வித்திட்டத்தில் இணைந்து தமது கல்வியைத் தொடரவுள்ள முதலாவது அணி மாணவர்களும், எதிர்வரும் காலங்களில் இணைந்து இக்கல்வியைத் தொடரவுள்ள மாணவர்களும் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கவேண்டும் என்ற அவர்களது நீண்டகாலக் கனவு நனவாகி, அவர்களின் எதிர்காலம் சிறப்புற அமைய என்றும் இறைவனின் நல்லாசிகள் கிட்டும் என்ற நம்பிக கையுடன் அவர்களையும் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

கே.கே. அருள்வேல்
தலைவர், வணிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

விளம்பர அனுசரணை:
இலங்கையின் முன்னோடி வங்கியான
கொமர்ஷல் வங்கி லிமிட்டட்,
ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
COMMERCIAL BANK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மாவட்ட வலம் - மன்னார்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

# English Language - I 31-T-I

### Answer all Questions

Test: 01
Match the job with the description. write the appropriate letter in the box.

a) An apprentice 1) One who has power to enforce law.
b) A chef 2) One who learns a trade under special condition.
c) A magistrate. 3) One who prepare plans and drawings of buildings.
d) A plumber 4) A head cook in hotel or restaurant.
e) A draughtsman 5) One who mends pipes and sanitary ware.

Test: 02
Complete the following dialogue. Use words/phrases given in the box. The first one is done for you.
getup, see. late, watch, look, stand up

Rohan:- Mohan (1) get up it's 9.30 now. You're still in bed. Have you forgotten, we have a class at 10.00?
Mohan:- Oh! I'm so sleepy. I was awake till 4.30 in the morning. Did you (2) .............. the cricket match.
Rohan:- Yes. I did. Did you (3) ................ the spectacular six by Sanath.
Mohan:- Wow! That was superb.
Rohan:- (4) ..................... at the time! Hurry up Mohan. We're going to be (5) .................... for the class.
Mohan:- I can't even (6) ............. straight I'm sure I will fall a sleep in class.

Test: 03
Read and complete the dialogue with the response given the box below.

Candra:- Hello! I'm candra what's your name?
Mala:- (1) ...............................................
Candra:- (2) ...............................................
Mala:- Where do you buy those shoes?
Candra:- (3) ...............................................
Mala:- (4) ...............................................
Candra:- What's the price?
mala:- (5) ...............................................

Five hundred rupees only.
Ragul shoe palace I'm Mala, where are you from?
Where's it?
I'm from Bambalapitiya

Test: 04.
Design a notice for school notice board, informing grade 11 students about the festival and inviting them to take part in the events. Mention the date,time, venue and purpose.

Test: 05.
Write a Paragraph on one of the following. Use about 50 words.
My hobby, My favourite TV programme, My pet.

Test: 06.
Fill in the blanks with suitable words.
for, in, of, to, with
We have got so much from our elders. My grandfather is like a friend .................. mine. at the same time I have the utmost respect ......... him, My grandfather is ........... the garden waiting for me .......... return from school. He's the one who helps me ........... my homework.

Test: 07.
Here is a part of an insurance application form. Now match the information given below with the form. WRITE THE NUMBER of each bit of information in the bank.

**INSURANCE APPLICATION FORM**

Example:
Name:- Miss Kamala Perera.

a) Address:-
b) Age:-
c) Height:-
d) Weight:-
e) What serious illness have you had during the past ten years?

| | |
|---|---|
| 1) 45kgs | 2) Miss kamala Perera |
| 3) 16 years | 4) sister |
| 5) yellow fever | 6) 1.78 meters. |
| 7) 52, High Level Road, Nugegoda | 8) net ball |

Test: 08.
Read the following paragraph and answer the questions given below:
Saman walks to school everyday. The walk from home to school takes him only fifteen minutes. He usually walks to school with his friend Keerthi. Today Keerthi's uncle Nihal took both of them to school in his car.

a) How does Saman usually go to school?
b) How long does he take to go to school?
c) what's his friend's name?
d) How did Saman go to school today?
e) How did his friend go to school today?

# English Language - II 31-T-II

Test: 09.
write a short paragraph about the job you like.

Test: 10.
Fill in the blanks with the suitable articles.
a, an, the.
As we have planned to say at ......... tourist hotel nearby during our stay we require ..................... advance payment in receipt of ............ reservation. I would appreciate ................prompt reply. I have enclosed ..................... self addressed stamped envelope.

Test: 11.
Write a leter to the teacher incharge of Drama that you cannot attend the Drama practice.

Terst: 12
Read the following passage and answer the question below..

Communication.

Communication means sending messages. The message can be information, ideas or feelings. Speaking or writing are types of communication and so is expression on a person's face there were no changes in communication for a long time, letters were the only way to send a private messages. In 1844 telegraph. Then in 1876, alexander Graham bell invented the telephone. Today fax and E-mail messages are sent along telephone wires.

Radio communication was invented in 1875.Signals move through the air and don't need wires. Television made of possible to send moving pictures by radio signals.

Light can now be used to send massage. along wires called optical fibers. Cable T.V systems use optical cables.

Satellites circle the each in space. They bounce signals,such as telephone calls, from one side of earth to the other.

01) What is communication?
02) What are the different types of communication?
03) What was the common way of sending a message in the past?
04) When was the telegraph system used for the first time?
05) who invented the telephone?
06) In modern days ................. and.................. messages are sent through wires.
07) The system of communication that does not need wires is the
08) Describe the optical fibers.
09) what does the satellite do?
10) what is the system that uses optical cable?

Test:13.
Choose the correct form of the phrase for the blanks.

1) Do you know harry? ........................ his school, he told me last week.
a) He leaves b) He's going to leave. c) He'll leave.
2) These uniforms are clean now. They ...............
a) have been washed b) washed them. c) were washed.
3) ................ our last night?
a) you went b) Did you go? c) you were
4) They ............... a new hospital at the moment.
a) have been building. b) are building. c) built.
5) Oh! ......................... my glasses.
a) I'm loossing b) I always lose. c) I've lost.

Test: 14.
Complete the following paragraph using the words given in bracket to form a word that fits the blank space. The first one is done for you.
We all love to see birds in their 1) different (differ) range of colours. Recently a three day2) ................. (exhibit) of photographs featuring birds was held in Galle. The title of it was 'The Feathers' the young 3) ........... (photograph) who had organised it told us that he became a bird - watcher quite unexpectedly. His 4) ............ (curious) about birds turned into a love of bird- watching and then he had started to photograph them. The 5) ................... (select) on display showed how far and wide he had travelled. His photographing of birds had made him quite 6) ..................... (knowledge) about the birds and their habitats.

Test: 15
Given below are five types of professions.
Teaching, Nursing, Farming, Engineering, Fishing. Choose ONE of them and write a composition.
Write in about 175 words.
- describe the profession.
- giving good and bad points about it.
- give your own views on it.

-End-

ஆசிரியர்: திருமதி.V.செல்வரட்ணம்,
சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி,
மன்னார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க விரும்பும் அனைவரும் ஐ.தே.க. கூட்டணியில் சேரலாம்

## அக்கட்சியின் உறுப்பினர் அழைப்பு

கொழும்பு, ஒக். 31

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க விரும் பும் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக் கூட்டமைப்பில் இணையலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்காக மிகத் தீவிரமாக முயற்சி செய்துவரும் ஜே.வி.பிக்குக் கூட அழைப்பு விடுப்பதாக ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் எம்.பியான ரவி கருணாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் எல்லாம் இப்போது சீரழிந்துபோயுள்ளன. விலைவாசி அதிகரித்து மக்கள் வாழ முடியாமல் கஷ்டப்படுகின்றனர். தினமும் பொருள்களுக்கான வரிகள் அதிகரிக்கப்படுகின்றன.

வரவு - செலவுத் திட்டத்தைக் கூட சமர்ப்பிக்க முடியாத அளவுக்கு அரசு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளன. ஆனால், அதற்கு வெவ்வேறு பொய்க்காரணங்களை அரசு கூறுகின்றது.

அமைச்சர்களை பராமரிப்பதற்கே அரசு பணம் செலவிடுகிறது. அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைத்தாலே போதும். அதனால் மக்களுக்குப் பாரிய நிவாரணம் கிட்டும்.

அமைச்சர்களின் எண்ணிக்கையை 35 ஆகக் குறைத்தால் கோடிக்கணக்கான பணத்தை மீதப்படுத்தி அதை நாட்டு மக்களின் முக்கிய தேவைகளுக்குப் பயன்படுத்தலாம்.

அரசு தற்போது அரச வங்கிகளின் வட்டி வீதத்தைக் குறைக்குமாறு அனைத்து அரச வங்கிகளுக்கும் உத்தரவிட்டுள்ளது. இதை நான்கரை வருடங்களுக்கு முன்பே அரசு செய்திருக்கவேண்டும். தற்போது தேர்தல் நெருங்குவதால்தான் அரசு இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

இவ்வாறு வட்டி வீதத்தை குறைப்பதைக் காட்டிலும் அரச ஊழியர்களின் சம்பளத்தைக் கூட்டலாம். அதுபோல் எரிபொருள்களினதும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களினதும் வரியைக் குறைக்கலாம். ஆனால், இந்த வருடம் அரச ஊழியர்களின் சம்பளத்தைக் கூட்ட முடியாது என்று அரசு கூறுகின்றது.

அரசின் பிழையான பொருளாதாரக் கொள்கை காரணமாக தனிநபர் கடன் 2 லட்சத்து 37 ஆயிரம் ரூபாவாகவுள்ளது. இதுவொரு அபாயகரமான நிலைமை.

இப்படியானதொரு நிலையில் இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதே நல்லது. நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க விரும்பும் அனைவரும் எமது புதிய கூட்டமைப்பில் இணையலாம்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற் காகத் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ள ஜே.வி.பி. கூட எமது கூட்டமைப்பில் இணை யலாம். நாம் ஜே.வி.பி. உட்பட அனைவ ருக்கும் அழைப்பு விடுக்கின்றோம். - என் றார்.

(சி)

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி சேரவேண்டிய அவசியம் எமக்கில்லை

## ஜே.வி.பியின் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.31

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணியாக இணைந்து செயற்பட வேண்டிய அவசியம் தமக்கு இல்லை - என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இச்செய்தியை ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ரத்துச் செய்வது தொடர்பான கொள்கையின் கீழ் ஜே.வி.பியும் தமது கட்சியில் இணைந்து கொள்ளலாம் என நேற்றுமுன்தினம் ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்திருந்தார். இதற்கு பதிலளித்தபோதே ஜே.வி.பியின் பிரதான செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(அ-சி)

## உரமானியக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக்.31

தென்மராட்சி தெற்கு, தனங்கிளப்புக் கமக்காரர் அமைப்பின் எல்லைக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான உரமானியமும் செலவுத் தொகை காசோலையையும் இன்று கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளன.

உரமானியத்திற்கு விண்ணப்பித்த நெற்செய்கையாளர்கள் அவற்றினைப் பெற்றுக்கொள்ளுமாறு அமைப்பின் செயலாளர் சி.புவனதாஸ் அறிவித்துள்ளார். (1-207)

## யாழ்.பிரதேச செயலகத்தில் இன்று கண் பரிசோதனை

வண்ணை, ஒக்.31

யாழ்.பிரதேச செயலகத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை இலவசமாகக் கண் பரிசோதனை செய்யப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இலவச பரிசோதனையை முடித்துக் கொண்டவர்கள் உடனடியாகவே உற்பத்திச் செலவை ஈடுசெய்யும் விதத்தில் மிகவும் குறைந்த கட்டணங்களில் கண்ணாடிகளையும் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (1-160)


**வீடு விற்பனைக்கு**

மானிப்பாய், மெமோறியல் வீதியில் 4½ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

(90285) தொடர்பு: 0717353524.

**காணி விற்பனைக்கு**

ஆலடி, மானிப்பாய் றோட், உடுவிலில் (ஆலடி சந்தைக்கு அருகில்) 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779519973, 0115843282, 0776855846. (90339)

**வேலை ஆள்கள் தேவை**

சாவகச்சேரியில் இயங்கும் உணவகத்திற்கு

- சமையல் வேலை தெரிந்தவர்கள்
- கொத்து றொட்டி தயாரிப்பவர்
- தேநீர் தயாரிப்பவர்
- உணவு பரிமாறுபவர்

போன்ற வேலைகளுக்கு உடனடியாக வேலையாள்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: S.K.உணவகம், கண்டி வீதி, சாவகச்சேரி. தொ.பே.: 0778607151 (90432)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் 'சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

*Manufactured By:*
Sithara Products
*Puttalam Road, Chilaw.*
*(Reg.No: 6382)AR/PR/No.228*

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப்பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

சிவமயம்

# திருமண அழைப்பு

மஹா ராஜ ராஜ ஸ்ரீ...
அன்புடையீர்!
ஓம் ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விரோதி வருடம் ஐப்பசித் திங்கள் 16ஆம் நாள் திங்கட்கிழமை (02.11.2009) அஸ்வினி நட்சத்திரமும் பூரணைத் திதியும் சித்தயோகமும் சுக்கிர ஹோரையும் கூடிய முற்பகல்11 மணி 04 நிமிடம் முதல் 12 மணி 16 நிமிடம் வரை உள்ள மகர லக்கின சுபமுகூர்த்த சுப நல்வேளையில்

வடமராட்சி துன்னாலை சாரதா பீட
சமஸ்கிருத வித்தியாசாலை காசிய கோத்திரம்
சிவஸ்ரீ இராமசந்திர ஐயர் இராஜலட்சுமி
அவர்களின் பௌத்திரியும்
சிவப்பிரம்மஸ்ரீ ராம்.கெங்காதரக் குருக்கள்
நந்தினிதேவி தம்பதியரின் ஏக புதல்வி
சௌபாக்கியவதி ஹம்ஸத்வனி
என்கின்ற வதுவையை

வடமராட்சி நவிண்டில் கரணவாய் மத்தி சாண்டில்ய கோத்திரம்
சிவஸ்ரீ இராமலிங்கக் குருக்கள் சீதாலட்சுமி
அவர்களின் பௌத்திரனும்
சிவப்பிரம்மஸ்ரீ வேதநாயக சர்மா
ராஜேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட
குமாரனுமாகிய
சிரஞ்சீவி சிவராம சர்மா
என்கின்ற வரனுக்கு

கன்னிகாதான திருமாங்கல்ய தாரண பாணிக்கிரஹணம் செய்வதாய் குலனை விநாயகர், அல்லையம்பதி முருகன் திருவருள் துணை கொண்டு மதிப்பிற்குரிய பெரியோர்களின் நல் ஆசியுடன் மேற்படி முகூர்த்தம் அல்லையம்பதி முருகப் பெருமான் ஆலய மண்டபத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் இஸ்டமித்து பந்துக்களுடன் வருகை தந்து மேற்படி முகூர்த்தத்தை நடத்தி வைத்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேற்படி அன்று காலை 6 மணிக்கு மணமகன் இல்லத்தில் சமாவர்த்தனம் நடைபெறும்.
பிற்பகல் 4 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

சிவப்பிரம்மஸ்ரீ ராம். கெங்காதரக் குருக்கள் (மயிலையா)
நந்தினிதேவி தம்பதியினர்,
அல்லையம்பதி தேவஸ்தானம்,
துன்னாலை, கரவெட்டி.
0212263378.

இருவீட்டார் அழைப்பு. [illegible] அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சிவப்பிரம்மஸ்ரீ ரவேதநாயக சர்மா
ராஜேஸ்வரி தம்பதியர்,
நவிண்டில், கரணவாய் மத்தி,
கரவெட்டி.
0263204208.

(சி/561500)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை மாணவர் நிதியம் யாழ்.மாவட்ட மாணவர்களுக்குக் கல்வி உதவி

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்காக அவுஸ்திரேலியாவில் இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் கல்வி உதவியை வழங்கி வருகின்றது.

போரினால் தந்தையை இழந்த மாணவர்கள் 83 பேருக்கு சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்தின் மூலம் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு அலுவலரின் உதவியுடன் பிரதேச செயலகங்களில் வைத்து நிதியுதவி வழங்கப்படுகின்றது.

இதில் 2009 ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. தெரிவு செய்யப்பட்டு நிதிபெறும் பிள்ளைகளுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் வரும்போது 2 ஆம் தவணைப் பரீட்சைப் பெறுபேறு, நிதிக் கொடையாளிகளுக்கு எழுதிய கடிதம், இதுவரை புகைப்படம் கொடுக்காதவர்கள் புகைப்படம் என்பனவற்றுடன் வருகைதர வேண்டும் எனவும் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் கேட்டுள்ளது.

இந்த உதவிப் பணம் எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலகத்திலும் 4 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10 மணிக்கு சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்திலும் 5ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலகத்திலும் பிற்பகல் ஒரு மணிக்கு பருத் தித்துறை பிரதேச செயலகத்திலும் வழங்கப்படும் எனவும் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் தெரிவித்துள்ளது. (203-10)

# எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவில் வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.31

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களில் எழுதுவினைஞர் மற்றும் சுருக்கெழுத்தாளர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எழுதுவினைஞர் பதவிக்கு விண்ணப்பிப்போர் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே தடவையில் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருத்தல். புதிய பாடத்திட்டமாயின் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

உயர்தரப் பாடத்திட்டத்தில் மொழி ஒரு பாடமாக இல்லாதிருப்பின் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் மொழி பாடத்துக்குத் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

சுருக்கெழுத்து, தட்டெழுத்து தொடர்பாக விண்ணப்பதாரிகளின் இயலுந்தன்மை சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்படும்.

சுருக்கெழுத்தாளர் பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பிப்போர் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தலுடன் ஐந்து பாடங்களுக்குத் திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும். தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் பயின்று நீதிமன்றமொன்றில் செயன்முறைப் பயிற்சியும் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் ''வடக்கு, கிழக்கு மாகாண நீதிமன்ற எழுதுவினைஞர் மற்றும் சுருக்கெழுத்தாளர்'' எனக் குறிப்பிடப்பட்டு ''செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அலுவலகம், த.பெ. 573, புதுக்கடை, கொழும்பு-12'' என்னும் முகவரிக்கு எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (203-201)

# மீள் குடியேறியவர்களில் சிலருக்கு 5 ஆயிரம் ரூபா உதவுதொகை கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம்,ஒக்.31

குடாநாட்டில் மீள் குடியேற்றம் செய்யப்படுபவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஒரு பகுதியினருக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

குடாநாட்டுக்கு அழைத்து வரப்படுபவர்களுக்கு கடந்த வாரம் தொடக்கம் உடனடியாக இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

ஆனால் கடந்த மாதங்களில் இங்கு வந்தவர்களுக்கு இந்நிதி உதவி கிடைக்கவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

எந்த வகையான வருமானமும் அற்ற நிலையில் அவசர தேவைகளுக்குக்கூட சிறு தொகைப்பணமும் இன்றி இவர்கள் சிரமம் அடைந்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (203- 86)

# புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

**தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்**

புலேந்திரன் தயாபரன்- 162, சிவசண்முகமூர்த்தி சிவதர்சன்- 160, சிந்துஜா சுதாகரன்- 155, அன்ரன் ஜெயராசா சுமன்ராஜ்- 154, திவ்வியா நடராஜன்- 152, சாமினி சிவராசா- 150, மரியதாஸ் - மரிய ஜெனீபன் - 147, சுவீனா சின்னப்பு - 145, கிருசாந்தினி கந்தசாமி- 144, ஜெயஸ்ரீ ஹரிகரன் - 140

**வெல்லை சிவகுரு வித்தியாசாலை**

தனுசியா சிறீஸ்கந்தராசா- 140

**வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்**

சிவதாசன் பானுசியா- 157

(கடந்த 27.10.2009 அன்றைய உதயன் பத்திரிகையில் வெளியாகிய இப்பாடசாலையின் பெறுபேறு தவறுதலாக கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. என்று பிரசுரமாகிவிட்டது).

# மக்களின் பிரச்சினைகளை நீதிமன்றுக்குக் கொண்டு செல்லாமல் தீர்வுகாண்பதற்காகவே மத்தியஸ்தர் சபை உதவுகின்றது

## யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி விக்னராஜா உரை

நல்லூர்,ஒக்.31

பாமர மக்கள் தமக்கிடையே ஏற்படும் பிணக்குகளை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லாமல் தீர்வுகாண மத்தியஸ்தர்சபை உதவுகிறது-என்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் மத்தியஸ்தர் சபை அங்குரார்ப்பணமும் உறுப்பினர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கோப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்றன.

இதில் நீதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில் :-

1988 ஆம் ஆண்டின் 128 ஆம் இலக்க மத்தியஸ்தர் சபை சட்டம் உருவாக்கப்பட்டது. ஒருவர் தனது உரிமையை வலியுறுத்த மற்றவர் அதனை மறுக்கும்போது பிணக்குகள் ஏற்படுகின்றன.

இருவர் தகாதது செய்யும்போது குற்றங்கள் உருவாகின்றன. இவ்வாறு ஏற்படும் பிணக்குகளை இணக்கமாக மன மாற்றம் ஏற்படக்கூடிய தீர்வுகளைக்காண இந்தச் சபை உதவுகிறது.

பிணக்கில் உரிமைக்கு உரித்தில்லாத ஒருவர் தனது நிலையில் உண்மையை உணரச் செய்யும் வகையிலும் தாழ்வு மனப்பான்மை தோல்வி மனப்பாங்கு ஏற்படாதவாறும் மீண்டும் அந்தப் பிணக்கு ஏற்படாத வகையிலும் இணக்கம் ஏற்படுத்த வேண்டும்.

உறுப்பினர்களின் கடமை இருதரப்பினதும் கோரிக்கையைப் பகுத்தாராய்ந்து உண்மை நிலையை இருவருக்கும் உணர்த்துவதேயாகும்-என்றார்.

கோப்பாய் பிரதேச செயலர் உரையாற்றுகையில்:-

மத்தியஸ்தர் சபை அமைப்பு எமது மக்களுக்குக் கிடைத்த அருஞ்சொத்து. நிதியை நிலைநாட்டக் கூடிய சந்தர்ப்பம் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் மூலம் பிரதேச செயலர்கள் கிராம அலுவலர்களின் செயற்பாடுகளின் நெருக்கடிகள் ஓரளவு குறைவதால் அவர்கள் தமது இதர கடமைகளில் கவனம் செலுத்தக் கூடியதாக இருக்கும்.

உறுப்பினர்கள் தமது கடமைகளைச் சரியாகச் செய்து சமூகத்தில் மேலும் மதிப்புப் பெறக் கூடியதாக நடந்து கொள்ளல் வேண்டும்-என்றார். (203-111)

# வலி. பனை, தென்னை கூ. சங்க ஸ்தாபகர் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.31

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஸ்தாபகர் சு. நடேசு, மறைந்த பொது முகாமையாளர் க.சந்திரராசா ஆகியோரது நினைவு தினமும், கூட்டுறவு தின விழாவும், புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வுகளும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மேற்படி சங்க மானிப்பாயிலுள்ள கலையரங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

மேற்படி சங்கத்தலைவர் க. மெய்யழகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம், மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்திர ஜெயவீர, ஈ.பி.டி.பியின் தேசிய அமைப்பாளர் ஜீவரத்தினம், வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தலைவர் த. சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (203- 7)

# யாழ். சைவபரிபாலன சபையினர் நடத்தும் ஆறுமுகநாவலர் குருபூசை தின போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.31

யாழ். சைவபரிபாலன சபையினர் நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்தையொட்டிய பேச்சு, கட்டுரை போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

# மூன்றாவது மாடியின் கட்டடப்பணி பூர்த்தியில்

யாழ்ப்பாணம், ஒக்.31


யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுவரும் மூன்றாவது மாடிக் கட்டடம் இவ்வருடம் முடிவடைவதற்கு முன்னர் திறந்து வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் கட்டட வேலைகள் யாவும் பூர்த்தி அடையும் தறுவாயில் உள்ளதாகவும் தற்போது 'லிப்ற்' வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (203-224)

# யாழ். வணிகர் கழகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ். வணிகர் கழகத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா இன்று சனிக்கிழமை மு.ப 11.10 மணிக்கு மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள வணிகர்கழகத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சகல வர்த்தகர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (203- 7)




# மீளக்குடியேறிய மாணவருக்கு கணனிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.31

குடாநாட்டில் மீளக்குடியமர்த்தப்பட்டிருக்கும் மாணவர்களுக்கான உயர்கல்வி வேலை வாய்ப்புத் தொடர்பான ஐ.ஐ.எஸ் கணனி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கருத்தரங்கும், கலந்துரையாடலும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள ஐ.ஐ.எஸ். கணனி நிறுவனத்தில் நடைபெறவுள்ளன.

உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வியும் வேலை வாய்ப்பும் என்னும் தலைப்பில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களே கலந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-204-160)



வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பிரிவின் மத்தியஸ்த[illegible] பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் உரையாற்றுவதையும் யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா மத்தியஸ்தர் சபை தவிசாளருக்[illegible] சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மத்தியஸ்தர் குழு உறுப்பினர்களையும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# John Keel's Holding, Colombo

GATEWAY Language Centre

## வழங்கும் புலமைப்பரிசில் திட்டத்தின்

# "English for life"

**முதற்தொகுதி வகுப்புக்கள் 2009.11.05 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.**

1. இப்புலமைப்பரிசில்களை முதலில் பதிவுசெய்து கொள்ளப்படும் 150 மாணவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது சம்பந்தமான நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானதாகும்.
2. மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் Refundable Deposit ரூபா 500 அறவிடப்பட்டு ஆங்கிலப்பாடப் புத்தகம் வழங்கப்படும்.
3. மாணவர்களுக்கான பதிவுகள் 2009.11.01 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.கஸ்தூரியார் வீதி, 347ஆம் இலக்க Gate Way English Language Center இல் நடைபெறும்.
4. மேலதிக விவரங்களை பதிவின்போது பெற்றுக்கொள்ளலாம்.
5. தெரிவு செய்யப்படக்கூடிய மாணவர்களின் பெயர்ப்பட்டியல் கீழே தரப்படுகின்றது.

**பதிவுத் திகதி: 01.11.2009**

டினிசின்ஸ்கா டியோனியஸ் (சுன்டுக்குளி), துளசி வந்தனா மகேந்திரா (நல்லூர்), சிவ்மங்கை சண்முகலிங்கம் (யாழ்ப்பாணம்), டினோஷமாலின் ஜெயக்குமார் (யாழ்ப்பாணம்), கயல்விழி சபாரத்தினம் (கந்தர்மடம்), சுகன்ஜா ஸ்ரீஸ்கந்தராஜா (திருநெல்வேலி), ஆரணியா எங்கரசு (நீர்வேலி), அர்ச்சனா தியாகராஜா (கோண்டாவில்), துஷ்யந்தி லோகநாதன் (திருநெல்வேலி), யூடிநிரோசா பொன்ராஜா (யாழ்ப்பாணம்), தட்சிகா ஜெயபாலச்சந்திரன் (சுண்டுக்குளி), சுதர்சனா சபாரட்ணம் (அச்சுவேலி), சாமினி நிர்மலநாதன் (ஓட்டுமடம்), சிந்துரேகா லோகேஸ்வரன் (சுன்னாகம்), தர்மரட்ணம் ஹரிகரன் (கோப்பாய்).

கிங்ஸ்ரன் லிறிப்லேயன் (யாழ்ப்பாணம்), பௌத்திரியா தர்மரட்ணம் (நல்லூர்), உத்தமி சுகிதன் (கந்தர்மடம்), ஜசிந்தா பாலசுப்பிரமணியம் (உரும்பிராய்), துஸ்ளா இராமச்சந்திரா (உடுவில்), தர்மிளா கதிரவேல் (சுன்னாகம்), மகிழினி சர்வானந்தன் (யாழ்ப்பாணம்), செல்வரட்ணம் பிரதீபன் (திருநெல்வேலி).

தயாளினி செல்வராஜா (கரணவாய்), தர்சிகா முருகேசு (நீர்வேலி), சுமங்கலி கந்தசாமி (நீர்வேலி), பிரசாந்தினி சிவபாலன் (பிறவுண்றோட்), கணேசநாதன் கோகுலன் (வண்ணார்பண்ணை), நடராசா துஸ்யந்தினி (நீர்வேலி), சிவதனுஷா சிவராஜா (நல்லூர்), ரி.கோசலாதேவி (திருநெல்வேலி), துரைலிங்கம் மலைமகன் (புலோலி).

புவிதாஞ்சலி பாலசுப்பிரமணியம் (நல்லூர்), குகநாதன் குணதீபன் (யாழ்ப்பாணம்), சிவராம் சபாரட்ணம் (அச்சுவேலி), காசிநாதன் சோதிநாதன் (வரணி), ரகு ரேணுகா (நல்லூர்), ஜீவிதா புஸ்பாகரன் (உரும்பிராய்), பிரிதிவிராஜ் கிஷோராஜ் (வண்ணார்பண்ணை), தர்மபாலன் சுரேசன் (காரைநகர்), எஸ்.ஜீவிதன் (திருநெல்வேலி).

ரேவதி ஸ்ரீரகுலேந்திரன் (துன்னாலை), நிவிர்த்திதா தனிநாயகம் (யாழ்ப்பாணம்), வானதி பத்மநாதன் (சுண்டுக்குளி), எஸ்.சோபிதன் (கொக்குவில்), கஜாளினி சுந்தரலிங்கம் (சாவகச்சேரி), தங்கவடிவேல் குருபரன் (வல்வெட்டித்துறை), கௌதமி சுதாகரன் (கரவெட்டி), விஜிதா கணேசன் (கந்தர்மடம்), ஹேமச்சந்திரா பரமேஸ்வரன் (சித்தங்கேணி), கவிதா ஸ்ரீஸ்கந்தராசா (தும்பளை), சிவசாந்தசீலன் கலைவாணன் (வண்ணார்பண்ணை).

நடேசபிள்ளை குகதாசன் (ஏழாலை), லோஜிதா நவரட்ணம் (சாவகச்சேரி), சுந்தரராசா தனுராஜ் (திருநெல்வேலி), ரிஷிகேசனி சத்தியநாதன் (வண்ணார்பண்ணை), சாந்தசக்தி கந்தலிங்கம் (குப்பிழான்), தியாகராஜா அனுஜன் (கொக்குவில்), கணேசபாலேந்திரன் கதிசெல்வன் (யாழ்ப் பாணம்), சுபாஷினி நடராஜா (உரும்பிராய்), பாலேந்திரன் திவாகரன் (கரவெட்டி), ரஞ்சிதா சாம்ப சிவம் (நல்லூர்).

பிரியமதுரா மயில்வாகனம் (சுண்டுக்குளி), காயத்திரி ஆத்மாநந்தன் (கொக்குவில்), சாளினி விநாயகமூர்த்தி (தம்பசிட்டி), பாலச்சந்திரன் ஜனாலினி (தம்பசிட்டி), ஸ்ரீஸ்கந்தராஜா கணதீபன் (இணுவில்), குணசிங்கம் கேதாரன் (அரியாலை), சிந்துஜா சின்னராஜா (வண்ணார்பண்ணை), புவிதா யோகேஸ்வரன் (கல்வியங்காடு), ரவீந்திரசர்மா ஜனார்த்தனசர்மா (நல்லூர்), பாஸ்கரன் ரூபராஜ் (ஆறுகால்மடம்).

அம்பிகைபாகன் ஸ்ரீராகவன் (நயினாதீவு), விநாயகமூர்த்தி அனுசன் (நீர்வேலி), விநாயமூர்த்தி அனுரதன் (நீர்வேலி), குபேதினி நாகரட்ணம் (ஆறுகால்மடம்), சரண்யா குணரட்ணம் (ஆனைக்கோட்டை), சத்தியலோஜினி பாஸ்கரன் (ஆறுகால்மடம்), மதுரா அருள்ராஜசிங்கம் (யாழ்ப்பாணம்), விசாலினி கருப்பையா (யாழ்ப்பாணம்), தர்ஷிகா சிவரட்ணம் (கொக்குவில்), கிருஷாந்தினி செல்வரட்ணம் (ஆறுகால்மடம்).

தாரணி ரகுநாதன் (நல்லூர்), தீபிகா செல்வநாதன் (கொக்குவில்), ரவிவதனி துரைசிங்கம் (திருநெல்வேலி), ஜனனிகா வரதராஜா (கொக்குவில்), ஜசித்திரா சிவாநந்தராஜா (சுன் னாகம்), சஜீதா சிவானந்தராஜா (சுன்னாகம்), அம்சனா முருகையா (இணுவில்), சோதிநாதன் மயூரி (நீர்வேலி), ஜனனி நித்தியானந்தன் (அராலி தெற்கு).

இந்துஜா இராசையா (கைதடி), தர்ஷினி சிவகணேஷ் (திருகோணமலை), வினோதினி வேலாயுதபிள்ளை (நல்லூர்), சித்திரவதனி சண்முகதாஸ் (கோப்பாய்), நிமலினி இராசலிங்கம் (கொக்குவில்), சிவானந்தி ஜெயசிங்கம் (சுன்னாகம்), பாலசூரியன் நிஷாந்தன் (யாழ்ப்பாணம்), கௌதிகா பால சூரியன் (யாழ்ப்பாணம்), சயந்தா கருணாகரன் (புத்தூர்), சயந்தினி தவராஜசிங்கம் (வண்ணார்பண்ணை), கௌசலியா இராஜேந்திரன் (கொக்குவில்), ரட்ணகுமாரன் சுஹாஷினி (கொக்குவில்), தர்ஷிகா யோகேந்திரன் (யாழ்ப்பாணம்).

குணசிங்கம் யகீந்தன் (அளவெட்டி), ரட்ணசிங்கம் தனுஷன் (அளவெட்டி), அமிர்தலிங்கம் அமிர்தாயன் (அளவெட்டி), தேனுகா ஜெரோமியஸ் (யாழ்ப்பாணம்), கஜேந்தினி கனகராஜா (கொக்குவில்), ஜயபாலினி ராஜரட்ணம் (கொக்குவில்), வானதி சிவநாதன் (மானிப்பாய்), ஜெசிந்தா ஜெபாலினி கிருபாமூர்த்தி (மானிப்பாய்).

கிறிஸ்ரினா டிலோஜினி (உடுவில்), யேசுராஜா பிரான்சிஸ் றெஜிகுமார் (குருநகர்), கார்த்திகா சண்முகநாதன் (கொக்குவில்), பிரபாஜினி செல்வரட்ணம் (நீர்வேலி), வி.நிதர்சன் (ஆனைக் கோட்டை), ரியூட்டர் கோட்வின் செபரட்ணதாஸ் (யாழ்ப்பாணம்), மரிலின் செபரட்ணதாஸ் (யாழ்ப் பாணம்), தேவயாசி வீரசிங்கம் (யாழ்ப்பாணம்).

ரஜிந்தி பெலிசியா டேவிட் (யாழ்ப்பாணம்), பாலேந்திரன் மகாநந்தி (பண்டத்தரிப்பு), பாலேந்திரன் வாகீசன் (பண்டத்தரிப்பு), ஜெயராஜா டெனிசிகா (சுன்னாகம்), ஜெயராஜா குயின்சிகா (சுன்னாகம்), ஜெயவர்ணா தெய்வேந்திரராஜ் (பொன்னாலை கிழக்கு), அபிராமி இந்திரகு (சுழிபுரம்), கௌசல்யா ஜெயரட்ணம் (சுழிபுரம்), சுகன்யா உதயகுமாரன் (சுழிபுரம்), ரதி பரமலிங்கம் (சுழிபுரம்).

சோபனா உதயகுமாரன் (சுழிபுரம்), சசிகலா முருகமூர்த்தி (சுழிபுரம்), எம்.விஜி (சித்தங்கேணி), கௌசிகா சிறிதாமோதரராஜா (வட்டுக்கோட்டை), ஞானகுரு காவர்த்தன் (விக்டோறியாக் கல்லூரி, சுழிபுரம்), கே.கயல்விழி கணநாதன் (விக்டோறியாக் கல்லூரி, சுழிபுரம்), கனிமொழி கணநாதன் (விக்டோறியாக் கல்லூரி, சுழிபுரம்), மாலதி இராமகிருஷ்ணமூர்த்தி (விக்டோறியாக் கல்லூரி, சுழிபுரம்), மகாலட்சுமி ஜெகதீஸ்வரன் (விக்டோறியாக் கல்லூரி, சுழிபுரம்), சிந்துஜா கைலைநாதன் (விக்டோறியாக் கல்லூரி, சுழிபுரம்), கஜானா ஜெகநாதன் (விக்டோறியாக் கல்லூரி, சுழிபுரம்), சிவனேஸ்வரன் நகுலேந்திரன் (விக்டோறியாக் கல்லூரி, சுழிபுரம்), கார்த்திகா மகேஸ்வரன் (விக்டோறியாக் கல்லூரி, சுழிபுரம்), பிரியங்கா தேவராசா (சுழிபுரம்).

கனூட் ஏனஸ்ற் எல்ட்மன்சன் (குருநகர்), குமரேஸ்வரன் பிரதீபன் (யாழ்ப்பாணம்), வினோதினி தர்மலிங்கம் (கொக்குவில்), கஜேந்தினி நவரட்ணம் (ஆறுகால்மடம்), தர்மிளா கதிரவேல் (சுன்னாகம்), லோஜினி செல்வரட்ணம் (சுன்னாகம்), செல்வரட்ணம் பவதாஸன் (சுன்னாகம்), சுகுமார் சியாம்குமார் (மானிப்பாய்), ஸ்ரீஸ்கந்தராஜா காந்தீபன் (இணுவில்), இராமசாமி கிருபன் (கொக்குவில்), அரியரட்ணம் கிருபன் (யாழ்ப்பாணம்).

கஜேந்திரன் குமாரகுலசிங்கம் (இணுவில்), மேரி பிரியதர்ஷனி தேவதாசன் (யாழ்ப்பாணம்), தர்சா இராமச்சந்திரா (சுன்னாகம்), கஸ்தூரி சபாரட்ணம் (யாழ்ப்பாணம்), நதியா ராம்கோபால் (மானிப்பாய்), சிந்துஜா லட்சுமிகாந்தன் (மானிப்பாய்), கௌசிகா இராஜசேகரன் (கொக்குவில்), தனுஷா கனகரட்ணம் (அரியாலை).

## தவறிவிட்டது

வவுனியா நலன்புரி முகாமிலிருந்து கடந்த புதன்கிழமை இரவு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் விடுவிக் கப்பட்டபோது கே.குகராசா என்பவரது இரண்டு உரப்பைகள் அடங்கிய பொதிகள் தவறிவிட்டன. அப்பைகளில் Tharun C61/2 என அடையாளம் இடப்பட்டுள்ளது. தவறுதலாக மாறி எடுத்தவர்கள் மேற்படி பாடசாலையில் கொடுத்துதவவும்.

(சி/562027)

## இறந்த ஆத்துமாக்கள் திருநாள்

வண்ணை, ஒக். 31

உலகக் கத்தோலிக்கர் நாளை மறுதினம் திங்கட்கிழமை இறந்த ஆத்துமாக்கள் திருநாளை அனுஷ்டிப்பர்.

குடாநாட்டின் சகல இடுகாடுகளிலும் (சேமக்காலை) இறந்தவர்களின் உறவுகள் சென்று மெழுகுதிரி கொழுத்தி, மலர்கள் சாத்தி, சந்தனக் குச்சிகள் ஏத்தி செபமாலை உச்சாடனம் செய்து நினைவு கூருவார்கள்.

இதேவேளை இறந்த உறவினர்களின் ஆத்ம சாந்திக்காக உலர் உணவு, சமைத்த உணவுகளை வயோதிப இல்லங்களுக்கு எடுத்துச்சென்று வழங்குவர்.

அத்துடன் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பாண், பணிஸ், பிஸ்கற் மற்றும் குளிர்பானம், ஐஸ்பழம் வழங்கி நினைவை அனுஷ்டிப்பார்கள்.

நாளை மறுதினம் மாலை 4.30 மணியளவில் யாழ். சேமக்காலையில் அமைந்துள்ள கொஞ்சேஞ்சிமாதா சிற்றாலயத்தில் இறந்த ஆத்துமாக்களுக்கான இரங்கல் திருப்பலியும் ஒப்புக் கொடுத்தலும் இடம்பெறும்.

(160)

அருகிவரும் எமது மரபுவழிக் கலைகளுக்கு புத்துயிர் அளிக்கும் நோக்கோடு

## திருமறைக்கலாமன்றம்

நடத்தும்

# கிராமியக் கலைவிழா

கிராமியக் கலைகள் - கிராமியப் பாடல்கள் - கிராமிய நடனங்கள்
ஒன்றாகச் சங்கமிக்கும் கலைத்திருவிழா

அனுமதி இலவசம்

இடம்: கலைத்தூது கலையகம்
286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

31.10.2009 சனி பி.ப.5.மணி

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பிரதேசக் கலைஞர்கள் வழங்கும்
காவடி, உழவர் நடனம், புரவி நடனம், வேப்பிலை நடனம், அனுமான் நடனம், கும்மி, பொம்மலாட்டம், கோலாட்டம், கரகாட்டம், வில்லிசை.

01.11.2009 ஞாயிறு பி.ப. 2 மணி

பிரதேச செயலகங்கள் மூலமாகத் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் திருமறைக்கலாமன்றத்தால் நடத்தப்பட்ட கிராமியப் பாடல் போட்டிகளின் நிறைவுப் போட்டிகளும் பரிசளிப்பும்

07,08.11.2009 சனி, ஞாயிறு பி.ப.5.மணி

அவிசாவளை, பாணந்துறையைச் சேர்ந்த தென்னிலங்கைத் திருமறைக்கலாமன்றக் கலைஞர்களும் சாவகச்சேரி, நல்லூர், இளவாலை, இணுவில், குருநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த யாழ்.மாவட்டக் கலைஞர்களும் வழங்கும் கிராமிய நடனங்கள்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

திருமறைக்கலாமன்றம், யாழ்ப்பாணம்.

(சி/562023)

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் ஐப்பசித் திங்கள் 15ஆம் நாள் (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிமுதல் 11.45 மணிவரை உள்ள ரேவதி நட்சத்திரமும், சதுர்த்தசி திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் | எமது கனிஷ்ட புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| தயாளன் | மாலினி |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் திருவருள் துணைகொண்டு நீர்வேலி திருமுருகன் திருமண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்:

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு.திருமதி பொ.ஆனந்தநடராஜா | திரு.திருமதி ந.செல்வலிங்கம் |
| குடும்பத்தினர், | குடும்பத்தினர், |
| மூளாய் வீதி, மூளாய். | நீர்வேலி தெற்கு, நீர்வேலி. |

(இதயம் கனிந்த இருவீட்டார் அழைப்பு).

(90468)

## யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி

சுன்னாகம்

# நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும்

காலம்:- 31.10.2009 சனிக்கிழமை காலை 9.00 மணி
இடம்:- ஒரேற்றர் மண்டபம்
தலைவர்:- திரு.ஆறு. திருமுருகன் (அதிபர்) அவர்கள்.

பிரதம விருந்தினர்:- பேராசிரியர் நா. ஞானகுமரன் B.A (Hons) M.Phil, Phd அவர்கள் (கலைப்பீடாதிபதி - யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர் :- வழக்கறிஞர் திரு. செல்லையா தங்கராஜா B.sc, LLB, Advocate அவர்கள் (பழைய மாணவர், ஸ்கந்தவரோதயா கல்லூரி - பேரவை உறுப்பினர், தொழிற்பல்கலைக்கழகம்)
ஆசியுரை:- திரு.க. சிவாஜி அவர்கள் (முன்னாள் அதிபர், ஸ்கந்தவரோதயா கல்லூரி)
நினைவுப்பேருரை :- திரு.சு. பரமநாதன் அவர்கள் (இளைப்பாறிய செயலாளர், மாவட்ட சபை யாழ்.மாவட்டம், தலைவர் ஸ்கந்தா பழைய மாணவர்சங்கம்)
நிறைவுரை:- திரு.சி. மகேந்திரன் (பிரதி அதிபர்) அவர்கள்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம். 0212240230

(90462)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - பாகிஸ்தான் பேச்சுகளை மீளத் தொடங்க அமெரிக்கா உதவும்

## இஸ்லாமாபாத்தில் அமெ. வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி

இஸ்லாமாபாத், ஒக். 31

காஷ்மீர் பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு சுமுகத் தீர்வு காண்பதற்கு இந்தியா - பாகிஸ்தான் இடையே மீண்டும் பேச்சுகள் தொடர அமெரிக்கா உதவும் என பாகிஸ்தானுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பிரச்சினைகளை இரு தரப்பு பேச்சுகள் மூலமே தீர்க்கவேண்டும். இதில் அமெரிக்கா உறுதியாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு நாள்கள் விஜயத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் வந்தடைந்த ஹிலாரி கிளின்ரன், பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானியை இஸ்லாமாபாத்தில் சந்தித்துப் பேசினார்.

அப்போது, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே உள்ள பிரச்சினைகளுக்கு சுமுகத் தீர்வுகாண அமெரிக்கா மத்தியஸ்தம் செய்யவேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் கிலானி கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த கிளின்ரன், ''இரு நாடுகளும் பேச்சுகளை மீண்டும் தொடங்க அமெரிக்கா அனைத்து உதவிகளையும் செய்யும்'' என உறுதியளித்தார்.

பிரதமர் கிலானியை கிளின்ரன் இஸ்லாமாபாத்தில் புதன்கிழமை சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு தொடர்பாக பாகிஸ்தான் அரசு தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

காஷ்மீர் பிரச்சினை, நதிநீர்ப் பங்கீடு ஆகியவை உட்பட இந்தியாவுடனான பிரச்சினைகளுக்கு சுமுகத் தீர்வுகாண அமெரிக்கா உதவவேண்டும் என்றும் கிலானி இச்சந்திப்பில் கேட்டுக்கொண்டார்.

இந்தப் பிராந்தியத்தில் இராணுவ சமநிலையை பேணும் வகையில் இந்தியாவுக்கு இணையாக பாகிஸ்தானுக்கும் உரிய இராணுவ உதவிகள் அளிக்கப்படவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.


இந்தியாவுடன் மீண்டும் பேச்சுகளைத் தொடர பிரதமர் கிலானி எடுத்துவரும் முயற்சிகளை அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி பாராட்டினார்.

''இந்தியா, பாகிஸ்தான் இடையே உள்ள பிரச்சினைகள் சிக்கலானவை. இதை அறிவேன். இருப்பினும், மீண்டும் பேச்சுகளைத் தொடங்க அமெரிக்கா அனைத்து உதவிகளையும் அளிக்கும்'' என்றும் ஹிலாரி மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டார்.

மறுதினமான வியாழக்கிழமை லாகூரிலுள்ள கல்லூரி மாணவர்களுடன் ஹிலாரி கிளின்ரன் கலந்துரையாடினார்.

பாகிஸ்தானின் பொருளாதாரம் வளர்ச்சி பெறவேண்டுமானால், இந்தியாவுடனான பிரச்சினைகளைப் பேசி சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என அவர் உரையாடலின்போது தெரிவித்துக்கொண்டார்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜோயல் வால் என்ற இளைஞர், தான் உருவாக்கிய உலகின் மிகப் பெரிய 'றப்பர் பட்டி' பந்து மீது சாய்ந்து நிற்கிறார். பல்வேறு அளவு றப்பர் பட்டிகளைச் சேகரித்து 6 ஆண்டுகளாக கவனமாக இழுத்துப் போட்டு ஜோயல் செய்த இந்தப் பந்து, கின்னஸில் இடம்பிடித்துள்ளது.



# பொருளாதாரப் பின்னடைவால் விவாகரத்துகளில் பெரும் வீழ்ச்சி

## அமெரிக்க ஆய்வில் தகவல்

வாஷிங்ரன், ஒக். 31

அமெரிக்காவில் பொருளாதார பின்னடைவு காரணமாக விவாகரத்துகள் குறைந்துவிட்டன என சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அந்தச் சங்கத் தின் ஆயிரத்து 600 உறுப்பினர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது. இதில் பாதிக்கு மேற்பட்டவர்கள் விவாகரத்து வழக்குகள் குறைந்துவிட்டன என தெரிவித்துள்ளனர்.

2008 ஆம் ஆண்டின் கடைசி 3 மாதங்களிலிருந்து விவாகரத்து கோருபவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது என சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளார்கள்.

பொருளாதார பின்னடைவு காரணமாக அநேகருக்கு வேலை இல்லை. வேலை செய்வோரின் சம்பளமும் குறைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக குடும்பச் செலவுகளை சமாளிப்பதற்கே மக்கள் திணறிக்கொண்டிருக்கின்றனர். இந் நிலையில், அவர்களிடம் விவாகரத்துக்காக செலவழிக்க பணமில்லை என ஆய்வில் தெரியவந்துள்ளது.

பணமின்மையால் ஆண்கள் விவாகரத்துக்குத் தயாராக இல்லை. அதுபோல, பொருளாதார தட்டுப்பாடுள்ள இந்த சூழ் நிலையில் விவாகரத்து கோரினால் குறைந்த அளவே ஜீவனாம்சம் கிடைக்கும் என பெண்களும் விவாகரத்து கோர தயங்குகிறார்கள். இந்தக் காரணங்களால் விவாகரத்துகள் குறைந்துள்ளன என்றும் தெரியவந்துள்ளது.

# பயங்கரவாதச் செயற்பாட்டுக்கு உதவிய அல் - குவைதா ஆதரவாளருக்குச் சிறை

## அமெரிக்க மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு

வாஷிங்ரன், ஒக். 31

பயங்கரவாதத்துக்குப் பொருள்கள் ரீதியாக உதவி வந்தவர் என்ற குற்றச்சாட்டின் பேரில், அல்-குவைதா ஆதரவாளர் அலி அல்-மாரி என்பவருக்கு அமெரிக்க மாவட்ட நீதிமன்றமொன்று எட்டு வருட காலச் சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

2001 ஆம் வருட செப்ரெம்பர் 11 ஆம் திகதி, அமெரிக்காவில் அல்-குவைதா மேற்கொண்ட தாக்குதலையடுத்து, இவர் கைது செய்யப்பட்டு முதல் இரு மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

செப்ரெம்பர் 11 ஆம் திகதிய தாக்குதலுக்கு மூளைசாலியாகச் செயற்பட்ட காலித் ஷேக் மொஹம்மத் என்பவரை, தான் முறையாகச் சந்தித்து வந்தவர் என இவர் பூர்வாங்க விசாரணையில் ஒத்துக்கொண்டார். இதையடுத்து, இவர் ஆறு வருட காலம் அமெரிக்காவில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

எனினும், மே மாதம் இவர் குற்றவாளியாகக் காணப்பட்டார். இவர் சவூதி பிரஜையாகவும், கட்டார் பிரஜையாகவும் இருந்துள்ளார். இவர் தொடர்பான வழக்கு வியாழக்கிழமை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிவான் மைக்கல் மிம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதவான் தமது தீர்ப்பில், வாய்ப்பு இருக்குமானால் அலி-மாரி அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தத் தயங்கமாட்டார். அதிகபட்சமாக இவருக்கு 15 வருட காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும். எனினும், தடுப்புக்காவலின்போது இவர் கடூரமாக நடத்தப்பட்டுள்ளார். இதையொட்டி எட்டு வருடங்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது எனக் குறிப்பிட்டார்.

அல்-மாரி வியாழக்கிழமை நீதிமன்றத்தில் கண்ணீர் விட்டுக் கதறினார். அத்துடன் தான் அல்-குவைதாவுக்கு ஒரு போதும் உதவவில்லை என்றும் தெரிவித்துக்கொண்டார்.

எனினும், அல்-குவைதா முகாம்களில் தாம் பயிற்சி பெற்றவர் என்பதை இவர் ஒத்துக்கொண்டார். 1998 ஆம் ஆண்டுக்கும் 2001 ஆம் ஆண்டுக்குமிடையில், பாகிஸ்தானிலிருந்த அல்-குவைதா பாது காப்பு முகாம்களில் தாம் தங்கியிருந்தார் என்றும் தெரிவித்துக்கொண்டார்.

# பாகிஸ்தானுக்கு ரூ.34,500 கோடி நிதி உதவி நிபந்தனைகளுடன் வழங்குகிறது அமெ.

வாஷிங்ரன், ஒக். 31

பாகிஸ்தானுக்கு 2010 ஆம் ஆண்டுக்கான இராணுவ நிதி உதவியாக இலங்கை நாணயப்படி சுமார் ரூபா 34 ஆயிரத்து 500 கோடியை அமெரிக்கா வழங்க இருக்கிறது. இதற்கான அனுமதியை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வழங்கியுள்ளார்.

அமெரிக்க இராணுவத்துக்கு 2010 ஆம் ஆண்டுக்காக 102 இலட்சம் கோடி ரூபாவுக்கு பட்ஜெட் போடப்பட்டுள்ளது. இந்த பட்ஜெட் மசோதாவில் ஒபாமா வியாழக்கிழமை கையெழுத்திட்டார். இந்த பட்ஜெட்டில் பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி வழங்குவதற்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு இராணுவ உதவியாக 34 ஆயிரத்து 500 கோடி ரூபா வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கும் சேர்த்துத்தான் அவர் அனுமதி கொடுத்துள்ளார்.

இந்த உதவியில் 2 அம்சங்கள் உள்ளன. ஒன்று, கூட்டணி ஆதரவு நிதி. 2 ஆவது தீவிரவாத தடுப்பு நிதி. கூட்டணி ஆதரவு நிதி என்பது கடந்த காலத்தில் தீவிரவாதத்தை ஒடுக்குவதற்காக பாகிஸ்தான் செலவழித்த தொகையை ஈடுகட்டும் வகையில் வழங்கப்படுவது. இதற்காக 24 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்தது தீவிரவாதத்தை ஒடுக்குவதற்காக அமெரிக்கா அளிக்கும் நிதி ஆகும். இதற்காக 10 ஆயிரத்து 500 கோடி ரூபா வழங்கப்படுகிறது.

இந்த நிதியை வழங்குவதோடு, அதைப் பெறுவதற்கு ஒரு நிபந்தனையையும் அமெரிக்கா விதித்துள்ளது. இந்த நிதியை வேறு பயன்பாட்டுக்காக (இந்தியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்காக ஆயுதங்களைக் குவிப்பதற்காக) திசை திருப்பக்கூடாது. அதன் மூலம் இராணுவச் சமநிலை பிறழ வகை செய்யக்கூடாது என்பது அதன் நிபந்தனை ஆகும்.

பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் நிதி உதவியை பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிரான போருக்காக மரபு ரீதியான ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதற்காகப் பயன்படுத்தலாம் என இந்தியா கருதுகிறது. இந்தியாவின் இந்த அச்சத்தைக் கருத்திற்கொண்டுதான் இந்த நிபந்தனையை அமெரிக்கா சேர்த்துள்ளது.

# உலகின் வயோதிப நாய்!



லண்டன், ஒக். 31

உலகின் மிகவும் வயதான நாயாக ஓட்டோ ஜோன்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இது இடம்பெற்றுள்ளது.

• பிரிட்டனில் காணப்படும் டாக்ஷந்த் டெரியர் இனத்தைச் சேர்ந்தது ஓட்டோ ஜோன்ஸ். இதன் வயது 20 ஆண்டுகள் 8 மாதங்கள். பாலியல் விடயத்தில் இது ஒரு கட்டைப் பிரமச்சாரிதான். உணவுக் கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்ட ஓட்டோ, உலகிலேயே வயதான நாயாக கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன் உரிமையாளர்களான பிரிட்டனில் வசிக்கும் லின், பீட்டர் ஜோன்ஸ் தம்பதியினர், ஓட்டோ பற்றி கூறுகையில், ''ஓட்டோ குட்டியாக இருந்தபோது, ஷ்ராப்ஷைரிலிருந்து கொண்டு வந்து வளர்த்தோம். அதற்கு கொழுப்பு அல்லாத நல்ல சத்தான உணவு வகைகளையே வழங்குவோம். காய்கறிகளை மிகவும் விரும்பி சாப்பிடும்'' என்றனர்.

''எங்களது தெருவில் விளையாடும் குழந்தைகள், ஓட்டோவுடன் விளையாடுவதை மிகவும் விரும்புவார்கள். இப்போது கூட, முதிய வயதிலும் மிகவும் துடிப்பாக உள்ள இந்த ஆண் நாய், குழந்தைகளுடன் ஓடியாடி விளையாடுகிறது. மிகவும் தைரியமான இந்நாய் எதைக் கண்டும் பயப்பட மாட்டாது'' என்றும் குறிப்பிட்டனர்.

உலக அரங்கில்

# வளமான நாடுகள் பட்டியலில் பின்லாந்துக்கு முதலாமிடம்

## அமெரிக்காவுக்கு 9 ஆவது இடம்

சிங்கப்பூர், ஒக். 31

பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் அடைந்த நாடுகளுக்கான பட்டியலில், பின்லாந்து முதலாமிடத்தைப் பெற்றுள்ளது. 2009 ஆம் ஆண்டுக்கான இப்பட்டியலை லெகாட் இன்ஸ்ரிரியூட் என்னும் நிறுவனம் தயாரித்துள்ளது.

உலக நாடுகளில் பேச்சுரிமை, எழுத்துரிமை, ஆரோக்கியம், நிதி வசதி, வளம் ஆகிய பல்வேறு துறைகளிலும் முன்னணியி லுள்ள நாடு பின்லாந்து என இதற்கான தேர்வில் கண்டறியப்பட்டுள்ளது. அதனால் இப்பட்டியலில் பின்லாந்து முதலிடத்தைப் பெற்றுள்ளது.

சுவிற்சர்லாந்துக்கு 2 ஆவது இடமும், சுவீடனுக்கு 3 ஆவது இடமும், டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளுக்கு 4, 5 ஆவது இடங்களும் இப்பட்டியலில் கிடைத்துள்ளன.

அமெரிக்காவுக்கு 9 ஆவது இடம்தான் கிடைத்துள்ளது. பிரிட்டனுக்கு 12 ஆவது இடமும், கனடாவுக்கு 7 ஆவது இடமும் கிடைத்துள்ளன.

ஜப்பான் [illegible] பட்டியலில் [illegible] 16 ஆவது இடத்திலும், சிங்கப்பூர் 23 ஆவது இடத்திலும், சீனா 75 ஆவது இடத்திலும் உள்ளன.

# சர்கோஷி ஐரோப்பிய ஒன்றிய தலைவரானதும் 6 மாதங்களில் ரூ. 3 ஆயிரத்து 690 கோடி செலவு



பரிஸ், ஒக்.31

ஐரோப்பிய ஒன்றிய கூட்டமைப்பின் தலைவராகவிருந்த 6 மாதங்களில் பிரான்ஸ் ஜனாதிபதி நிகோலஸ் சர்கோஷி ரூபா 3 ஆயிரத்து 690 கோடி செல விட்டுள்ளார் என அந்நாட்டு தணிக்கை அறிக்கை கூறியுள்ளது. இதற்கு நிதி நிபுணர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பல நாடுகள் உள்ளன. அவற்றின் கூட்டமைப்புக்கு 6 மாதங்களுக்கு ஒருமுறை உறுப்பு நாடு ஒன்றின் ஜனாதிபதி, தலைவராக இருப்பார். அதன்படி கடந்த முறை பிரான்ஸ் ஜனாதிபதி சர்கோஷி, ஐரோப்பிய ஒன்றியத் தலைவராகவிருந்தார்.

ஒன்றியம் சார்பில் உச்சி மாநாடுகள், அமைச்சரவை கூட்டங்கள், அரசு விளம்பர நிகழ்ச்சிகள், கொள்கை விளக்க நிகழ்ச்சிகள் ஆகியவை நடைபெறும். அந்த வகையில், இதுவரை தலைவராக இருந்தவர்களில் யாரும் செய்யாத அதிகபட்ச செலவை சர்கோஷி செய்துள்ளார் என ஐரோப்பிய ஒன்றிய தணிக்கை அறிக்கை தெரிவிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமில் உள்ளோரை உடன் விடுவிக்குக; இல்லையேல் போராட்டங்கள் வெடிக்கும்

## இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க கூட்டத்தில் தீர்மானம்

திருச்சி, ஒக். 31

இலங்கையில் முள்வேலி முகாம்களிலுள்ள தமிழர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும். அதற்கு இலங்கை அரசிற்கு, இந்திய அரசு உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும். இல்லையேல் மாபெரும் தொடர் போராட்டங்கள் நடத்தப்படும் - என்று திருச்சியில் நேற்றுமுன்தினம் நடந்த இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்டு வதைபடும் தமிழர்களை விடுவிக்க வலியுறுத்தி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் பிரசாரப் பயணம் தொடங்கப்பட்டது.

தமிழகத்தின் 4 திசைகளிலும் இருந்து தொடங்கிய இந்தப் பிரசாரப் பயணத்தைத் இராமேஸ்வரத்தில் இருந்து ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, சென்னையில் இருந்து பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், கன்னியாகுமரியில் இருந்து இந்தியக் கம்யூனிஸ்ட்டு கட்சியின் மூத்த தலைவர் நல்லக்கண்ணு, கோவையில் இருந்து இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க தலைவர் பழ.நெடுமாறன் ஆகியோர் தலைமையேற்று திருச்சியை நோக்கிப் புறப்பட்டனர்.

திருச்சி வந்து சேர்ந்த அனைவருக்கும் வரவேற்பு கொடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து திருச்சி புத்தூர் 4 ரோட்டில் நேற்றுமுன்தினம் இரவு பொதுக் கூட்டம் நடந்தது. இதில் வைகோ, ராமதாஸ், நல்லக்கண்ணு, தா.பாண்டியன், பழ.நெடுமாறன், ஜி.கே.மணி மற்றும் தலைவர்கள் பேசினார்கள்.

திருச்சியில் நேற்றுமுன்தினம் மாலையில் இருந்தே மழை தூறிக்கொண்டு இருந்தது. இந்த மழையையும் பொருட்படுத்தாது பொதுக்கூட்டம் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

* இலங்கையில் முள்வேலிகளால் சூழப்பட்ட வதை முகாம்களில் சித்திரவதைக்குள்ளாக்கப்படும் மூன்றரை லட்சம் தமிழர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அதற்குரிய அனைத்து நிர்பந்தங்களையும் இலங்கை அரசிற்கு, இந்திய அரசு ஏற்படுத்துவதோடு ஐ.நா. சபையில் இதுதொடர்பாக உரிய அழுத்தத்தை கொடுக்க வேண்டும்.
* இலங்கையில் பருவமழை தொடங்கி விட்ட நிலையில் வதை முகாம்களில் பெரும் ஆபத்துகளை எதிர்நோக்கியுள்ள தமிழ் மக்களை எந்தவித நிபந்தனையும் இன்றி உடனடியாக விடுவிக்க இலங்கை அரசை மத்திய, மாநில அரசுகள் நிர்பந்திக்க வேண்டும்.
* இலங்கையில் வதை முகாம்களில் உள்ள தமிழ் மக்கள் உடனடியாக விடுவிக்கப்படாவிட்டால், அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் தமிழகத்தில் மிகப்பெரிய அளவில் தொடர்போராட்டங்கள் நடத்தப்படும். அந்தப் போராட்டங்கள் தொடர்பாக அமைப்பின் பொறுப்பாளர்கள் ஒன்று கூடி ஆலோசனை நடத்தி போராட்டத் திகதி குறித்து முடிவு செய்வார்கள் என்பன உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கச்சதீவில் இராமேஸ்வரம் மீனவர் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல்?

இராமேஸ்வரம், ஒக். 31

கச்சதீவுக் கடலருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கப்பலால் மோதித் தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த புதனன்று 400 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். கச்சத்தீவு அருகே கடலில் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கைக் கடற்படைக் கப்பல், லீடன் என்பவருக்கு சொந்தமான படகில் மோதியது. இதில் அந்த படகு சேதமடைந்து, உள்ளே தண்ணீர் சென்றது.

இதனால் மீனவர்கள் நடுக்கடலில் தத்தளித்தனர். அப்போது எதிரே வந்த படகில் இருந்த சுப்பிரமணியன் என்பவர், மீனவர்களை மீட்டு அவரது படகில் ஏற்றிக் கொண்டார். மேலும், சேதமடைந்த படகை கயிறு கட்டி இழுத்து வந்தனர். இதையறிந்த மற்றப் படகில் சென்ற மீனவர்களும் பாதியிலே மீன்பிடிக்காமல் திரும்பினர்.

இதுகுறித்து படகோட்டி சுப்பிரமணியன் கூறுகையில் -

இலங்கைக் கடற்படை கப்பலில் வெளிநாட்டுக்காரர்களும் வருகின்றனர். இவர்கள்தான் எங்கள் படகுகள் மீது மோதியும், மீனவர்களைத் தாக்கியும் விரட்டுகின்றனர். இதனால் எங்கள் எதிர்காலமே கேள்விக் குறியாகியுள்ளது - என்றார்.



முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் இலங்கை அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசிய போது....

# பெற்றோல் கிடங்கில் பயங்கரத் தீ

## 3 பேர் பரிதாபப் பலி; 150 பேர் காயம்

ஜெய்ப்பூர், ஒக். 31

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் இந்தியன் ஓயில் நிறுவனத்துக்கு (ஐ.ஓ.சி.) சொந்தமான பெட்ரோல் கிடங்கில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 3 பேர் பரிதாபமாகப் பலியாகினர். 150 இற்கும் மேற் பட்டோர் காயமடைந்தனர்.

ஜெய்ப்பூரில் ஐ.ஓ.சிக்குச் சொந்தமான பெற்றோல், டீசல் மற்றும் மண் எண்ணெய் சேமிப்புக் கிடங்குகள் 10 உள்ளன. நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் சேமிப்பு கிடங்கிலிருந்து, குழாய்க்கு பெற்றோலை மாற்றிக் கொண்டிருந்தபோது, கசிவு காரணமாக திடீரென தீப்பற்றியது. இதையடுத்து தீ மளமளவென அடுத்தடுத்து கிடங்களுக்கும் பரவியது.

தீயைக் கட்டுப்படுத்த முடியாததால் இராணுவத்தின் உதவி கோரப்பட்டது. இதைத் தொடர்ந்து இராணுவத்தினரும், மாநில தீயணைப்புப் படையினரும் கூட்டாக தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

# ஐ.நா. சான்றிதழுக்குப் பின்னரே ஈழத் தமிழரின் மீள்குடியேற்றம்

## கருணாநிதியைச் சந்தித்த ஆறுமுகன் தொண்டமான் தெரிவிப்பு

சென்னை, ஒக். 31

கண்ணிவெடிகளை அகற்றுவது, மனித நேய அடிப்படையிலான உதவிகளைச் செய்வது குறித்து ஐ.நா. அமைப்பு சான்றிதழ் வழங்கிய பின்னரே இலங்கை முகாம்களில் ஈழத் தமிழர்கள் மீள்குடியமர்த்தப்படுவர் - என்று இலங்கை அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கையில் இளைய சமுதாயத்துக்கு அதிகாரமளித்தல் மற்றும் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத்துறை அமைச்சரான ஆறுமுகன் தொண்டமான், முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் வியாழக்கிழமை மாலை சந்தித்துப் பேசினார்.

பின்னர் அளித்த பேட்டியின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கை முகாம்களில் 3 லட்சம் தமிழர்கள் இருக்கின்றனர் எனக் கூறுகிறார்கள். ஆனால், ஒரு லட்சத்து 86 ஆயிரம் தமிழர்களே அங்கு உள்ளனர். தமிழகத்தில் இருந்து எம்.பிக்கள் குழு வருவதற்கு முன்பே, 24 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் அவர்களது இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தமிழக எம்.பி.க்கள் குழு வந்து சென்ற பின்னர், இதுவரை 57 ஆயிரம் தமிழர்கள் அவர்களின் வாழ்விடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். எம்.பிக்கள் குழுவின் வருகைக்குப் பின்னர் இலங்கைத் தமிழர்களை வாழ்விடங்களுக்கு அனுப்பும் பணி இருமடங்காக அதிகரித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொடுத்த வாழ்த்துச் செய்தியையும், அங்கு நடைபெற்று வரும் புனரமைப்புப் பணிகள் குறித்தும் முதல்வர் கருணாநிதியிடம் விளக்கினேன்.

இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் இந்தியக் குழு ஈடுபட்டு வருகிறது. மேலும் ஒரு குழுவை அனுப்புகிறது என இந்திய அரசு கூறியுள்ளது.

இலங்கைத் தமிழர்களை அவர்களின் வாழ்விடங்களுக்கு அனுப்ப, ஐ.நா.விடம் இருந்து சான்றிதழ் பெறுவது அவசியம். தமிழர்களின் வாழ்விடங்களில் கண்ணிவெடிகள் ஏதுமில்லை என்றும், அவர்களுக்கு அடிப்படை வசதிகள், வருமானத்துக்கான வழி போன்றவை ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன என்றும் அகதிகள் நல வாழ்வுக்கான ஐ.நா. அமைப்பின் அதிகாரியிடம் இருந்து சான்றிதழ் பெற வேண்டும்.

இப்போது, ஒரு லட்சத்து 86 ஆயிரம் தமிழர்களின் வாழ்விடங்களில் கண்ணிவெடிகளை அகற்றுவதுதான் பிரச்சினையாக உள்ளது. குடியமர்த்தப்பட்ட பின்னர், அவர்கள் தொழில் செய்யவோ, விவசாயம் செய்யவோ உதவி செய்கிறோம்.

இலங்கையில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள மேலும் ரூபா 500 கோடி வழங்குகிறது என இந்திய அரசு கூறியுள்ளது. இதற்கான திட்டத்தை இலங்கை அரசின் சார்பில் கொடுக்கவிருக்கிறோம். எந்தெந்த திட்டங்களுக்கு இந்தப் பணத்தை செலவிடுவது என்பது குறித்து விவாதிக்க இலங்கை அதிகாரிகள் குழு இந்தியா. வரவுள்ளது - என்றார்.

# காஷ்மீர் பிரச்சினை குறித்துப் பேச எந்த நாடும் நிர்ப்பந்திக்க முடியாது

## பிரதமர் மன்மோகன் உறுதி



ஸ்ரீநகர், ஒக். 31

காஷ்மீர் பிரச்சினை பற்றி பேச்சு நடத்த எந்த நாடும் இந்தியாவை நிர்பந்திக்க முடியாது - என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

பிரதமர் மன்மோகன்சிங் காஷ்மீரில் 2 நாட்கள் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றுமுன்தினம் டில்லி புறப்படும் முன்னர் ஸ்ரீநகரில் பேட்டியளித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அப்பேட்டியின் வருமாறு -

கே - காஷ்மீர் பிரச்சினை பற்றி சம்பந்தப்பட்ட அமைப்புகளுடன் பேச்சு நடத்துமாறு உங்கள் அரசுக்கு சர்வதேச நிர்ப்பந்தம் எதுவும் ஏற்பட்டுள்ளதா?

ப - எந்த நிர்ப்பந்தத்தின் பேரிலும் நாங்கள் செயற்படவில்லை. யாரும் எங்களை நிர்ப்பந்திக்கவும் முடியாது.

கே - லிபியா, [illegible] போன்ற நா[illegible] நாடுகள் அமைப்பும் (ஓ.ஐ.சி.) காஷ்மீர் பிரச்சினைக்கு ஆதரவு தெரிவித்து உள்ளனவே?

ப - காஷ்மீர் பிரச்சினைக்காக ஓ.ஐ.சி. அமைப்பு பார்வையாளரை நியமித்திருப்பதற்காக நாங்கள் வருத்தப்படுகிறோம். அந்த அமைப்புக்குக் கண்டனம் தெரிவித்துள்ளோம். காஷ்மீர் தொடர்பான எல்லாப் பிரச்சினைகளுக்கும் உண்மையிலேயே தீர்வுகாண விரும்புகிறோம். பிரச்சினையின் உள் மற்றும் வெளி பரிணாமம் பற்றி பேச்சு நடத்துவோம்.

கே - பாகிஸ்தான் தனது நாட்டில் உள்ள தீவிரவாத முகாம்களை அழிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறீர்கள். இதை [illegible]டன் பேச்சு நடத்துவதற்கான முன் நிபந்தனை என்று எடுத்துக் கொள்ளலாமா?

ப - இது ஒரு முன் நிபந்தனையல்ல.

## இந்தியச் செய்திகள்

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. தீவிரவாதிகள் நாள்தோறும் மக்களின் ஒப்பற்ற உயிர்களைப் பறித்துக் கொண்டே இருந்தால் பேச்சுக்கான சூழ்நிலையை எங்களால் உருவாக்க முடியாது. தீவிரவாத இயக்கங்களை பாகிஸ்தான் கட்டுப்படுத்தாதவரை பேச்சு என்பது முக்கியம் வாய்ந்தாக இருக்காது.

மேலும் கடந்த ஆண்டு நவம்பர் 26இல் மும்பையில் தாக்குதல் நடத்தியவர்கள் மீது பாகிஸ்தான் எடுத்துள்ள நடவடிக்கை திருப்தி அளிப்பதாக இல்லை. குற்றம்சாட்டப்பட்ட அனைவர் மீதும் பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறோம்.

கே - தலிபான் தீவிரவாதிகளுக்கும், பலுசிஸ்தான் பிரிவினைவாதிகளுக்கும் இந்தியா நிதியுதவி அளிக்கிறது என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் குற்றம்சாட்டி உள்ளாரே?

ப - இந்தக் குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை. இவற்றுக்கு ஆதாரம் இல்லை என்பது பாகிஸ்தான் தலைவர்களுக்கே நன்றாகத் தெரியும். நாங்கள் தீவிரவாதத்துக்கு எதிரானவர்கள் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வடக்கில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட 19 ஆம் ஆண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மேயர் திருமதி யோ.பற்குணராசா, மக்கள் மறுமலர்ச்சி முன்னணியின் தலைவர் அப்துல் குத்தூஸ் ஆகியோர் மேடையில் வீற்றிருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் மேல்வரிசைப் படங்களில் காணலாம்.

மக்கள் பணிமன்னத் தலைவரும் யாழ். மாநகர சபை உறுப்பினருமான அல்ஹாஜ் சுபியான் மௌலவி அமைச்சருக்கு பொன்னாடை போர்த்துவதையும் சிறுமி ஒருவர் மேயருக்கு பூச்செண்டு வழங்குவதையும் அமைச்சரும் சுபியானும் உதவிப் பொருள் வழங்குவதையும் நடுவரிசையில் காணலாம்.

மக்கள் மறுமலர்ச்சி முன்னணியின் தலைவர் அப்துல் குத்தூஸ், யாழ். அரச அதிபர், யாழ்.மேயர், தந்தை செல்வா அறக்கட்டளையின் தலைவர் வண.பிதா ஜெபநேசன் அடிகளார், ஒஸ்மானியக் கல்லூரி அதிபர் முபராக் மௌலவி, மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவர் எம்.றெமிடியஸ் ஆகியோர் உரையாற்றுவதையும் கீழ் வரிசைப் படங்களில் காணலாம். *(படங்கள்: நிறோ, உமா)*

# வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட 19 ஆவது நினைவு தின நினைவுகள் அனுஷ்டிப்பு

வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட 19 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டிய ''பலவந்தமான வெளியேற்றமும் கௌரவமான மீள்குடியேற்றமும்'' எனும் தலைப்பிலான நிகழ்வு நேற்று மாலை மக்கள் மறுமலர்ச்சி முன்னணி தலைவர் அல்ஹாச் எம்.எம் அப்துல் ருத்தாஸ் தலைமையில் யாழ்.ஒஸ்மானியா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றினார்.

மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, வணபிதா ஜெபநேசன் அடிகளார், அரச அதிபர் கே.கணேஷ், மக்கள் பணிமனை தலைவர் அல்ஹாச் ஏ.எஸ்.சுபியான், ஒஸ்மானியா கல்லூரி அதிபர் முபராக் மௌலவி, யாழ். மாநகரசபையின் தமிழரசுக் கட்சி முதன்மை உறுப்பினர் றெமிடியஸ் உள்ளிட்டோரும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாநகரமுதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவிற்கு மலர் கொத்து வழங்கியும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வின் இறுதியில் இலங்கை ஜமயத்துல்லா இஸ்லாமிய அமைப்பினரின் ஏற்பாட்டில் மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்களுக்கு உதவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. அமைச்சர் அரச அதிபர் ஆகியோர் இவற்றை வழங்கினர். (அ-14-7)

# அரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம்.ஒக்.31

உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி தேசிய பிரசார பொதுக் கூட்டம் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

''விழுது'' ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வானது அரசியலில் பெண்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் பொருட்டும் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் சட்டத்தில் பெண்களுக்கு 25வீத ஆசன ஒதுக் கீட்டை கோருவதாகவும் அமையவுள்ளது.

இதுவரையில் தென்பகுதியில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கையொப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மேலும் 50 ஆயிரம் ஒப்பங்கள் பெறுவதே இதன் நோக்கம் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (50-10)

# குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற முஸ்லிம்,சிங்கள மக்கள் மீளக்குடியமர ஏற்பாடு செய்யவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் உரை

நல்லூர்.ஒக்.31

சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் இங்கு மீளக்குடியமரக் கூடியதான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதலாவது கூட்டம் மாநகரசபையின் புதிய மண்டபத்தில் ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய போதே அமைச்சர் இப்படிக் கூறினார் .

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

30 வருடங்களுக்கு மேலாக இடம் பெற்று வந்த யுத்தத்தினால் இங்கு ஏற்பட்டுள்ள வடுக்கள் அடையாளங்களைச் சீரமைத்து நகரைக் கட்டியெழுப்பும் பொறுப்புக்கள் சரியான முறையில் இடம்பெறத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இந்தப்பணியில் எல்லோரும் தங்களது செயற்பாட்டால் நான் கூறுவது போல இரண்டு வருடங்களில் இழந்தவற்றைச் சரி செய்து முன்னேற்றப்பாதையில் செல்ல முடியும்.

எதிர்ப்பு அரசியலில் எதனையும் சாதிக்க முடியாது. இலங்கை அரசிய [illegible] கௌரவமான சுதந்திரமான வாழ்க்கையை எட்ட முடியும்.யுத்தத்தின் மூலம் எமக்கு எந்த வகையான பயனும் கிட்டவில்லை. இதுதான் உண்மை.

நான் பெற்ற அனுபவங்கள் ஓர் இணக்கப்பாடான பேச்சுக்கள் மூலம் தான் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மாநகர சபையின் நகரத்தின் எழிலைக் கட்டிக்காக்க உறுதி பூண்டுள்ளதாக மேயர் தன் உரையில் கூறியுள்ளார். எதிர்ப்பு அரசியலினால் நாம் எதையும் சாதிக்க முடியாது. நகரின் வளர்ச்சிக்காக எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புக்களை நல்ல முறையில் செயற்படுத்த மாநகர சபைக்குத் தேவையான உதவிகளை முடிந்த வரை வழங்குவேன்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் மக்கள் சமாதானமாகவும், சுதந்திரமாகவும் வாழ வேண்டும்-என்றார். (1-111)

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.31

அகவொளி இயக்குநரும் குடும்ப உளவள ஆற்றுப்படுத்துனருமாகிய அருட்தந்தை அருட்பணி எஸ். ஜே. இராஜநாயகம் எழுதிய 'குடும்ப ஆற்றுப்படுத்தல்' நூல் வெளியீட்டு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு சென். பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள அகவொளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உலக சுகாதார நிறுவன ஆலோசகரும் இணைப்பாளருமாகிய டாக்டர் என்.சிவராஜாவும் சிறப்பு விருந்தினராக சாந்திகம் நிறுவனத் தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ். வி. சங்கரப்பிள்ளையும் கலந்துகொள்வர். (201)

* * *

வடமராட்சி, ஒக் .31

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் நிக்கொட் நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட புதிய மாடிக்கட்டடத் திறப்பு விழாவும், நிறுவுநர் தின பரிசளிப்பு விழாவும் இன்று மு.ப.10 மணிக்கு அதிபர் ச.திரவியராசா தலைமையில் நடைபெறவுள்ளன.

புதிய கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து மு.ப. 11 மணிக்கு நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும், பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ. உதயகுமார் கலந்து கொள்வார். திருமதி நந்தினி உதயகுமார் பரிசில்களை வழங்குவார். (1-236)

* * *

யாழ்ப்பாணம் ,ஒக்.31

யாழ்.லயன்ஸ் கழகமும் விழிப்புலனற்றோர் சங்கமும் இணைந்து நடத்தும் வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வு இன்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் யாழ் மாவட்ட பிராந்திய முகாமையாளர் சிவகுரு பத்மநாதனும் சிறப்பு விருந்தினர்களாக நவீல்ட் பாடசாலை அதிபர் வி. எஸ். மகேந்திரனும், வைத்திய அதிகாரி திருமதி உதயசீலனும், லயன் பி. ஆர். ரங்கனும் கலந்து [illegible] இசையுடன் விழிப்புலனற்றோர் அழைத்து வரப்பட்டு வெள்ளைப்பிரம்புகள் மற்றும் அன்பளிப்புகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (201)


## நூலக உதவியாளர்கள் தேவை

- நூலக அலுவல்களிலும்மேம்படுத்தலிலும் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
- ஆகக் குறைந்த கல்வித் தகைமை ஜி.சி.ஈ. உயர்தரத்தில் சித்தி
- இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

31.10.2009 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்

நன்றிதழ்கள் சிபார்சு செய்யக்கூடியவரின் பெயர்களையும் உங்கள் விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புங்கள்.

பிரதம ஆசிரியர்,
உதயன் வெளியீட்டகம்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## தன்னார்வப் பணியாளர்களாக பணியாற்ற உங்களுக்கு விருப்பமா? எம்முடன் இணையுங்கள்

தகைமைகள்:
- ✱ க.பொ.த. உயர்தரம் சித்தி
- ✱ உங்களால் சுயமாக எழுத வாசிக்கக்கூடிய ஆங்கில அறிவு
- ✱ அறிக்கைகள் தயாரிக்கக் கூடிய கணனி அறிவு

விண்ணப்ப முடிவு திகதி: 10.11.2009
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

(சி-562035)

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகம்
இல.8, குருசோ வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 021 222 8131, 021 321 5212
மின்னஞ்சல்: info@peacecentre.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிகாமம் நாவலடி முகாமிலிருந்து 404 பேர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம், ஒக்.31

கொடிகாமம் நாவலடி நலன்புரி நிலையத்திலிருந்து 127 குடும்பங்களைச் சேர்ந்த 404பேர் நேற்று சொந்த விருப்பத்தின் பேரில் உறவினர்களுடன் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு விடுவிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## ஜனாதிபதி...,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

11 மணிக்கு சென்றடைவார். பின்னர் அங்கிருந்து வாகனம் ஒன்றில் திருப்பதி மலைக்குச் செல்வார் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பின்னர் அவர் மதியம் 1.30 மணிக்கு திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்வார். அவருக்கு தேவஸ்தானம் சார்பில் சிறப்பான வரவேற்பும் அளிக்கப்பட உள்ளது.

ராஜபக்ஷவின் வருகைக்கு அங்குள்ள தமிழர் அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இதனால் அவருக்கு பலத்த பாதுகாப்பு அளிப்பதற்கு ஆந்திர அரசு முடிவு செய்துள்ளது எனவும் -

ரேணிகுண்டா விமான நிலையத்தில் பெருமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் செல்லும் வழிகள் தோறும் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்படுகிறது. (சி)

## தயா மாஸ்டரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களா என்பது குறித்து புலனாய்வு விசாரணை நடத்தி மன்றுக்கு எதிர்வரும் ஜனவரி 25 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் ரவீந்திர பிரேமரட்ண இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இருவர் மீதான வழக்கும் நேற்று மன்றில் எடுக்கப்பட்டபோது புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் இவர்கள் இருந்த போது அரசுக்கு எதிராகச் செயற்பட்டார்களா என்பது குறித்து தாங்கள் புலனாய்வு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனரென பொலிஸார் தெரிவித்தனர். இப்புலனாய்வு விசாரணையை பூர்த்தி செய்வதற்கு கால அவகாசம் தேவைப்படுகின்றது என்றும் அவர்கள் மேலதிக நீதிவானுக்கு தெரியப்படுத்தினர்.

இதையடுத்து, மேலதிக நீதிவான் இப்புலனாய்வு விசாரணையைப் பூர்த்தி செய்வதற்கு உரிய கால அவகாசம் வழங்கி வழக்கை எதிர்வரும் ஜனவரி 25ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அன்றையதினம் பொலிஸாரின் குறித்த புலனாய்வு அறிக்கையை மன்றுக்கு சமர்பிக்க வேண்டுமென்றும் அவர் உத்தரவிட்டார். (அ-சி)

அறிவாலயா கல்வியகம்
சூராவத்தை, சுன்னாகம்.
தரம்: 4 - 2010 (தற்போது தரம் 3)
மாணவர்களுக்கான வகுப்பு.
ஆரம்பம்: 02.11.2009
திங்கட்கிழமை மு.ப 9 மணி
ஆசிரியர்: இ.தேவகுமார்
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
(90474) நிர்வாகி.

வெளிவந்து விட்டது
பொது அறிவு - 2010
DAIS YEAR BOOK
பொது அறிவு கட்டுரைகள், மிக அண்மைக்கால விடயங்களை உள்ளடக்கியது.
S.L.A.S உட்பட அனைத்து போட்டிப் பரீட்சைக்கும் ஏற்றது.
BY : P. Kamalthasan
கிடைக்குமிடம் - பூபாலசிங்கம், துர்க்கா புத்தகசாலைகள்.
(சி/562040)

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=
(சி/562011)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையை முடித்த பிற்பாடு முஸ்லிம்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினர்.

ஹஜ் பயணத்துக்கான கோட்டாக்களை முஸ்லிம் அமைச்சர்கள் அவர்களின் நண்பர்கள், உறவினர்களான குறிப்பிட்ட சில ஏஜென்ஸிகளுக்கு வழங்கி இருக்கின்றார்கள் என்றும் - இதனால் உண்மையான மார்க்கப்பற்றுடையவர்கள் ஹஜ் யாத்திரை செல்வதற்கான சந்தர்ப்பத்தை இழக்கவேண்டி உள்ளது என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினர். (அ-சி)

## யாழ். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் இருந்து அழைத்துவரப்பட்டவர்கள் வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தவர்கள், அல்லைப்பிட்டி, மண்கும்பான்,குடத்தனை ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் என மூன்று வகையினர் மீள்குடியமர்த்தப்பட்டனர் அல்லது உறவினர், நண்பர்களிடம் ஒப் படைக்கப்பட்டனர் என்று அரச அதி பர் கூறினார்.

முகாம்களில் தங்கியிருந்த 3,810 குடும்பங்களைச் சேர்ந்த 11,287 பேரில் 2,497குடும்பங்களைச் சேர்ந்த 7,052 பேர் மீள்குடியமர்வதற்காகஉறவினர்களிடம்ஒப்படைக்கப்பட்டனர்.

முகாம்களில் இப்போது 1,313 குடும்பங்களைச் சேர்ந்த 4,235 பேரே தங்கியுள்ளனர். அவர்களும் நண்பர்கள், உறவினர்களுடன் சேரவிரும்பினால் அதற்கு வழிசெய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

### சங்கானையைச் சேர்ந்தவர்கள் நேற்று வந்தனர்

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 471 குடும்பங்களைச் சேர்ந்த 1,493 பேர் நேற்றுப் பிற்பகல் வந்து சேர்ந்தனர். அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் வைத்து உறவினர், நண்பர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். நேற்று இரவு தெல்லிப்பழை பிரதேசத்தைச் சேர்ந்த 462 குடும்பங்களைச் சேர்ந்த1452 பேர் வந்து சேர்ந்தனர். அவர்கள் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் வைத்து உறவினர், நண்பர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரசஅதிபர் கே.கணேஷ் செயலக திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து கொண் டனர்.

### பருத்தித்துறையைச் சேர்ந்தோர் இன்று அழைத்து வரப்படுவர்

கரவெட்டி,பருத்தித்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த 2 ஆயிரம் பேர் இன்று யாழ்ப்பாணம் அழைத்துவரப்படுகின்றனர். (அ-1-29)

## நலன்புரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் இம்மாதம் 2 ஆம் திகதி வெளியாகியிருந்தன. எனினும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டப் பாடசாலைகளில் பயின்ற மாணவர்களின் முடிவுகள் வெளியிடப்படவில்லை. பரீட்சை முடிவுகளை சீராக்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக வெளியிடப்படாத முடிவுகள் நேற்றிரவு வெளியாகின.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பயின்ற மாணவர்கள் வவு னியா, யாழ்ப்பாணம், புல்மோட்டை முகாம்களில் தங்கியிருந்து பரீட்சைக்குத் தோற்றிய சகல மாணவர்களுக்கும் வெட்டுப்புள்ளியாக 111 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை -

கிளிநொச்சி மாவட்டத்தில், கிளி நொச்சி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பத்மசிறி கீர்த்திகன் ஆகக் கூடிய நிலையில் 175 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், புதுக்குடியிருப்பு றோ.க. பாடசாலையைச் சேர்ந்த செலஸ்ரீன் சதுர்ஷியா ஆகக் கூடிய நிலை 175 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

இந்த மாவட்டங்களின் முடிவுகள் இன்று வவுனியா கல்வி அலுவலகத்தில் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளால் கையளிக்கப்படவிருக்கின்றன. அவை பின்னர் நலன்புரி நிலையங்களில் உள்ள கல்வி அதிகாரிகள், அதிபர்கள் ஊடாக அறிவிக்கப்படும்.

கிளிநொச்சி மற்றும் மாவட்டப் பரீட்சை முடிவுகள் இன்று இணையத் தளத்தில் வெளிவர உள்ளன.

## கப்பலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தோனேஷியா தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியக் கப்பலில் உள்ள இலங்கையர்கள் அதிலிருந்து இறங்க மறுத்து வருகின்ற நிலையில் இந்தோனேஷியா வின் வெளிவிவகார அமைச்சர் மார்ட்டி நட்டலேகவா இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மக்கள் ஏற்கனவே மிக நெருக்கடியான சூழ்நிலைகளைக் சந்தித்துள்ளனர். கடும் துயரங்களை சந்தித்துள்ளனர் என சுட்டிக் காட்டியுள்ள அவர், பலவந்தமான நடவடிக்கையின் மூலம் இந்த மக்களை இறக்கப்போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தக் கப்பலில் உள்ள அகதிகள் வெளியுலகத்துடன் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் உள்ளனர் என ஆஸ்திரேலியாவின் கிறீன் கட்சியின் செனட்டர் சரா ஹன்சன் யங் தெரிவித்துள்ளார்.

கப்பலில் உள்ளவர்களுக்கு என்ன நடைபெறுகின்றது எனத் தெரியவில்லை என்று ஆஸ்திரேலியா தெரிவிப்பதும் இந்தோனேஷியா சொல்வதும் முரணாக உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் ஓசியானிக் வைகிங் கப்பலில் உள்ள 78 இலங்கையர்களும் தாங்கள் பலவந்தமாக இறக்கப்படலாம் என அஞ்சுகின்றனர் என அவர்களுடன் தொடர்பு கொண்ட ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கையர் ஒருவர் தெரிவித்தனர். (அ-சி)

## அகதிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க 'உதயனு'க்குக் கூறியவை வருமாறு:-

எதிர்வரும் தேர்தல்கள் எவ்வாறு அமைய வேண்டும். அவற்றை நீதியானதும் சுதந்திரமானதுமாக நடத்துவதற்கு எவ்வகையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பது பற்றி நாம் தேர்தல் ஆணையாளருடன் கலந்தாலோசித்தோம்.

அனைத்துத் தேர்தல்களிலும் அரசு, அரச வாகனங்கள், அரச ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்தையும் பயன்படுத்துகிறது. இத்தேர்தல்களிலும் அரசு நிச்சயம் அவ்வாறே செயற்படும். இதைத் தடுத்து நிறுத்த சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாம் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்தோம்.

தேர்தல் காலங்களில் இவ்வாறு அரச சொத்துகளைப் பாவிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாம் வழக்குத் தாக்கல் செய்யவும் தீர்மானித்துள்ளோம்.

முக்கியமாக வன்னி அகதிகள் மீளக்குடியமர்த்தப்படாத நிலையில்தான் தேர்தல்கள் நடக்கப் போகின்றன. அவர்களைப் பார்வையிடுவதற்கு எமக்கு அரசு அனுமதி மறுத்துள்ளது. இந்த நிலையில் அங்கு சென்று எம்மால் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.

அகதி முகாம்களுக்குள் யாருமே செல்ல முடியாத நிலையில் வாக்குச் சாவடிகளை அங்கு அமைத்தால் அரசு வாக்குக் கொள்ளையில் ஈடுபடும். ஆகவே, இந்த அகதிகள் அனைவரையும் மீளக்குடியமர்த்திவிட்டுத் தான் இரு தேர்தல்களையும் நடத்தவேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா அரச அதிபரிடம் தகவல்களைத் திரட்டி வருவதாகத் தேர்தல் ஆணையாளர் எம்மிடம் தெரிவித்தார்.

அடுத்தது, எதிர்வரும் இரு தேர்தல்களையும் கண்காணிக்க கட்டாயம் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் நாம் தேர்தல் ஆணையாளரிடம் முன்வைத்தோம்.

நாம் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுப்பார் என்று தேர்தல் ஆணையாளர் எம்மிடம் உறுதியளித்தார் - என்றார். (அ-சி)

## சமையல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரசபைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். செல்காஸின் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜி.எஸ்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சவேஜ் பிரிட்டனின் 'பினான்சியல் டைம்ஸ்' செய்தித்தாளுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி வித்துள்ளவை வருமாறு:-

''பேச்சுக்கான காலம் முடிவடைந்து விட்டது. இந்தக் கட்டத்தில் இலங்கை தனக்கு சார்பான பிரசாரங்களை மேற்கொள்வதை விடுத்து விவகாரங்களைக் கையாள்வதற்கு முயலவேண்டும் என நாங்கள் ஆலோசனை வழங்குகிறோம்.

இரண்டு வருடங்களாக ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம், இலங்கை 2005 ஆம் ஆண்டு 'ஜி.எஸ்.பி.' வர்த்தகச் சலுகைக்கு விண்ணப்பித்தவேளை தான் கடைப்பிடிப்பதாக உறுதியளித்த அநேக மனித உரிமைப் பிரகடனங்களைப் பின்பற்றாதமை தெரிய வந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கான வர்த்தகச் சலுகையை இடைநிறுத்தும் பட்சத்தில் அந்தச் சலுகையைப் பயன்படுத்தும் 16 நாடுகளில் ஒன்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகவே அமையும்.

மேலும் இது வர்த்தகத்தை மனித உரிமைகளுடன் தொடர்புபடுத்துவது குறித்த பலத்த சர்ச்சைகளுக்கும் வழிவகுக்கும்.

இலங்கையின் பொருளாதாரத்துக்கும் இது பாதிப்பை ஏற்படுத்தும். 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையை இடைநிறுத்தப் போவதாக விடுக்கப்படும் மிரட்டல்களுக்கு அரசியல் நோக்கங்களே காரணம் என இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் வெளிநாட்டு நாணய வருமானத்தில் முதன்மை வகிக்கும் ஆடைத் தொழிற்துறையும் தண்டிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனினும், ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையைத் தான் தண்டிப்பதாகத் தெரிவித்தமையை நிராகரிக்கின்றது.

இலங்கை தான் ஏற்றுக்கொண்ட விடயங்களை மீறிவிட்டது. மனித உரிமை மீறல்கள் குறித்துத் தகவல்கள் கிடைத்ததால் அது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டிய கடப்பாடு எமது சட்டங்களின் கீழ் எமக்கு உள்ளது என்று அவர் தெரிவித்தார். (அ-சி)

IIS CITY CAMPUS
விசேட ஆலோசனைக்காரியாலயம்
world Science day ஐ முன்னிட்டு Ministry of Science and Technology எதிர்வரும் 1ஆம் 2 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடத்தும் விஞ்ஞானக் கண்காட்சியில் எமது விசேட ஆலோசனைக் காரியாலயம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. உயர் கல்வி வேலை வாய்ப்பு தொடர்பான அனைத்து விடயங்களையும் இக்காரியாலயத்திலே பெற்றுக் கொள்ள முடியும்.
IIS CITY CAMPUS
200, SIVAN PANNAI ROAD, JAFFNA.
Tel : 021 222 6060 Fax : 021 222 6933
Web : iiscitycampus.com Email : iiscc@sltnet.lk

S&M Consultant Service, Branch Office
148, Temple Road, Jaffna. (புனிசெவ் முன்பாக)
யாழ். மாணவர்களுக்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் !!!
* நவம்பர் மாதப் பிரவேசத்துக்கான நடவடிக்கைகள் அனைத்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
* விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
* இவ்வருடத்திற்கான இறுதிப்பிரவேசத்தில் இணைந்து இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
* சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!!!
* வார நாள்களில் கைத்தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு நேரம் ஒதுக்கி உடனடியாக நேரடியாக சந்தித்துக் கொள்ளலாம்.
* ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை எந்நேரமும் சந்தித்துக் கொள்ளலாம்.
STUDY IN EUROPE - MBBS/MD
"LAGANSK STATE MEDICAL UNIVERSITY" (UKRAINE - EAST EUROPE) இல் இணைந்து சிறிலங்கா MEDICAL COUNCILலினால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக நீங்களும் வர விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
உடன் தொடர்பு - 0774528818, 0212223818. (சி/562010) 148, கோயில் வீதி,
E-mail : mg1404_2009 @yahoo.com யாழ்ப்பாணம். (புனிசெவ் முன்பாக)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org